வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

பக்கம் 24

பெப்ரவரி 11–17 2015

விலை 30/-

12 FEB 2015




## சம்பந்தரின் சம்பந்தக்கலப்பு

1717 FOLLOW US www.mobitel.lk



மொபிடெல் mTicketing சேவை

365 நாட்களும் 365 இனை அழைத்து
புகையிரத பயணச் சீட்டுக்களை ஒதுக்கிக் கொள்ளுங்கள்

ශ්‍රී ලංකා දුම්රිය සේවය
இலங்கை புகையிரத சேவை

Sri Lanka Telecom
Mobitel

# வென்றால் ஆறு கோடி

தொகுப்பு: கோகுலன்

உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி கிண்ணத்தை வென்றால் 6 கோடி ரூபா வழங்குவதாக இலங்கை அரசு அதிரடிப் பரிசை அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் இணைந்து நடத்தும் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி இந்த மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் 29 ஆம் திகதி நிறைவு காணவுள்ளது.

இதற்காக ரசிகர்கள் மட்டுமல்லாது அணிகளின் வீரர்களும் சிறப்பாக செயல்பட்டு வரலாறு படைக்க தயாராகி வருகின்றன. குறிப்பாக கடந்த கால உலகக்கிண்ண



தொடரில் பின்னடைவை சந்தித்திருந்த அணிகள் சிறப்பாக செயற்பட்ட அணிகளுக்கு நிகராக தமது திறமையை வெளிப்படுத்த தயாராகியுள்ளன.

அது மட்டுமல்லாது கடந்த கால உலகக்கிண்ண போட்டிகளில் சிறப்பாக விளையாடி இறுதிப் போட்டிவரை வந்து வெளியேறிய இலங்கையணி பழிதீர்க்கும் கனவோடு அனுபவ, புதுமுக வீரர்களுடன் களமிறங்குகின்றது.

இந்த் தருணத்தில் உலகக்கிண்ணத்தை வெற்றிகொள்ளும் கனவோடு களமிறங்கும் இலங்கை அணிக்கு அரசு பரிசுத்தொகை வழங்குவதாக அறிவித்துள்ளமை மேலும் ஆர்வத்தை தூண்டியுள்ளது எனலாம்.




# வாழ்த்துக்குப் பதில் எச்சரிக்கை

உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுவதற்காக ஒவ்வொரு அணிகளும் உலகக்கிண்ணப் போட்டியை நடத்தும் அவுஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து நோக்கி புறப்பட்டுள்ளன.


ஒவ்வொரு அணிகளுக்கும் தாய் நாட்டில் இருந்து புறப்படும் போது ரசிகர்களும் விளையாட்டுத்துறை சார்ந்தவர்களும் மற்றும் அரசியல் பிரமுகர்களும் வாழ்த்து தெரிவித்து வழியனுப்பி வைப்பது வழமையான ஒன்று.

மாறாக உலகக்கிண்ண போட்டியில் கலந்து கொள்வதற்காக அண்மையில் அவுஸ்திரேலியா நோக்கி புறப்பட்ட டி. வில்லியர்ஸ் தலைமையிலான தென் ஆபிரிக்க அணி உலக கிண்ண போட்டியில் தோல்வியுடன் திரும்பக்கூடாது என்று அந்த நாட்டின் விளையாட்டுத்துறை அமைச்சர் பிகிலே மலுலா எச்சரித்து வழியனுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வீரர்களுக்கு தெரிவிக்கையில், ரோபோக்களுக்கு எதிராக நீங்கள் விளையாடவில்லை. மனிதர்களுடன் தான் ஆடுகிறீர்கள். எந்த அணியையும் சாதாரணமாக கருதிவிடக்கூடாது. பொறுப்புடன் விளையாடினால் வெற்றிபெறமுடியும் என்பதனால் உலகக் கிண்ண போட்டியில் தோல்விகளை சந்தித்து நாடு திரும்பக்கூடாது என அவர் எச்சரித்து அனுப்பியுள்ளார்.

இந்த எச்சரிக்கையானது உலகின் தலை சிறந்த அணிகளில் ஒன்றான தென் ஆபிரிக்காவுக்கு உலகக் கிண்ணத்தை வெற்றிகொள்ள ஒரு தூண்டுதலாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# அன்டி முர்ரேக்கு திருமணம்



இங்கிலாந்தின் முன்னணி டென்னிஸ் வீரர் அன்டி முர்ரே - சியர்ஸ் திருமணம் எதிர்வரும் வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளதாக பரபரப்பாக பேசப்பட்டு வருகின்றது. அன்டி முர்ரே விளையாடும் போது அரங்கிலிருந்து அவருக்கு ஆதரவு வழங்கிவந்தவர் கிம் சியர்ஸ். 2005 ஆம் ஆண்டு முதல் நெருங்கிப்பழக ஆரம்பித்த இவர்களுக்கு கடந்த நவம்பர் மாதம் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. இந்த நிலையில் ஸ்கொட்லாந்தில் உள்ள முர்ரேவுக்கு சொந்தமான முர்ரே குரோமிக்ஸ் ஹவுசில் எதிர்வரும் ஏப்ரல் 11 ஆம் திகதி திருமணம் நடக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிலாந்தின் நட்சத்திர டென்னிஸ் வீரராகத் திகழும் 27 வயதானஅன்டி முர்ரே இதுவரை யு.எஸ்.(2012), விம்பிள்டன் (2103) என இரண்டு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களைத் தனதாக்கியுள்ளார்.

அதுமட்டுமல்லாது கடந்த 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றபோதிலும் சமீபத்தில் நடைபெற்ற அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் இறுதிப் போட்டியில் செர்பியாவின் ஜோகோவிச்சிடம் வீழ்ந்தார்.

# விற்றுத் தீர்ந்த நுழைவுச்சீட்டு

உலகக்கிண்ண போட்டியில் எதிர்வரும் 15 ஆம் திகதி அடிலெய்ட் மைதானத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டியை கண்டு களிப்பதற்கான நுழைவுசீட்டுக்கள் யாவும் வெறும் 20 நிமிடங்களில் விற்பனையாகி முடிந்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் தீராத பகை வளர்ந்து வரும் நிலையில் உலகக்கிண்ணம் கைவிட்டுப்போனாலும் பரவாயில்லை தமது நாட்டின் வீரத்தை வெளிக்காட்ட வேண்டும் என்ற மனநிலையில் இருநாட்டு வீரர்களும் களமிறங்குவார்கள் என்பதனால் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது.

அடிலெய்ட் மைதானத்தில் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. இப்போட்டிகளுக்கான நுழைவுச்சீட்டுக்கள் யாவும் 20 நிமிடங்களில் விற்பனையாகி முடிந்துள்ளமையால் சுமார் 1.3 பில்லியன் ரசிகர்கள் இப்போட்டியை கண்டு ரசிக்க எதிர்பார்த்திருகின்றனர்.



- ஆசாத்



இனவாதத்தின் அடித்தளத்தில் அரசியல் அதிகாரத்தைக் கட்டி யெழுப்பி அப்பாவி மக்கள் சிந்திய குருதியில் குளித்தெழுந்து சுகம் கண்ட வர்கள் மீண்டும் அப்படி

காரணமாக அரசாங்கத்துக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக் கும் ஏற்பட விருந்த நெருக் கடி தவிர்க்கப் பட்டுள்ளது என்றே கூற வேண்டும். ஆனால் இன வாத அரசியலை மூலதனமாக்க் கொண்டு அதி கார பீடத்தில் ஏறி நாட்டின் சொத்துக்களை கொள்ளையடித் துச் சுவை கண்ட கூட்டம் உறங்கி விடப் போவதில்லை. அவர்கள் ஒரு பாதை அடைக் கப்பட்டால் வேலிகளைப் பிய்த்துக் கொண்டு இன்னுமொரு பாதையை உரு வாக்க தங்களாலான முயற்சி களை மேற்கொள்வார்கள். போராடுவது தோல்வியடைவது,

பூண்ட ஒரு கூட்டம் ஏற்கனவே ஊட்டி வளர்க்கப் பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்பு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அலரி மாளிகையை விட்டு வெளியேறும் போது சிங்கள மக்கள் 57 இலட்சம் வாக்குகளை வழங்கித் தன்னை ஆதரித்தனர் எனவும் தமிழர்களே தன்னைத் தோற்கடித்தனர் என்றும் தெரிவித்தார். அதே கருத்தை அம்பாந்தோட்டையிலும் தனது ஆதரவாளர்கள் மத்தியில் கூறியிருந்தார்.

அவர் தனது குடும்ப சர்வதிகார ஆட்சி காரணமாகவும் மக்கள் விரோத நடவடிக்கைகள் காரணமாகவும் நாட்டை அதளபாதாளத்தில் தள்ளும் வரையிலான ஊழல் மோசடி காரணமாகவே தான் தோற்கடிக்கப்பட்டார் என்பதை மறைத்து தான் சிங்கள மக்களின்



போனதையும் நாம் மறந்து விட முடியாது.

வடக்கில் இப்படியான முறை மீறல்களுக்கு ஏற்கனவே ஈடுபடுத்தப்பட்ட நபர்கள் இப்போதும்தயார் நிலையிலேயே உள்ளனர். கொலை, கொள்ளை, பகிரங்க இடங்களில் வாள் வெட்டுக்கள்,மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தல் எனப் பல்வேறு குற்றங்களை அரசியல் செல்வாக்குடன் மேற்கொண்டு வந்த கூட்டம் இப்போது மிகவும் சிரமத்துக்குள் தள்ளப்பட்டு விட்டது. மண் கொள்ளையும் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டது.

அடுத்த கட்டமாக இவர்கள் இனவாத சக்திகளின் தேவைகளுக்கு ஏற்ப தமிழர்கள் என்ற பேரில் குழப்பங்களில் இறக்கி விடப்பட்டால் ஆச்சரியப்பட்டு விட முடியாது.

குறிப்பாக இராணுவ முகாம்களை அகற்றும் படி மக்கள் நடத்தும் ஜனநாயகப் போராட்டங்கள் ,காணாமற் போனோர் தொடர்பான மக்கள் போராட்டங்கள் என்பவற்றில் சாதாரண மக்களைப் போன்று சில தீய சக்திகள் உட்புகுந்து சில வன்முறைகளை மேற்கொள்ளலாம். இராணுவத்தின் மீதும், பொலிஸார் மீதும் கல்லெறிதல் போன்ற நடவடிக்கைகளில்

# குதறக் காத்திருக்கும் வேட்டை நாய்கள்

ஒரு தருணத்தை உருவாக்க நீட்டிய நாக்குகளுடன் காத்துக் கிடக்கின் றனர். அதே வேளையில் அந்தர மான ஒரு களநிலையை உருவாக்க

மீண்டும் போராடுவது தோல்வி யடைவது, மீண்டும் மீண்டும் போராடுவது தோல்வியடைவது

**போராடுவது தோல்வியடைவது, மீண்டும் போராடுவது தோல்வியடைவது, மீண்டும் மீண்டும் போராடுவது தோல்வி யடைவது இறுதி வெற்றி வரை என்பது மக்களின் நியதி யாகும். அதே வேளையில் போராடுவது தோல்வியடை வது,மீண்டும் போராடுவது தோல்வியடைவது மீண்டும் மீண்டும் போராடுவது தோல்வியடைவது தமது சவக்குழி வரை என்பது பிற்போக்காளர்களின் நியதியாகும்.**

முனைப்புடன் முயற்சிகளில் இறங்கி யுள்ளனர். அதற்கான நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட்டு அந்த இலக்கை நோக்கி காய்கள் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன வெளியிட்ட கருத்துக் கள் மிகவும் அவதானமாகக் கவ னத்தில் எடுக்கப்பட வேண்டியவை யாகும். அதாவது வட மாகாணத் திலுள்ள இராணுவ முகாம்கள் மீது கல்லெறித்தாக்குதல்களை நடத்தி, விடுதலைப்புலிகள் மீண்டும் இராணு வத்துக்கு எதிரான நட வடிக்கைகளில் இறங்கிவிட்டனர் என்ற கருத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி அரசாங்கத்துக்கு எதிராக சிங்கள மக்களைக் கிளர்ந் தெழவைக்கத் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார். இந்த முயற்சியில் சில இராணுவ அதிகாரி களும் இணைந்துள்ளதாகவும் இது தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் பேராபத்து உரிய நேரத் தில் கண்டுபிடிக்கப்படாமை

இறுதி வெற்றி வரை என்பது மக் களின் நியதியாகும். அதே வேளை யில் போராடுவது தோல்வியடை வது,மீண்டும் போராடுவது தோல்வி யடைவது மீண்டும் மீண்டும் போராடுவது தோல்வியடைவது தமது சவக்குழி வரை என்பது பிற்போக்காளர்களின் நியதியாகும்.

இது சீன தேசத்தின் விடுதலை யைப் பெற்றுக் கொடுத்த தலைவர் மாவோ சேதுங்கின் தத்துவ வார்த்தைகளாகும்.

இலங்கையின் அடக்குமுறை அதிகார பீடங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. கடந்த ஜனாதி பதித் தேர்தலின் போது மக்கள் அவர்களுக்கு வழங்கிய தோல் வியை ஏற்றுக் கொள்ளத் தயாராக வில்லை. அவர்கள் மீண்டும் தாம் இழந்து விட்ட அதிகாரங்களை யும், சுகபோகங்களையும் அனு பவிக்க குறுக்கு வழியில் நாக்கை நீட்டிக் காத்திருக்கின்றனர். அதற் கான முயற்சிகளைப் பல முனை களில் முடுக்கி விட்டுள்ளனர். அதற்கு அவர்கள் கையிலெடுத்த பிரதான ஆயுதம் தமிழ் மக்களுக்கு எதிரான இனவெறியாகும். அதற்குத் தயாராக மஞ்சள் அங்கி

ஒப்பற்ற தலைவன் என்பதாலேயே தமிழர்கள் தன்னைத் தோற்கடித்தனர் என்ற அர்த்தப்பட இனவாதத்தைக் கக்கியிருந்தார். இது அவர் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள இனவாத அரசியலுக்கு ஒரு நிலையான அடித்தளம் அமைக்கும் வகையில் போட்ட அத்திவாரமாகும்.

இன்று பெரு மாற்றம் ஏற்பட்ட பின்பு முன்னைய அரசாங்கத்திலிருந்த பலரின் ஊழல் மோசடிகளும் வருமானத்துக்கு மேலாக சொத்து சேர்த்த விபரங்களும் அதிகார துஸ்பிரயோகங்களும், தேசவிரோத நடவடிக்கைகளும் வெளிவர

**குறிப்பாக இராணுவ முகாம்களை அகற்றும் படி மக்கள் நடத்தும் ஜனநாயகப் போராட்டங்கள் ,காணாமற் போனோர் தொடர்பான மக்கள் போராட்டங்கள் என்பவற்றில் சாதாரண மக்களைப் போன்று சில தீய சக்திகள் உட்புகுந்து சில வன்முறைகளை மேற்கொள்ளலாம். இராணு வத்தின் மீதும், பொலிஸார் மீதும் கல்லெறிதல் போன்ற நடவடிக்கை களில் ஈடுபட்டு அவற்றை வன்முறைகளாக மாற்ற முயலலாம். எனவே இந்தப் போராட்டங்களை நடத்துபவர்கள் இந்தத் தீய சக்திகள் பற்றி விழிப்பாக இருக்க வேண்டும்.**

ஆரம்பித்து விட்டன. இவற்றை மூடி மறைக்கவும், மக்களை இவற்றிலிருந்து திசை திருப்பவும் இராணுவ முகாம்கள் மீதான கல்லெறித் தாக்குதல்கள் முடுக்கி விடப்பட இருந்தன என்றே கருத வேண்டியுள்ளது. ஏற்கனவே தேர்தல் முடிந்த பின்பு தென்னிலங்கையில் இப்படி ஒரு வதந்தி பரப்பப்பட்டதும் உடனடியாக இராணுவம் அதை மறுத்து விட்டதால் அது செல்லுபடியாகாமல்

ஈடுபட்டு அவற்றை வன்முறைகளாக மாற்ற முயலலாம். எனவே இந்தப் போராட்டங்களை நடத்துபவர்கள் இந்தத் தீய சக்திகள் பற்றி,விழிப்பாக இருக்க வேண்டும்.

மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற வேட்டை நாய்கள் தமது இனவாத நாக்கை நீட்டிக் காத்திருக்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

- ஏஞ்சலினா ஜோலி,

(ஹொலிவுட் நடிகை, அகதிகளுக்கான ஐ.நா. சபை ஆணையத்தின் சிறப்புத் தூதர், பாலியல் வன்முறைக்கு எதிரான அமைப்பின் இணை நிறுவனர்)



# எல்லோராலும் கைவிடப்பட்டவர்கள்

தமிழில்: சாரி

ஈராக்குக்கு 5 முறை வந்து விட்டேன். 2007-க்குப் பிறகு. இப்போது பார்த்ததைப் போன்ற துயரத்தை இதற்கு முன்னால் பார்த்ததில்லை. ஈராக், சிரியா நாடுகளிலிருந்து வெளியேறிய அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்கள், தற்காலிக வசிப்பிடங்கள் ஆகிய வற்றைப் பார்வையிட்டேன்.

கடந்த 4 ஆண்டுகளாக நடக்கும் சண்டையில் சிரியாவின் மொத்த மக்கள் தொகையான 2.3 கோடியில் கிட்டத்தட்ட பாதிப்பேர் தங்களுடைய வசிப்பிடங்களை விட்டு வெளியேறி விட்டார்கள். ஈராக்கில் பயங்கரவாதிகளின் வன்செயல்களுக்கு அஞ்சி 2 கோடிக்கும் மேற்பட்டவர்கள் வசிப்பிடங்களை விட்டு வெளியேறிவிட்டார்கள். உயிருக்கு அஞ்சி ஓடி வந்துள்ள இந்த அகதிகள், மிகவும் கொடூரமான பயங்கரங்களை நேரில் பார்த்தவர்கள். அவர்களுடைய குழந்தைகளின் படிப்பு அவ்வளவுதான். வாழ்வதற்கு வழி தெரியாமல் அனைவரும் திண்டாடுகிறார்கள். நாலா புறங்களிலும் பயங்கரவாதமெனும் கொடூரம்.

கடந்த சில ஆண்டுகளாகவே அகதி முகாம்களைப் பார்த்துவருகிறேன். கூடாரத்தில் அமர்ந்து அகதிகளின் சோகக் கதைகளைக் கேட்கிறேன். என்னால் முடிந்த அளவுக்கு ஆறுதல் சொல்கிறேன், அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டப் பார்க்கிறேன். அவர்களுடைய துயரங்களிலே நானும் பங்கு கொள்கிறேன் என்ற உணர்வை ஏற்படுத்தவும், என்னால் முய ன்ற அளவுக்கு வழிகாட்டவும் விரும்புகிறேன். இந்த முறை அகதிகளின் துயரங்களைக் கேட்டு வாயடைத்துப் போனேன்.

## என் மகள் எங்கே?

என்னுடைய மகளை ஐ.எஸ். படை யினர் பிடித்து வைத்துக்கொண்டு, பாலியல் ரீதியாக தினம்தினம் சித்திரவதை செய்கிறார்கள். அவளை விட்டுவிட்டுத் தனியாக இங்கு முகாமில் இருப்பதை நான் விரும் பவில்லை. என் மகள் துயரப் பட்டாலும் என் கண் முன்னால் இருப்பதையே விரும்புகிறேன். நானும் அங்கு இருப்பது என் றால் என்னவென்று தெரியும். என்னையும் உடல் ரீதியாகப் பலாத்காரம் செய்து சீரழிப்பார்கள். என் மகளுக்கருகில் இருக்கிறேன் என்ற ஆறுதலாவது எனக்கு மிஞ்சியிருக்கும் என்று ஒரு தாய் கண்ணீர் பொங்கிவரக் கதறியபோது என்ன சொல்லித் தேற்று வது? நானும் என்னைச் சேர்ந்தவர்களும் ஒரு கிடங்கில் அடைக்கப்பட்டோம். திடீரென ஆள்கள் வருவார்கள், ஒரே சமயத்தில் எங்களில் 3 பேரை இழுத்துக் கொண்டு போய் பாலியல்ரீதியாகக் கொடுமைப் படுத்துவார்கள். எங்களைத் தேடிக் கொண்டு என்னுடைய அண்ணன் வந்தார். அவரைப் பார்த்ததும் பயங்கரவாதிகள் சுட்டுக்கொன்றுவிட்டார்கள் என்று 13 வயதுச் சிறுமி அழுகையும் கோபமுமாகச் சொல்லித்தீர்த்தாள். அவளிடம் என்ன பேச முடியும்?

அடுத்த கூடாரத்தில் 8 குழந்தைகள் மட்டும் இருந்தார்கள். அவர்களுடைய அப்பாவைக் கொன்றுவிட்டார்கள். அம்மா எங்கோ இழுத்துச் செல்லப்பட்டார். 7 குழந்தைகளுக்கும் மூத்தவனான 19 வயதுப் பையன்தான் இப்போது அவர்களுக்கு அம்மா, அப்பா எல்லாம். உனக்குத்தான் இப்போது எல்லாப் பொறுப்பும் என்று நான் சொன்னவுடன் அந்தச் சிறுவன் சோகத்துடன் புன்னகைத்தான். சற்றே அஞ்சிய நிலையில் இருந்த தனது குட்டித் தங்கையைத் தேற்றும்விதமாக அவளு டைய தோளில் கைபோட்டு அருகில் அணைத்துக் கொண்டான். இவர்களுக்கு உதவ என்னை விட்டுவைத்ததற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன் என்றான். அவனும் அவனுடைய உடன் பிறப்புகளும் எதிர்காலம் நல்லதாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள். எவ்வ ளவு துயரம் வந்தாலும், அதைக் கடவுளின் துணையுடன் வென்றுவிட முடியும் என்று நினைக்கிறார்கள்.

## பசி, பட்டினி, கொலை

எத்தனை லட்சம் மக்கள் பசி, பட்டினி, படுகொலைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். பெண்களுக்கு நேரிட்டிருக்கும் துயரம் சொல்லி மாளாது. பசியாலும் நோயாலும் வாடும் குழந்தைகளின் முகங்களை நேரில் பார்க்க முடியவில்லை. குழந்தைகள் அச்சமும் அவ நம்பிக்கையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

நாம் அவர்களைக் கைவிட்டுவிட்டோம் என்று அவர்கள் நினைத்தால், அதற்காக அவர்களைக் குறை சொல்ல முடியுமா? உண்மையும் அதுதானே? ஜெனீவா மேற்கொண்ட முயற்சி ஓராண்டுக்கு முன்னால் தோல்வியுற்ற பிறகு, போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் ஒரு முன்னேற்றமும் இல்லையே? சிரியா பற்றி எரிகிறது. ஈராக்கின் பல பகுதிகளில் இன்னமும் கடும் சண்டை நடந்து வருகிறது. இந்த அகதிகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஏராளமான நாடுகள் தங்களுடைய கதவுகளை அடைத்துவிட்டன. அவர்கள் இப்போது போவதற்கே இடமில்லாமல் நிர்க்கதியாகத் தவிக்கிறார்கள்.

## அகதிகள் வெடிப்பு

சிரியாவின் பக்கத்து நாடுகளில் இப்போது 40 லட்சம் சிரியர்கள் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளார்கள். ஜோர்டானின் மக்கள் தொகையில் 10% இப்போது சிரியர்கள்தான். லெபனானில் 25% சிரியர்கள்தான். அவர்களுக்கு உணவு, குடிநீர், தங்க இடம், உடுக்க உடை, கல்வி, சுகாதார வசதி, வேலை ஆகிய அனைத்தும் தேவை. இதை அவர்களுக்கு வழங்கினால், தன்னுடைய சொந்த மக்க ளுக்குத் தருவதற்கு லெபனானிடம் அதிகம் இருக்காது. எவ்வளவு பெரிய பணக் கார நாடாக இருந்தாலும், இப்படி அகதிகள் படையெடுப்பை எதிர்கொள்ள நேரிட்டால் நொறுங்கிப் போய்விடும்.

புதிதாக இருவர் சந்தித்துக் கொண் டால், குண்டுவீச்சு பற்றியும் திடீரென்று பயங்கரவாதிகள் வீடு புகுந்து வீட்டில் இருந்தவர்களைச் சரமாரியாகச் சுட்டுக் கொன்றது பற்றியும், இளம் பெண்களைத் துப்பாக்கி முனையில் தூக்கிச் சென் றது பற்றியும் தான் பேசிக்கொள்கிறார்கள். இதையெல்லாம் கேட்கும்போது, நம் நிலைமை என்ன என்று சிந்திக்கத் தோன்றுகிறது. இதெல்லாம் எங்கோ தொலைவில் நடக்கிற பயங்கரங்கள், நமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று முகத்தைத் திருப்பிக் கொண்டுவிட முடியாது.

## சர்வதேசச் சமூகத்தின் லட்சணம்

லட்சக் கணக்கான அகதிகளின் நல்வாழ்வு, மத்தியக் கிழக்கின் எதிர்காலம் மட்டுமே இப்போதைய பிரச்சினைகள் அல்ல. சர்வதேச நாடுகளின் அமைப்புகள் என்ன செய் கின்றன? மனித உரிமைகளைக் காப்போம் என்று நாம் கூட்டாக எடுத்துக் கொண்ட உறுதிமொழிக்குப் பொருள் என்ன? சிரியாவிலும் ஈராக்கிலும் அன்றாடம் ஆயிரக் கணக்கானோர் சுட்டுக்கொல்லப் படவும், லட்சக் கணக்கானோர் வீடு, வாசல்களை இழந்து முன்பின் தெரியாத இடங்களுக்குப் பிச்சைக் காரர்களாக ஓடவும், பெண்களும் சிறுமிகளும் பாலியல்ரீதியில் சூறையாடப் படுவதற்கும் காரணமாக இருக்கும் இந்த அராஜகத்தை நாம் எப்படி முடிவுக்குக் கொண்டு வரப்போகிறோம்?

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, ஐக்கிய நாடுகள் சபை அகதிகள் முகமையை ஏற்படுத்தியதற்குக் காரணம், அந்தப் போரில் இடம் பெயர்ந்த, வீடுவாசலை இழந்த மக்கள் விரைவாகத் தங்களுடைய நாடுகளுக்கும் சொந்த ஊர்களுக்கும் சென்று இயல்பு வாழ்க் கையை மீண்டும் தொடங்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆண்டு தோறும் பல்வேறு நாடுகளிலிருந்து அகதிகளாக வெளியேறும் மக்களுக்குக் கூடாரம் அமைத்துக்கொடுத்து துணி, மருந்துகள் வாங்கித்தந்து 3 வேளையும் சாப்பாடு போடுவதற்காக அல்ல. அப்படிச் செய்தால், இந்தக் குழந்தைகள் நாடற்ற வர்களாக நிரந்தரமாகத் திரிய நேரும். அந்தக் குடும்பங்கள் தங்களுடைய வீடுகளுக்கே திரும்ப முடியாத நிலைமை ஏற்படும். அந்த நாடுகளில் அமைதியே ஏற்படாது. துரதிர்ஷ்டவசமாக இன்றைக்கு அதுதான் நடக்கிறது. 5.1 கோடி மக்கள் உலகம் முழுவதுமே ஏதாவதொரு நாட்டிலிருந்து வெளியேறி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அரசியல் புகலிடம் தேடியும் உயிருக்குப் பாதுகாப்பு வேண்டியும் தங்கியிருக்கிறார்கள். உலக வரலாற்றில் இப்போதிருக்கும் அளவுக்கு அகதிகள் முன்பு எப்போதும் இருந்ததில்லை. லட்சக் கணக்கான அகதிகளை வைத்துக் கொண்டு பராமரிக்க முடியாமல் திண்டாடும் சிரியாவின் பக்கத்து நாடுகளுக்கு சர்வதேச உதவி தேவைப்படுகிறது.

ஐ.நா. சபை விடுக்கும் மனிதாபிமான கோரிக்கைகளை ஏற்று நன் கொடை தருவோர் எண்ணிக்கை குறைந்து விட்டது. இந்த வளையங்களைத் தாண்டி உள்ள நாடுகள் அகதிகளைத் தங்கள் நாட்டில் ஏற்று மறுவாழ்வு அளிக்க வேண்டும். குறைந்த பட்சம், சித்தரவதை களுக்கும் பாலியல் வன்முறைகளுக்கும் ஆளானவர் களுக்காவது கருணை காட்ட வேண்டும். சமாதானம் ஏற்பட சர்வதேசச் சமூகம் வழிகாண வேண்டும். நம்முடைய தார்மிக விழுமியங்களை நம்முடைய வீட்டுக்குள், நம்முடைய நாட்டுக்குள், பத்திரிகைகளின் கட்டுரைகளில், கடிதங் களில் மட்டும் காட்டினால் போதாது. மத்தியக் கிழக்கிலும், சீரழிக்கப்பட்டுவிட்ட சிரியாவின் நகரங்களிலும் இந்த விழுமியங்கள் காப்பாற்றப்பட வேண்டும். அதற்கு நம் முடைய உதவிகள் குவிய வேண்டும்.

# சம்பந்தரின் சம்பந்தக்கலப்பு

- ஹரிஷ்

இலங்கையின் சுதந்திர தின நிழ்வுகளில் தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்கள் கலந்து கொள்வதில்லை என்ற வழக்கைத்தை தகர்த்து, நல் லெண்ணத்தை காட்டுகிறோம் என கூறி தமிழ் மக்களின் மனதை ஆத்திரத்தை அதிகமாக்கியிருக்கிறார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன். கட்சி யின் முடிவுக்கு மாறாக , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற திமிரில் சம்பந் தன் மேற் கொண்ட இந்த செயற்பாடு சரியா னதா ? என்பதே இப்போது பலரினதும் விவாதப்பொருளாகியிருக்கின்றது.

**ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இன்னமும் சிறையில் வாடுகையில் - எந்த வித விசாரணையும் இன்றி கால வரையின்றி அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கையில்- அவர்களை விடுவிக்க எந்த வித உருப்படியான நடவடிக்கையிலும் புதிய அரசு ஈடுபடாமல் இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலையில் எந்த நல்லெண்ணத்துக்காக சம்பந்தன் மட்டும் தென்னிலங்கையின் சுதந்திரதினநிகழ்வில் கலந்துகொண்டார்?**

சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொண்டு , அங்கு தமிழ் மக்களை முள்ளிவாய்க்காலில் கொன்றுகுவித்த சிங்கள ஆயுத படைகளின் அணிவகுப்பு மரியாதையையும் வீர தீர சாகசங்களையும் சம்பந்தனும், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் கண்ணாரக் கண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் தமது பிரச்சினைகள் இன்னும் தீராமல் இருக்கிறதே என்று ஏக்கத்துடன் இருக்கிறார்கள். சொந்த இடத்துக்குப் போகவேண்டும் என்றும், காணாமற் போன உறவுகளை மீட்டுத்தருமாறும் அவர்களது போராட்டங்கள் தொடர்ந்தபடியேதான் இருக்கின்றன.இந்தநிலையைச் சற்றும் சிந்திக்காமல் தமிழினத்தின் அதிகளவு வாக்குகளைப் பெற்ற கட்சியொன்றின் தலைவரும், அந்தக் கட்சிக்கு மக்கள் வழங்கிய வாக்குகளால் அதிர்ஷ்டவசமாக நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரனும் இலங்கை அரசின் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டமை தமிழ் மக்களிடையே பேரதிர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது.

வழமையாகத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கட்சிகள் கூடி ஒரு விடயம் தொடர்பில் கலந்தாலோசித்து அதன்படி செயற்படுவது தான் கட்சியின் மரபு. இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலின் போதுகூட மைத்திரிக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என சுமார் ஒரு கிழமையாக ஆலோசித்தே தமிழ் தேசிய கூட்டமைப்பு தன் முடிவை அறிவித்திருந்தது. எனினும் இந்த முடிவுக்கு மாறாக ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற தனது தனிப்பட்ட முடிவை பகிரங்கமாக அறிவித்தமைக்காக மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனை கட்சியில் இருந்தே கூட்டமைப்பு இடைநிறுத்தியுள் ளது. இதேபோன்று கூட்டமைப்பினர் ஒன்றுகூடி, மைத்திரி அரசின் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் பங்குகொள்வதில்லை என்று முடிவெடுத்திருந்தன.ஆனால் அதற்கு மாறாக இப்போது சம்பந்தன் மட்டும் கட்சியின் முடிவை உதறித் தள்ளி விட்டு, சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் பங்குகொண்டமை எந்தளவு நியாயம்? இப்படி தமிழ் மக்களின் உணர்வுகளை மிதித்து விட்டு தன்னிச்சையாக இலங்கை யின் சுதந்திர தினக் களியாட்டங்களில் கலந்துகொண்டதன் மூலம் 1972 ஆம் ஆண்டுக்கு பின் இலங்கையின் சுதந்திர தினத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தலைவர் என்ற பெருமையையும் சம்பந்தன் பெற்றிருக்கிறார் .

தமிழ் மக்களின் நிம்மதியான, கௌரவமான வாழ்வுரிமைக்கான போராட்டம் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் உயிர் தியாகத்தால் முள்ளிவாய்க்காலில் ஆயுத மௌனத்தோடு வந்து நிற்கிறது. தமிழ் மக்களின் கௌரவமான, நிம்மதியான வாழ்வுக்காக போராடி, மார்புகளில் குண்டுகளைத் தாங்கி உயிர் நீத்த ஆயிரக்கணக்கான மாவீரர்களின் மூச்சுக்காற்று தமிழ்த் தேசம் விடுதலை அடையுமா? தமது மக்கள் சொந்த இடங்களில் சென்று நிம்மதியாக வாழ முடியுமா என்ற அவாவோடு தேசம் எங்கும் சுற்றி சுழன்று கொண்டே இருக்கின்றது. எமது தேசத்தின் விடுதலைக்காகப் போராடிய ஆயிரக்கணக்கான மாவீரர்கள் இன்னும் தாயகம் எங்கும் சிதைக்கப்பட்ட கல்லறைகளுக்குள்ளே வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். ஆனால் அவர்களின் கனவுகளை உதாசீனப்படுத்தும் வகையில் சம்பந் தன் முன்னெடுத்த இந்த நடவடிக்கை தமிழ் மக்களின் மனதில் ஆத்திரத்தை இன்னும் அதிகமாக்கியிருக்கிறது.

போர் மேகங்கள் சூழ்ந்திருந்த பொழுதுகளில் தலைநகருக்கு தொழில் நிமித்தமும் கல்வி கற்கவும் வந்த ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களும், இறுதிப்போரில் சரணடைந்த அல்லது பிடிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளும் தடுப்பு முகாம்களிலும், இரகசிய இடங்களிலும் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் . இதைவிடப் பயங்கரவாதக் குற்றச்சாட்டின் பெயரில் தமிழ் அரசியல் கைதிகள் என்ற அடைமொழியோடு ஆயிரக்கணக்கான இளையோர் இன்னும் வதை முகாம்களிலும், பூசா, வெலிக்கடை போன்ற சிறைச்சாலைகளிலும் எந்தவித விசாரணையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் உயிரும், வாழ்வும் அவ்வப்போது நடைபெறுகின்ற சிறைச்சாலைப் படுகொலைகளால் இன்னும் ஊசாலாடிக் கொண்டிருக்கிறன. தங்கள் உயிர் எப்போது பறிக்கப்படும் என்ற அச்சத்துடனேயே இவர்களின் நாள்கள் கழிந்து கொண்டிருக்கிறன. போர் உக்கிரம் பெற்று யாழ்ப்பாணம் திறந்த வெளிச்சிறைச்சாலையாக மாற்றப்பட்டு, வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு இழுத்துச்செல்லப்பட்ட பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என இதுவரை அறியாமல் அவர்களின் பெற்றோர்கள் இன்னும் தமது பிள்ளைகளின் புகைப்படங்களைத் தாங்கிய படி ஒவ்வொரு ஆணைக்குழு அமர்வுகள் தோறும் கண்ணீர் ததும்பும் முகங்களுடன் தேடி அலைந்து கொண்டே இருக்கின்றனர் .

இப்படி ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இன்னமும் சிறையில் வாடுகையில் - எந்த வித விசாரணை யும் இன்றி கால வரையின்றி அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கையில்- அவர்களை விடுவிக்க எந்த வித உருப்படியான நடவடிக்கையிலும் புதிய அரசு ஈடுபடாமல் இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலையில் எந்த நல்லெண்ணத்துக்காக சம்பந்தன் மட்டும் தென்னிலங்கையின் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டார் ? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகிறது.



பல குடும்பங்கள் இன்னமும் தமது சொந்த ஊர்களுக்கு போக முடியாமல் அவர்களின் நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக மாறியிருக்கையில், புதிய அரசாங்கத்துடன் எந்த விதமான நல்லெண்ணப்பதிலை எதிர்பார்க்கிறார் சம்பந்தன்? அவர் தலைமைத் தாங்கும் கூட்டமைப்பு ஐந்து கட்சிகளின் கூட்டிணைவாக இருக்கையில், அவற்றின் முடிவுக்கு மாறாக சம்பந்தன் நடந்து கொண்டமைக்கு அவரையும் கட்சியை விட்டு நீக்குவதுதானே நியாயமாக இருக்கமுடியும். அனந்திக்கு ஒரு நீதி. சம்பந்தருக்கு இன்னொரு நீதியை வழங்கினால் கூட்டமைப்பு பற்றிய நல்லபிப்பிராயம் அடிபட்டுப்போய்விடும்.

சம்பந்தன் நல்லெண்ணத்தை காட்டியதற்குப் பதிலுக்கு தென்னிலங்கை சம்பந்தனுக்கு என்ன நல்லெண்ணத்தை காட்டியது? சம்பந்தன் நல்லெண்ணம் காட்டுகிறார் என கூறி சுதந்திர தினம் அன்று தமிழ் அரசியல் கைதிகள் எவரையேனும் தென்னிலங்கை அதிகாரபீடம் பொதுமன்னிப்பின் கீழ் விடுவித்ததா? அன்றைய நாள் சுதந்திர தினத்தை முன்னிட்டு விடுவிக்கப்பட்ட 557 கைதிகளில் எத்தனை பேர் தமிழ் அரசியல் கைதிகள்? அல்லது நல்லெண்ணத்துக்குப் பதில் நல்லெண்ணமாக வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியேற்றப்பட்டார்களா? இல்லையே.

**சம்பந்தரும் சுமந்திரனும் தென்னிலங்கைக்கு நல்லெண்ணத்தை காட்டுவதில் ஒருவர்க்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லை என்பதை காலாதிகாலமாக உறுதிப்படுத்தி வருகின்றனர் . ரணிலுடன் சேர்ந்து சிங்கக்கொடியை சம்பந்தர் தூக்கிக் காட்டிய போதும், சுமந்திரன் நாடாளுமன்ற மைதானத்தில் ஆளும் தரப்புடன் கிரிக்கெட் விளையாடிய போதும் மக்கள் கண்டுகொள்ளாமல் , மாகாண சபைத் தேர்தலின் போது வாக்குகளை வழங்கியதால் நாங்கள் என்ன செய்தாலும் மக்கள் ஏற்பார்கள் என்ற நினைப்பு அவர்களுக்கு வந்துவிட்டது போலும். ஆனால் மக்களின் பொறுமைக்கும் எல்லை உண்டு என்பதை சம்பந்தப் பட்டவர்கள் விரைவில் புரிந்துகொள்ளத்தான் போகிறார்கள் .**

சம்பந்தரும் சுமந்திரனும் தென்னிலங்கைக்கு நல்லெண்ணத்தை காட்டுவதில் ஒருவர்க்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லை என்பதை காலாதிகாலமாக உறுதிப்படுத்தி வருகின்றனர் . ரணிலுடன் சேர்ந்து சிங்கக்கொடியை சம்பந்தர் தூக்கிக் காட்டிய போதும், சுமந்திரன் நாடாளுமன்ற மைதானத்தில் ஆளும் தரப்புடன் கிரிக்கெட் விளையாடிய போதும் மக்கள் கண்டுகொள்ளாமல் . மாகாண சபைத் தேர்தலின் போது வாக்குகளை வழங்கியதால் நாங்கள் என்ன செய்தாலும் மக்கள் ஏற்பார்கள் என்ற நினைப்பு அவர்களுக்கு வந்துவிட்டது போலும்.ஆனால் மக்களின் பொறுமைக்கும் எல்லை உண்டு என்பதை சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் புரிந்துகொள்ளத்தான் போகிறார்கள் . சம்பந்தரின் சுதந்திர தின சம்பந்தக் கலப்பு என்ன பின்விளைவுகளை ஏற்படுத்தப்போகின்றது என்பதை விரைவில் வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் வெளிப்படுத்திவிடும்.

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை



sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 567 7609


## நம்புதலும் ஏமாறுதலும்

இலங்கையில் கடந்த 0 9 வருடங்களாக நிலவிய காட்டாட்சிக்கு பிரதான காரணம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை தான் என்று கூறி அதனை ஒழிக்கவே தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக தேர்தல் காலத்தில் மைத்திரி முழங்கி வந்தார். அவரின் கூற்று மக்களுக்கும் நியாயமாகப் பட்டதால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க மைத்திரிக்கு அமோகமாக வாக்களித்தனர். ஆனால் இந்தத் தேர்தலில் வாகை சூடி மைத்திரி பால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு மாதம் கடந்து விட்ட நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்காக எந்த வித அறிகுறியும் தென்படவில்லை. மாறாக தொடர்ந்தும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்கப் போகின்றது என்பதற்கான சமிக்ஞைகள் தான் வந்து கொண்டிருக்கின்றன.

அண்மையில் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவித்த ஜனாதிபதி மைத்திரி "இனிவரும் காலங்களில் ஐந்து வருடங்கள் மட்டுமே ஜனாதிபதியின் பதவிக்காலம் இருக்கும். உண்மையில் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நான்கு வருடங்களாகக் குறைக்கும் ப்டியே நான் விரும்பிய போதும், நான்கு வருடத்துக்கொரு முறை தேர்தல் நடத்துவதால் வீண் செலவு ஏற்படும் என்று ஆலோசனை முன்வைக்கப்பட்டதாலேயே ஆறு வருடங்களாக இருந்த ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடமாக குறைக்கப்படவுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

ஆக மொத்தத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்காமல் அதன் பதவிக்காலத்தை மட்டும் ஒரு வருடத்தால் குறைக்கவே மைத்திரி விரும்புகிறார் என்பதையே அவரது கருத்து வெளிப்படுத்தி நிற்கிறது.

இப்படித் தான் 1994இல் சந்திரிகா நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாகக் கூறியே பதவிக்கு வந்தார். ஆனால் அவரும் ஒன்றுக்கு இரண்டு தடவை ஜனாதிபதி கதிரையை அலங்கரித்தாரே தவிர ஒரு போதும் நிறைவேற்று அதிகார முறைமையை இல்லாதொழிக்க முயலவில்லை.

நிறைவேற்று அதிகாரம்என்பது ஒரு மாயக் கதிரை. எட்ட நின்று பார்க்கும் போது அதுவே எல்லாப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணமாகத் தெரியும். ஆனால் தப்பித் தவறி அதில் அமர்ந்து விட்டால் யாரெல்லாம் அந்தக் கதிரையை ஒழிக்க வேண்டும் என்று விமர்சித்தார்களோ அவர்களே அதனை காப்பாற்ற முனைவார்கள். அப்படிப்பட்ட மாயக் கதிரையின் சக்திக்கு முன்னால் மைத்திரியும் மண்டியிட்டுவிட்டார் போலும்.

இதேவேளை இனிவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் எனக்கு இல்லை என்று மைத்திரி கூறி வருகிறார். இந்தக் கூற்றும் நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பேன் என்று சொன்னதைப் போலவே காற்றில் பறக்கவிடப்பட்டு இரண்டாவது முறையும்மைத்திரி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான சாத்தியங்கள் நிறைய உண்டு. வேண்டுமானால் "எனக்கு போட்டியிட துளியும் விருப்பம் இல்லைத் தான் ஆனால் மக்கள் விரும்புகிறார்கள். எனவேதான் நான் இரண்டாவது முறையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறேன்" என்று மைத்திரி சொன்னால் மந்தைகள் போல தலையாட்டி விட்டு வாக்களிப்பது தானே எங்களின் வழமை.

இப்படி தேர்தல் காலங்களில் கனவுலகத்தில் மக்களை மிதக்க வைக்கும் வாக்குறுதிகளை வழங்கி வென்று விட்டு பின்னர் அவற்றை காற்றில் பறக்க விடுவது அரசியல் வாதிகளுக்குப் புதிதல்ல. அதே போன்று கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் அரசியல் வாதிகள் நிறைவேற்றியே தீருவார்கள் என்று நம்பி ஏமாறுவதும் பொதுசனங்களுக்கு புதிதல்லத் தான்.

# யானைக்கு சக்கிர திசை

- புருஜோத்தமன் தங்கமயில்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பின்னர் நாட்டில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடந்த பத்து வருடங்களாக இறுக்கமான சூழலுக்குள் இருந்த மக்களுக்கு ஆட்சி மாற்றமும் அதன் மூலம் கிடைத்துள்ள நெகிழ்வுத் தன்மையுள்ள ஜனநாயக இடைவெளியும் பெரும் நிம்மதியைக் கொடுக்கின்றது. ஆனால், இந்த ஜனநாயக இடைவெளியின் நீட்சி எவ்வளவு காலத்துக்கு என்கிற கேள்வியும் மக்கள் மனதில் எழாமல் இல்லை.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பொது எதிரணி முன்வைத்த 100 நாள்கள் வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் தேசிய அரசாங்கம் குறிப்பிட்டளவு அக்கறை காட்டுகின்றது. இதன்மூலம், மக்களிடம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கின்றோம் என்ற செய்தியோடு நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள நினைக்கின்றது. ஆனாலும், நாடாளுமன்றத்தில் அதற்கான ஆதரவை எவ்வாறு பெற்றுக் கொள்ளப் போகின்றது என்கிற சந்தேகம் ஆரம்பத்திலிருந்து இருந்தது. நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பித்த பின்னர் அது இன்னமும் வலுப்பெற்றிருக்கின்றது. ஆட்சி மாற்றத்தின் பின்னரான நாடாளுமன்ற அமர்வுகள் புதுமையான காட்சிகளை அரங்கேற்றியது. நாட்டின் பிரதான கட்சிகளின் தலைவர்கள் இருவரும், அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் அருகருகே ஒரே அணியில் இருக்கின்றார்கள். ஆனால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உப -தலைவர் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட பெரும்பான்மை உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்திருந்தார்கள். கட்சியொன்றின் தலைவர் (ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன) அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதும், கட்சியின் உப-தலைவர் உள்ளிட்ட பெரும்பான்மை உறுப்பினர்கள் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதும் இலங்கை வரலாற்றில் இதுதான் முதன்முறை. (சந்திரிக்கா- ரணில் காலத்தினை அப்படிக் கொள்ள முடியாது.) நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 225 உறுப்பினர்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 127 உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றது. ஆனாலும், அந்தக் கட்சி எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வழங்கியிருக்கின்றது. தேசிய அரசாங்கத்தின் 100 நாள்கள் வேலைத்திட்டத்துக்கு தமது ஆதரவினை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வழங்கவுள்ளதாக அறிவித்தாலும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்கிற அச்சமும், அந்தத் தேர்தலில் தோல்வியடைந்தால் எதிர்வரும் 6 வருடங்களுக்கு எதிர்க்கட்சி வரிசையிலேயே உட்கார வேண்டி வந்துவிடுமோ என்கிற அச்சமும் அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு இருக்கின்றது.

ஏனெனில், கடந்த பத்து வருடங்களாக தொடர்ச்சியாக ஆட்சியிலிருந்து அதன் ருசியை அனுபவித்தவர்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் தலைவராக முன்னிறுத்தி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்கிற எண்ணப்பாட்டில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் இருக்கின்றன. அதற்கான முன்னேற்பாடுகளிலும் அவை ஈடுபட்டிருக்கின்றன. ஏனெனில், அதுதான், சிங்கள மக்களிடம் வாக்குகளை பெருமளவில் பெற்றுத் தரும் என்று நினைக்கின்றன. ஆனால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மை

**மஹிந்த ராஜபக்ஷவை முன்னிறுத்தி தேர்தலை எதிர்கொள்ள முடியாது. அதற்கு கட்சி யாப்பு அனுமதிக்காது. ஐக்கிய தேசியக் கட்சியை முன்னிலைப்படுத்தும் தேசிய அரசாங்கத்திலும் முழுமையாக ஐக்கியமாக முடியாது. அது, கட்சியை பெருமளவு சிதைத்துவிடும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மீளமைத்து முன்னிறுத்தலாம் என்றால் அதற்கு கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சியின் போசகர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க உள்ளிட்டவர்கள் உடன்படுவர்களா என்கிற சந்தேகம். இப்படியான நிலையில் தான், புரிபடாத சூழ்நிலையொன்றொடு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் நாடாளுமன்ற அமர்வுகளை எதிர்கொள்கின்றனர்.**

உறுப்பினர்கள் அந்த எண்ணப்பாட்டைக் கொண்டிருந்தாலும் சிரேஷ்ட உறுப்பினர்களும், கட்சித் தலைமையும் அதனை அனுமதிக்காது. மிகவும் சிக்கலான நிலைக்குள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இப்போது சிக்குண்டிருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷவை முன்னிறுத்தி தேர்தலை எதிர்கொள்ள முடியாது. அதற்கு கட்சி யாப்பு அனுமதிக்காது. ஐக்கிய தேசியக் கட்சியை முன்னிலைப்படுத்தும் தேசிய அரசாங்கத்திலும் முழுமையாக ஐக்கியமாக முடியாது. அது, கட்சியை பெருமளவு சிதைத்துவிடும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மீளமைத்து முன்னிறுத்தலாம் என்றால் அதற்கு கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சியின் போசகர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க உள்ளிட்டவர்கள் உடன்படுவார்களா என்கிற சந்தேகம். இப்படியான நிலையில் தான், புரிபடாத சூழ்நிலையொன்றொடு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் நாடாளுமன்ற அமர்வுகளை எதிர்கொள்கின்றனர். இதற்கு அண்மையில் அரங்கேறிய காட்சியொன்றை உதாரணமாகக் கொள்ள முடியும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பிரதம நீதியரசராக மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்று கூறி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கம் மீண்டும் ஷிராணி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவியில் அண்மையில் அமர்த்தியது. அவரும் ஒருநாள் பதவி வகித்துவிட்டு ஓய்வு பெற்றார். இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் பெரும் சச்சரவுகளை ஏற்படுத்தியிருந்தது. மொஹான் பீரிஸினை நீக்கியது தவறு என்று எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கோசமிட்டனர். விவாதமொன்றுக்கான சந்தர்ப்பமொன்றையும் கோரினர். அப்போது, குறுக்கிட்ட பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சி முக்கியஸ்தர்களைப் பார்த்து (குறிப்பாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரைப் பார்த்து), 'நீங்கள் இங்கு கூச்சலிட்டால் உங்களின் தலைவரிடம் முறையிடுவேன். உங்களின் தலைவர் தான் எங்களின் ஜனாதிபதி' என்றார். அந்தப் பதிலை ரணில் விக்ரமசிங்க மிகவும் நக்கலான தொனியிலேயே முன்வைத்திருந்தார். இந்தக் காட்சியொன்று சொல்லிவிடும் இப்போதுள்ள நாளுமன்றத்திலும், அரசியல் களத்திலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரின் நிலையை உணர்வதற்கு. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிலை இப்படியென்றால், சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாடாளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும் முனைப்போடு ஈடுபட்டிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகள் என்கிற வடிவில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களை கட்டம் கட்டியிருக்கின்றது. இப்போது வரையில் வெளிநாடு செல்ல முடியாதவாறு முன்னாள் அமைச்சர்கள் பலரது கடவுச்சீட்டுக்கள் முடக்கப்பட்டுவிட்டன. முன்னைய ஆட்சியில் எவ்வளவு ஊழல்களும், மோசடிகளும், அத்துமீறல்களும் இடம்பெற்றிருக்கின்றன என்று நாளாந்தம் செய்திகள் வெளிவருகின்றன. ஊழல்களின் அளவு என்பது மில்லியன்களைத் தாண்டி பில்லியன்களில் கணக்கிடப்படுகின்றன. இன்னொரு பக்கம், தேசிய அரசாங்கம் முன்வைத்த இடைக்கால வரவு- செலவுத் திட்டம் என்பது நாட்டின் பெரும்பான்மையான கீழ் மற்றும் மத்தியதர வர்க்கத்தினரை நோக்கி நிவாரணங்களை வழங்கியிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்திலும் தேர்தலை முன்னிறுத்திய அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படுவதும், தேர்தலின் பின்னர் அவை பெருமளவாக அதிகரிக்கப்படுவதும் வ்ழக்கம், ஆனால், தேசிய அரசாங்கம் பொருள்களின் விலைக் குறைப்பினைச் செய்துவிட்டு அதற்கான காரணமாக முன்வைத்த விடயங்கள் கவனத்தில் கொள்ளத்தக்கது. முன்னைய அரசாங்கம் மக்களின் பணத்தினை ஊதாரித்தனமாகப் பயன்படுத்தியது என்றும், முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்ட ஆட்சியின் பங்காளர்களின் செலவுகள் என்பது மக்களின் மீது சுமையேற்றும் அளவுக்கு இருந்ததாகவும் கணக்கினைப் பட்டியலிட்டது. அந்தச் செலவுகளைக் குறைக்கும் போது, அத்தியாவசியப் பொருள்களின் விலைகுறைப்பு என்பது சாத்தியமானது என்கிற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருக்கின்றது. மக்களின் மனங்களை வெல்வது என்பது முதலில் ஊடகங்களை வெல்வது என்கிற அடிப்படையை கருத்தில் கொண்டு தேசிய அரசாங்கத்தின் தலைமைக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தன்னுடைய நகர்வினை முன்னெடுத்திருக்கின்றது. ஊடகங்களும், ஊடகவியலாளர்களும், செயற்பாட்டாளர்களுக்குமான கருத்துச் சுதந்திரம் என்பது நாட்டின் முன்னேற்றத்தின் அறிகுறியாக கொள்ளப்படும். அதனை வழங்குவதனூடாக மக்களிடம் முற்றுமுழுதான ஜனநாயக சூழலொன்றுக்குள் நீங்கள் இருக்கிறீர்கள் என்று உணர வைக்க முடியும். அதனை மிகவும் திட்டமிட்ட ரீதியில் அனுமதித்திருக்கின்றது. எந்தவொரு தருணத்திலும் சிறுபான்மைக் கட்சிகள் தேசிய அரசாங்கத்துக்கு எதிராக திரும்பிவிடக் கூடாது என்பதையும் ஐக்கிய தேசியக் கட்சி கருத்தில் கொண்டு செயலாற்றுகின்றது. நீண்ட காலத்தின் பின் நாட்டின் ஜனநாயகமும், இன நல்லிணக் கமும் ஏற்பட்டிருக்கின்றது என்கிற கோசத்தை எந்தவொரு இடத்திலும் விட்டுக் கொடுக்காமல் மக்களிடம் நாட்டினை அமைதிப்பூங்காவாக ஆட்சி செய்வதற்கான அனுமதியைக் கோருகின்றோம் என்கிற வடிவில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகியிருக்கின்றது. தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகள் பல ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளலாம். மக்கள் விடுதலை முன்னணியும், சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனித்தனியாகவே தேர்தலை எதிர்கொள்ளப் போகின்றன. தேர்தலில் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கும் அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து ஆதரவளிக்கத் தயார் என்கிற நிலைப்பாட்டினை மக்கள் விடுதலை முன்னணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வெளியிட்டிருக்கின்றன. சரத் பொன்சேகா அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் அறிவித்திருக்கின்றார். இப்படியான நிலையில், இப்போதுள்ள தேசிய அரசாங்கத்தின் மாதிரியொன்றையே நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரும் அமைப்பதற்கான முயற்சிகளை பொது எதிரணிக் கட்சிகள் முன்னெடுக்கின்றன. அதில், குறிப்பிட்டளவு வெற்றிபெறுவதற்கான சூழலும் இருப்பதை உணர முடிகின்றது. ஏனெனில், மஹிந்த ராஜபக்ஷ போன்று சிங்கள மக்களிடம் அபிமானம் பெற்ற ஒருவரை இப்போதுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கொண்டிருக்க வில்லை. இப்போது, மஹிந்த ராஜபக்ஷ, சிங்கள மக்களிடம் கொண்டிருந்த அபிமானத்தையே அதிருப்தியாக தேசிய அரசாங்கம் மாற்றிக் கொண்டிருக்கின்றது. அது, மஹிந்த ராஜபக்ஷவின் மீதான அதிருப்தியாக மட்டுமில்லாமல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மீதான அதிருப்தியாகவும் உருமாறியிருக்கின்றது. இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி நிறைவேற்று அதிகாரமுள்ள நாடாளுமன்றத்தை உருவாக்கவும், அதில் ஆட்சியமைக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி முனைப்போடு செயற்படுகின்றது. அதில் வெற்றியும் பெற்றுவிடும். ஏனெனில், ஐக்கிய தேசியக் கட்சியின் பயணத்தை தடுத்து நிறுத்துவதற்கான வாய்ப்புக்கள் இப்போதைக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிடம் இல்லை என்பதுதான் பெரும் யதார்த்தம்!



**தேசிய அரசாங்கம் முன்வைத்த இடைக்கால வரவு- செலவுத் திட்டம் என்பது நாட்டின் பெரும்பான்மையான கீழ் மற்றும் மத்தியதர வர்க்கத்தினரை நோக்கி நிவாரணங்களை வழங்கியிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்திலும் தேர்தலை முன்னிறுத்திய அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படுவதும், தேர்தலின் பின்னர் அவை பெருமளவாக அதிகரிக்கப்படுவதும் வழக்கம்.**

# வேலண்டைன்ஸ் டே

வேலண்டைன்ஸ் டே என்று உலகமெங்கும் கொண்டாடப்படும் காதலர் தினம் வேலண்டைன் பாதிரியாரின் நினைவாகக் கொண்டாடப்படுகிறது என்பது நம்பிக்கை. கி.பி 270 ம் ஆண்டு ரோமப் பேரரசரான இரண்டாம் கிளாடியுஸ் காலத்தில் ஆண்கள் திருமணம் செய்து கொள்ளத் தடை இருந்தது. திருமணம் செய்து கொண்டால் ஆண்களுடைய வீரம் குறைந்து விடும் என்பது அரசரின் நம்பிக்கை. இதனால் பெண்களை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது என்ற தடை விதித்திருந்தார் ரோமப் பேரரசர்.

திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையை சந்தோசமாக அனுபவிக்க வேண்டும் என்று துடித்தவர்களுக்கு உதவி செய்து அவர்களுக்கு அரச கட்டளையை மீறித் திருமணம் நடத்திவைத்தார் வேலண்டைன் பாதிரியார். இதனை அறிந்த மன்னன் அவருக்கு மரணதண்டனையைப் பரிசளித்தான். இரண்டு மனங்களை திருமண பந்தத்தில் இணைத்து வைத்த பாதிரியார் வேலண்டைன் கொல்லப்பட்ட நாள் பெப்ரவரி 14. எனவே அவர் கொல்லப்பட்ட நாளை உலகெங்கும் உள்ள காதலர்கள் காதலர் தினமாக அனுஷ்டித்து வருகின்றனர்.



# கிறிஸ்தவ காதலர் நாள்

பண்டைய காலத்தில் ரோமில் கொண்டாடப்பட்ட ஒரு விழா லூப்பர் கேலியா. இது பெப்ரவரி 13 முதல் பெப்ரவரி 15 வரை கொண்டாடப்படும். வாழ்க்கை வளமாக அமைய கடவுளை வேண்டும் விழா இது. ரோம் நகரில் ஆடல் பாடல் என அமர்க்களப்படும். இதனை கி.பி 490 களில் போப் கெலேஷியஸ் தடை செய்தார். ஆனாலும் மக்கள் இதனைக் கைவிடவில்லை. இந்த விழாவின் வீரியத்தைக் குறைக்கவும், ஒரு கிறிஸ்தவ விழாவின் மூலம் செயலிழக்கச்செய்யவும் போப் தீர்மானித்தார். எனவேதான் பெப்ரவரி 14ம் திகதியை புனித வேலண்டைன்நாள் என போப் அறிவித்தார் என்றும் பலரால் நம்பப்படுகிறது.





# சீனர்களின் காதலர் தினம்

சீனர்களின் காதலர் தினக் கதை சுவாரஸ்யமானது. சொர்க்கத்தின் சக்கரவர்த்திக்கு ஏழு மகள்கள். ஏழாவது மகளான ஸி நூ அழகிகளுக்கெல் லாம் அழகி! பேரழகி. ஒரு நாள் ஏழு சகோதரிகளும் நதியில் குளித்துக் கொண்டிருந்தார்கள். நுவு எனும் இளைஞன் அவர்களைப் பார்த்தான். குறும்புத் தனமாக எல்லாருடைய ஆடைகளையும் எடுத்துப் போய்விட் டான். ஆடைகள் இல்லாமல் வெளியே வரமுடியாமல் சகோதரிகள் தவித்தனர். கடைசியில் தங்கள் கடைசித் தங்கையான ஸி நூ வை அவனிடம் சென்று ஆடை வாங்கி வர அனுப்பினார்கள். ஈரம் சொட்டச் சொட்ட எழிலுடன் வந்து நின்ற அவளைப் பார்த்தவுடன், நுவூ காதல் கொண்டான். இந்தக் காதல் திருமணத்தில் முடிந்தது. விஷயம் தெரிந்த மன்னர் இருவரையும் பிரித்து வானத்தின் இரண்டு மூலைகளில் கொண்டு போய் விட்டார். அவர்கள் ஏழாவது மாதத்தின், ஏழாவது நாளில் மட்டும் தான் சந்தித்துக் கொள்ள முடியும். அந்த நாள் தான் சீனர்களின் காதலர் தினம்.

## பிரியமானவர்களுக்கு பரிசு

கிழக்கு இங்கிலாந்தின் நார்போக் பகுதியில் காதலர் தினத்தை சிறப்பாக கொண்டாடுகின்றனர். கிறிஸ்மஸ் காலத்தில் கிறிஸ்மஸ் தாத்தா வீடுகளில் பரிசு வழங்குவதைப் போல பிரியத்துக்குரியவர்களின் பின்வாசல் கதவைத் தட்டி இனிப்புகளை வைத்துச் செல்லும் வழக்கம் இருந்துள்ளது. இவ்வாறு இனிப்புகளை வைப்பவர்கள் ஜேக் என்று அழைக்கப்பட்டனர்.






# இதயங்களின் தினம்

ஸ்வீடன் நாட்டில் இந்தநாளை அனைத்து இதயங்களின் தினம் என்று அழைக்கின்றனர். போர்த்துக்கல் நாட்டில் காதலர் தினத்தை நமோரோடோஸ் டயாடாஸ் என்று அழைக்கின்றனர். இதற்கு அர்த்தம் நண்பன் அல்லது நண்பிகள் தினம் என்பதாகும். ஸ்பெயினில் இந்த நாளை செயின்ட் வேலண்டைன் என்று அழைக்கின்றனர்.

## காலமெல்லாம் காதல்

உலக காதலர்கள் கொண்டாடும் காதலர் தினம் குறித்து பல்வேறு சுவையான, தகவல்கள் கூறப்படுகின்றன. காலம் காலமாகக் கூறப்பட்டு வரும் காதலர்தினக் கதைகள் தியாகம் நிறைந்தவை. அந்தக் கதைகளை காதலர் தினத்துக்காக பகிர்ந்து கொள்கிறோம்.





# நட்புக்கு மரியாதை

பின்லாந்து நாட்டில் வேலண்டைன்ஸ் டே சற்று வித்தியாசமானது. இது காதலர்களுக்கான தினம் அல்ல. இந்த நாளை அவர்கள் ஸ்டேவான்பாபியா என்று அழைக்கின்றனர். அதாவது இதற்கு நண்பர்கள் தினம் என்று பொருள். நண்பர்களாக இருப்பவர்கள் இந்த நாளை விமரிசையாக கொண்டாடுகின்றனர். நண்பர்களுக்கு வாழ்த்து அட்டைகள் அனுப்புவதும், பரிசுகள் கொடுப்பதும் என இந்த நாளை சிறப்பாக கொண்டாடுகின்றனர். எங்கெங்கோ இருக்கும் நண்பர்கள் எல்லாம் ஒன்றாக கூடி இந்த நாளை உற்சாகத்துடன் கொண்டாடுவது சிறப்பம்சம்.

## பாலியல் நாள்

பிரேசில் நாட்டில் பெப்ரவரி 14 ம்திகதியை ஹொலிடே ஓஃப் செக்ஸ் என்று அழைக்கின்றனர். அந்த நாளை அமர்க்களப்படுத்துவார்கள் பிரேசில் நாட்டினர். அதுபோல் அவர்களுக்கு காதலர் தினத்துக்கென வேறு தனியாக ஒருநாள் உண்டு. அது ஜூன் 2 ம் திகதி. அந்தநாளில் காதலர்கள் மற்றும் தம்பதியர் வாழ்த்து அட்டை, சொக்லேட், பரிசு, முத்தம் என சகலத்தையும் பரிமாறிக்கொள்வது வாடிக்கை




# கூட்டுறவில் மாற்றம் வருமா?

**- அக்கினிக்குமரன்**

அண்மைக்காலமாக வடமாகாணத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்பள உயர்வு கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளில் நூற்றுக்கு நூறு வீத நியாயம் உண்டு என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். இலங்கையில் அதிகுறைந்த ஊதியத்தைப் பெறுபவர்கள் மலையகத் தொழிலாளர்களே எனக் கூறப்படுகிறது. மலையகத் தொழிலாளர்களைப் பொறுத்த வரை ஒரு குடும்பத்துக்கு இருவர் அல்லது மூவர் அதே தோட்டத்திலேயே உழைக்கும் வாய்ப்புகள் உண்டு. ஆனால் கூட்டுறவுப் பணியாளர்களின் நிலை அப்படியல்ல. ஒருவரின் உழைப்பிலேயே அவரின் குடும்பம் உயிர் வாழ வேண்டும். அதே வேளையில் போக்குவரத்து உட்பட மலையக மக்களை விட அதிகமான தேவைகள் இவர்களுக்கு உண்டு. எனவே நாளாந்தம் அவர்கள் பற்றாக்குறையுடன் போராட வேண்டிய நிலை ஏற்படுகிறது.

சில கிளைச்சங்க முகாமையாளர்கள் தவிர்க்க முடியாத தேவைகள் காரணமாக சங்கப் பணத்தில் கைவைத்து விட்டு, சொந்த நகைகளை விற்று அவற்றைக் கட்ட வேண்டிய நிலையும் ஏற்பட்டு விடுவதுண்டு. சிலர் வேலையிழந்தும் உள்ளனர். சில கிளைச்சங்க முகாமையாளர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டும் எழுவதுண்டு.

இப்படியான நிலையில் கூட்டுறவுப் பணியாளர்கள் நேர்மையாகவும்,விசுவாசமாகவும் பணியாற்ற வேண்டுமானால் நிச்சயமாக அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே வடமாகாண சபை கூட்டுறவு ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களின் சம்பளம் முப்பது வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்துள்ளது. வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவும் முப்பது வீத சம்பள அதிகரிப்பை அங்கீகரித்துள்ளது.

ஆனாலும் ஊதியம் உயர்த்தப்படாத நிலைமைக்கு ஊழியர்கள் ஆணைக்குழுவின் செயலர் கையெழுத்திடாமையே காரணம் எனக் கூறப்படுகிறது. அவர் திட்டமிட்ட வகையில் நீண்ட விடுப்பில் சென்றுள்ளதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.


எப்படியிருப்பினும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையின் தீர்மானம் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அங்கீகாரம் ஒரு தனிநபரினால் புறந்தள்ளப்படும் ஒரு மிலேச்சத்தனம் இங்கு அரங்கேறுகிறது.

வடக்கின் முன்னாள் ஆளுநரினதும்,முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும் செல்லப் பிள்ளையாகச் செயற்பட்ட சிலர் யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களில் காட்டாட்சி நடத்திக் குழப்பங்களை விளைவித்தமையை நாமறிவோம். சர்வதிகார நடைமுறைகள் மூலம் பணியாளர்கள், மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோரின் எதிர்ப்பைச் சம்பாதித்தனர். நிர்வாக விடயங்களில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தலையீடு காரணமாக அரச அதிகாரிகளும் பணியாளர்களும் நேர்மையாகவும்,மக்கள் நலன்களின் அடிப்படையிலும் சேவையாற்ற முடியாமலும் பெரும் இன்னல்களுக்கும், மன உளைச்சலுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

எந்த ஒரு முறைகேட்டையும் எவராவது தட்டிக் கேட்டால் அவர் கொலை செய்யப்படுவார், படுகொலை முயற்சிகளுக்கு உட்படுத்தப்படுவார் அல்லது அவர்களின் வீடுகளுக்கு கழிவு ஒயில் விசிறப்படும் ஒரு பயங்கர நிலை நிலவியது. இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிகள் கேள்வி கேட்பவர்களை நோக்கி எப்போதுமே நீட்டப்பட்டிருந்தன.

**கூட்டுறவுப் பணியாளர்கள் நேர்மையாகவும்,விசுவாசமாகவும் பணியாற்ற வேண்டுமானால் நிச்சயமாக அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே வடமாகாண சபை கூட்டுறவு ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களின் சம்பளம் முப்பது வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்துள்ளது. வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவும் முப்பது வீத சம்பள அதிகரிப்பை அங்கீகரித்துள்ளது.**

கூட்டுறவுத்துறையும் இதற்கு விதிவிலக்காக விடவில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றினது நிர்வாகங்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி சார்பானவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் வைத்ததே சட்டம் என்ற நிலை நிலவியது. பல வருடங்களாக அரச ஊழியர்களின் சம்பளங்கள் பல முறை கூட்டப்பட்ட போதும் கூட்டுறவுப் பணியாளர்களின் ஊதியம் அதிகரிக்கப்படவில்லை. சங்கங்கள் நட்டத்தில் இயங்குவதாலேயே பணியாளர்களின் வேதனத்தைக் கூட்ட முடியவில்லை என்ற காரணம் காட்டப்பட்டது.



ஒரு நிறுவனம் நட்டத்தினால் இயங்கினால் அதற்கு யார் பொறுப்பு? நிச்சயமாக நிர்வாகம் சீராக இருக்குமானால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நட்டம் ஏற்பட வாய்ப்பில்லை. சீரான நிர்வாகம் இடம்பெறும் சில சங்கங்கள் இலாபத்தில் இயங்குவது மட்டுமன்றி, பணியாளர்களுக்கு கூடுதல் ஊதியத்தையும் வழங்குகின்றன. அத்துடன் மக்களுக்கும் நியாயபூர்வமான சேவைகளைச் செய்து வருகின்றமையை நாம் மறுத்து விட முடியாது.


எனவே கூட்டுறவுச்சங்கங்கள் நட்டத்தில் இயங்க முழுக்க முழுக்க நிர்வாகங்களே பொறுப்பேற்க வேண்டும். கூட்டுறவுத் துறை தொடர்பாக எந்த வித அறிவுமற்றவர்கள், ஊழல் மோசடிப் பேர்வழிகள், அரசியல் வாதிகளின் எடுபிடிகள் நிர்வாகத்தை நடத்தினால் நிறுவனம் எப்படி லாபத்தில் இயங்க முடியும்?

நட்டத்துக்கு காரணமாக நிர்வாகமே பொறுப்பாக இருக்கும் போது சுமையை பணியாளர்களின் தலையில் சுமத்துவதை ஏற்றுக் கொள்ள முடியுமா?

ஒரு காலத்தில் இலங்கையிலேயே கூட்டுறவு அமைப்பு வெகு சிறப்பாக இயங்கியது. வீரசிங்கம் மண்டபமே அதற்கு ஒரு வலுவான சாட்சியமாகும்.எப்போது கூட்டுறவுக்குள் அரசியல் தலையீடு தொடங்கியதோ அன்றே அதன் மதிப்பு சீர்கெட ஆரம்பித்து விட்டது. அதற்கேற்ப சில அரச அதிகாரிகளும் அரசியல் வாதிகளை திருப்திப் படுத்துவதையே தமது பிரதான கடமையாகக் கொண்டு செயற்பட்டு வந்தனர்.இன்று நாட்டில் நல்லாட்சிக்கான ஒரு மாற்றம் தென்படுகின்றன. எனவே ஊழல் மோசடிப் பேர் வழிகள் களையப்பட்டு கூட்டுறவுத் துறையும் மாற்றத்தை நோக்கி நகர்ந்து பணியாளர்களின் சேவைக்கேற்ப ஊதியத்தை வழங்க முன் வரவேண்டும்.

**ஒரு நிறுவனம் நட்டத்தினால் இயங்கினால் அதற்கு யார் பொறுப்பு? நிச்சயமாக நிர்வாகம் சீராக இருக்குமானால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நட்டம் ஏற்பட வாய்ப்பில்லை. சீரான நிர்வாகம் இடம்பெறும் சில சங்கங்கள் இலாபத்தில் இயங்குவது மட்டுமன்றி,பணியாளர்களுக்கு கூடுதல் ஊதியத்தையும் வழங்குகின்றன.அத்துடன் மக்களுக்கும் நியாயபூர்வமான சேவைகளைச் செய்து வருகின்றமையை நாம் மறுத்து விட முடியாது.**

# சிம்ம சொப்பனம் 08



காஸ்ரோவுக்குத் தெரிந்தவர்கள் அனைவரும் மதப்பற்றாளர்கள். அவர்கள் கடவுளை நம்பியதுடன் கிருத்துவப்பிரார்த்தனை சபையில் இருந்த பல புனிதர்களையும் நம்பினர். இந்தப் புனிதர்கள் அதிகாரமானவர்கள். மிகுந்த செல்வாக்கு கொண்டவர்கள். ஒவ்வொருக்கும் ஒவ்வொரு புனிதர் இருந்தார். அந்தப் புனிதரின் பெயரை ஒட்டியே பொதுவாகக் குழந்தைகளுக்கு பெயர்கள் வைக்கப்படும். அதாவது ஞானஸ்தானத்தை இந்தப் புனிதர்தான் நடத்தி வைப்பார். ஃபிடல் என்பது அத்தகைய ஒரு புனிதரின் பெயர் தான்.

கிருத்துவப் பிரார்த்தனை சபையைச் சாராத புனிதர்களையும் க்யூபர்கள் வணங்கி வந்தனர். அவர்களுள் மிக முக்கியமானவர் புனித லாசரஸ் மீது நம்பிக்கையில்லாதவர்களை தேடினாலும் கண்டு பிடிக்க முடியாது. ஆவி.பேய் மீதும் பலருக்கு நம்பிக்கையிருந்தது. அனைத்து விதமான மூட நம்பிக்கைகளும் மக்களிடையே பரவிக் கிடந்தன. ஒரு வீட்டுச் சேவல் மூன்று முறை கூவி பதில் கிடைக்கவில்லையென்றால் ஏதேனும் பெரும் கேடு ஏற்படும் என்று நம்பினர். இரவில் ஆந்தை பறந்து அதன் சத்தம் நம் காதில் கேட்டால் பெரும் ஆபத்து என்று நம்பினர். உப்பு தூவும் பெட்டி கீழே விழுந்து சிதறி விட்டால் சிந்திய உப்பிலிருந்து ஒரு துளி எடுத்து இடது தோள் மீது தூவிக் கொள்வார்கள். இது பரிகாரம்.இப்படிச் செய்யவில்லையென்றால் கற்பனைக் கெட்டாத விபரீதங்கள் நடந்து விடும்.இன்னும் எத்தனை எத்தனை யோ நம்பிக்கைகள், பயங்கள், பரிகாரங்கள். வீட்டில் யாருக்காவது ஏதாவது சுகவீனம் ஏற்பட்டால் மருத்துவரிடம் போகாமல் புனித மாதாவிடம் முறையிடுவார்கள். காஸ்ட்ரோவின் தாய் லினாவும் இப்படித்தான். வீட்டில் எப்பொழுதும் பிரார்த்தனைகள் செய்து கொண்டிருப்பார். ஏஞ்சலுக்கு கடவுள் நம்பிக்கை இருந்ததா என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. அவர் மதம் மீது ஐயம் கொண்டவராக இருந்திருக்கலாம் என்று காஸ்ட்ரோ பின்னால் ஒரு பேட்டியில் குறிப்பிடுகிறார். ஏஞ்சல் யாரிடமும் மதம் பற்றியும் இறை நம்பிக்கை பற்றியும் பேசியதாகத் தெரியவில்லை.

ஞானஸ்தானம் அளிப்பதென்பது ஒரு விரிவான முக்கிய சடங்காகக் கடைப்பிடிக்கப் பட்டது. ஒரு குழந்தைக்கு ஞானஸ்நானம் அளிக்கும் தந்தை (இவர்களை ஞானத் தந்தை என்று அழைப்பது வழக்கம்) அந்தக் குழந்தையின் இரண்டாவது தந்தையாக மதிக்கப்பட்டார். தான் ஞானஸ்தானம் செய்யும் குழந்தையை தன் சொந்த குழந்தையாகப் பாவித்து அவர்களுக்குத் தேவைப் படும் உதவிகளைச் செய்து கொடுப்பது ஞானத் தந்தையின் பொறுப்பு. குடும்ப நண்பர்களோ அல்லது குழந்தையின் மாமனோ தான் பொதுவாக ஞானத் தந்தையாகப் பெறுப்பேற்பார்.

காஸ்ட்ரோவுக்கு ஏஞ்சலின் நண்பர் ஒருவர் ஞானத் தந்தையாக இருக்கச் சம்மதித்தார். அவர் பெயர் டான் ஃபிடல் பினோ ஸான்டோஸ்.இவர் பெரிய பணக்காரர். பிரபலமானவரும் கூட.ஏஞ்சலுடன் வியாபார ரீதியாக உறவு வைத்துக் கொண்டவர். தனக்குத் தேவைப்படும் பொழுதெல்லாம் எஞ்சல் இவரிடமிருந்து வட்டிக்குக் கடன் வாங்கிக் கொள்வது வழக்கம். மில்லியனர் என்று தான் இவரை அழைப்பார்கள். ஒரு பெஸோ சம்பாதிப்பதற்கு திண்டாடும் மக்களிடையே ஒரு மில்லியனராக இருக்க வேண்டுமானால் அவருடைய பணபலமும் செல்வாக்கும் எப்படி இருந்திருக்கும் என்று யூகிக்கலாம். காஸ்ட்ரோவுக்கு முன்னரே ஞானஸ்நானம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் டான் ஃபிடலால் இதற்கென நேரம் ஒதுக்கி காஸ்ட்ரோ தங்கியிருந்த பகுதிக்கு வர இயலவில்லை. அதனால் இந்தச் சடங்கு ஒத்தி வைக்கப்பட்டது. காலதாமதமாக ஞானஸ்நானம் அளிக்கப் பட்டதால் காஸ்ட்ரோவையும் யூதர் என்று சிலர் அழைத்தனர்.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி 06ஆம் திகதியை இயேசுவின் திருவருட் தோற்ற நாளாகக் கொண்டாடுவது வழக்கம். சம்பிரதாயப்படி கிறிஸ்து பிறந்த போது அவருக்கு அஞ்சலி செலுத்த மூன்று ஞானிகள் வருவார்கள். அவர்கள் கேஸ்பர். மேல்காயிர் மற்றும் பால் தஸார். சாண்டாகிளாஸைப் போல் இந்த மூன்று ஞானிகளும் ஒவ்வொரு வருட மும் குழந்தைகளுக்கு பரிசுகளைக் கொண்டு வருவார்கள். யார் யாருக்கு என்னென்ன பரிசுகள் வேண்டும் என்று இந்த ஞானிகளிடம் கடிதம் மூலம் தெரிவித்து விட்டால் போதும். விரும்பிய பொருள்கள் கிடைத்து விடும். காஸ்ட்ரோவுக்கு இந்த ஞானிகள் மீது மிகுந்த நம்பிக்கையாயிருந்தது. ஒரு நீண்ட கடிதத்தை எழுதினார். என்கு கார்கள் வேண்டும். ரயில்கள் வேண்டும். பிறகு படம் எடுக்கக் கூடிய கமராக்கள் வேண்டும்.

இரவு படுப்பதற்கு முன்னால் படுக்கைக்கு அடியில் சிறிது புல்லும் அருகே தண்ணீரும் எடுத்து வைத்து விட்டுத் தூங்கினான் காஸ்ட்ரோ. இந்தப் புல்லும் தண்ணீரும் ஒட்டகத்துக்காக ஒட்டகம் தான் மூன்று ஞானிகளையும் சுமந்து கொண்டு வரும். அவ்வளவு தொலை விலிருந்து இந்த ஒட்டகம் வருவதால் (எவ்வளவு தொலைவிலிருந்து என்று அவனுக்குத் தெரியாது) அதற்கு பசியும் தாகமும் ஏற்படலாம். புல்லைச் சாப்பிட்டு விடடு தண்ணீரையும் குடித்து விட்டு முழுத் திருப்தியடைந்தால் தான் பரிசுகள் கிடைக்கும்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 659

**மேலிருந்து கீழ்**

1-கொலை.களவு.கள்.காமம்.சூது ஆகிய தவறுகள்.
2-கன்னி.
3- அநேக ஆண்களுக்கு தலையில் இது உண்டு.
4-உயிரற்ற உடல்.
5- நீர் மேகம்.
7- முறம்.
9- இலங்கையின் மத்திய பிரதேசத்தை இப்படி அழைப்பர்.
10- பல்கலைக்கழகம் கொடுக்கும் பட்டம்.
13- தாயின் மூத்த சகோதரி.
17- முன்னொரு நாள்.
18- திக்கு.
20- இது வந்திடப் பத்தும் பறக்கும்.
22 -வாழ்.

**இடமிருந்து வலம்**

1- தகுதியான நிலை.
4-தோழன்.
6- சிவன் கையில் உள்ள ஆயுதம்.
7- தீயின் வடிவம்.
8-யுத்தம் நடக்கும் இடம்.
11 - கழுத்தில் சூட்டுவது.
12- கரம் குலுக்குதல்.
14- திரவத் தன்மையான ஊடகம்.
15- பிழை அல்ல.
16 -இணங்க.
17- விருந்தினர்.
19 -இவன் மகாகவி .
21- வைதீக சமயங்களில் ஒன்றைப் பின்பற்றுபவன்.
23 - சிறிய பெண்.
24- கர்ப்பம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | ■ |
| 11 | | ■ | 12 | | | ■ | 13 |
| 14 | | | ■ | | ■ | 15 | |
| 16 | | ■ | 17 | | 18 | ■ | |
| 19 | | 20 | | ■ | 21 | 22 | |
| | ■ | 23 | | | ■ | 24 | |

அனுப்புபவர் பெயர்:------------------------------
விலாசம்:------------------------------
------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 659

■ சொற்சிலம்பம் போட்டி 658ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, மார்ச் 04 ஆம் மற்றும் மார்ச் 11 ஆம் திகதிய சுடர்ஒளி யில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஓரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்திலும்.நெல்லியடி,சாவகச்சேரி,கிளிநொச்சி,கொழும்பு. வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

பொன். கயிலாயபிள்ளை,
இல 77,விசுவமடு மேற்கு,
விசுவமடு.

திருமதி புவனா தில்லை,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

செ.சின்னத்துரை,
இல 131, னு -10,
உருத்திரபுரம்.

கே. இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

சி.சம்பூரணி,
முகாமைத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

### போட்டி இல 656இல் பரிசு பெற்றோர்

1 ஸ்ரீ.துர்ஷிகன்,
இல 240,பாரதி நகர்,
யோகபுரம், மல்லாவி.

2 ரேணுகா ஸ்ரீகாந்தராசா,
கொட்டாவத்தை,கல்வளை
சண்டிலிப்பாய்.

3 இ.யூஜினா மரியா,
இல 30 கொண்டடி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பப் போட்டி 657இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.சமத்துவம்.
2.கரு.
3.வாங்கல்.
4.சகுனி.
5.சதி.
6.கர்வம்.
8.சல்லாபம்.
10.தவி.
12.கிலி.
14.சனி.
16.புதிய.
18.பதில்.
19.கம்பி.
20.கன்னி.
21.மதி.
22.ஊதா

**இடமிருந்து வலம்**

1.சகவாசம்.
5.சக.
7.மருங்கு.
8.சதிர்.
9.கனிதல்.
11.துகில்.
13.விலாசம்.
15.வலி.
17.பனி.
18.பதிகம்.
21.மதியம்.
22.ஊன்.
23.மதில்.
24.பிரதானி.

- அ.யேசுராசா

# பாலு மகேந்திராவின் ஐந்து குறும்படங்கள்!

தமிழ்த் திரைப்படத்துறையில் பாலு மகேந்திரா தனது தடத்தை ஆழமாகப் பதித்துச் சென்றிருக்கிறார் என்பதில் ஐயமேதுமில்லை. ஈழத்தவர் என்ற முறையில் அவர் எமக்குப் பெருமை சேர்த்திருக்கிறார். குறிப்பாக ஒளிப்பதிவு, நெறியாள்கைத் துறைகளிலும் மற்றும் திரைக்கதை, உரையாடல், படத்தொகுப்பு ஆகியவற்றிலும் அவர் தனது திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

சுமார் ஐம்பத்தியிரண்டு குறும்படங்களை அவர் உருவாக்கியுள்ளதாகத் தெரிகிறது. அவற்றில் சுமார் பதினைந்து படங்களைப் பார்த்துள்ளேன். அவற்றில் அண்மையில் பார்க்க முடிந்தவற்றில் அப்பா, தப்புக்கணக்கு, காத்திருப்பு, நம்பிக்கை, ஒரு முக்கோணக் காதல் கதை ஆகிய ஐந்தினைப் பற்றிய மனப் பதிவுகளையே இங்கு பகிர முயல்கிறேன்!

பாலு மகேந்திரா, அடிப்படையில் தன்னை ஓர் இலக்கியக்காரனாகவே சில கட்டுரைகளில் அடையாளப் படுத்தியுள்ளார். அவரது குறும்படங்களின் உரையாடல்கள் அதனை நிரூபிக்கின்றன. அதுபோலவே, தன்னை இடதுசாரி முற்போக்கு அரசியல் கருத்து நிலை கொண்டவராகவும் வெளிப்படுத்தியுள்ளார். இதுவும், அவரது குறும்படக் கதைத் தேர்விலும் திரைக்கதை உரையாடல்களிலும் வெளிப்படுகின்றது.

தாத்தாவால் முக்கியப்படுத்தி ஊக்குவிக்கப்படும் - வித்தியாசமாகச் சிந்திக்கின்ற குழந்தை. மனிதாபிமானமற்ற முறையில் அதிகாரிகளால் சுரண்டப்படும் ஏமாற்றப்படும் கீழ்நிலை ஊழியர். காணாமல்போகும் மகனுக்காகத் துயரத்துடன் காத்திருக்கும் தாயும், குடும்பத்தவரும், விடலைத்தன உணர்வில் எழும் ஒருவனின் காதலுடன் முரண்படும் - விழிப்புங்கொண்ட பெண் ஆகியவர்களுடன், மதம் - சாதிய ஏற்றத்தாழ்வு நம்பிக்கைகளில் ஏற்பட்டுவரும் உடைவு போன்றனவும் இந்தக் குறும்படங்களில் முக்கியம் பெறுகின்றன.

பாலு மகேந்திராவின் மகன் ஷங்கி மகேந்திரா மூன்று படங்களின் ஒளிப்பதிவைச் செய்திருக்கிறார். இரண்டில் மட்டும் பாலு மகேந்திராவின் ஒளிப்பதிவு உள்ளது. எல்லாப் படங்களிலும் திரைக்கதை, உரையாடல், படத்தொகுப்பு, நெறியாள்கை என்பவற்றைப் பாலு மகேந்திராவே கையாண்டுள்ளார். இசையமைப்பை ஐசக் தாமஸ் கொட்டுக்காப்பள்ளி செய்துள்ளார்.



## அப்பா (19 நிமிடம்)

- எஸ். ஷங்கரநாராயணனின் சிறுகதை

சார்பதிவாளர் அலு...கை பெயர்ப்பலகையைக் கா...வதனுடன் ஆரம்பமாகிற படத்தில், ...ந்து ...திவுத் திருமணக் காட்சி. பதிவு மு...ந்து காரில் வருகையில் கதாநாயக மணமக...ின் நினைவு. ஓய்வுபெற்ற ஆசிரியரான தந்தையிடம் தன் காதலை வெளிப் படுத்தியமை விரிகின்றது.

பெயர் ஜெனிபர்.

என்னண்ணு சொன்னே?

ஜெனிபர்

கிறிஸ்ரியனா....?

நல்லா யோசனை பண்ணியிருக்கணும்.

நல்லா யோசனை பண்ணி எடுத்த முடிவுதான் இது.

என்ன மசிரு யோசனை பண்ணினே!

சாதிகள் இல்லையடி பாப்பா. நீங்கதானே அப்பா சொன்னீங்க.

ஆமா சொன்னேன். அது வகுப்பற. இது வாழ்க்கை.

நீங்க சொல்ற ஜாதி, மதம், குலம் எல்லாம் போயிற்றப்பா.... பாதிக்குப் பாதி போயிற்று.

.... ஜாதிக்காரன் ஜாதிக்காரன்னு சொல்றீங்க. நாங்க என்ன அவங்க தயவிலயா இருக்கோம்? நாங்க கஷ்ரப்பட்டப்ப ஒருத்தனாவது வந்தானா?

வீடு சென்றபோது தகப்பன் மணமக்களை ஏற்றுக்கொள்வதில்லை. ஆயினும் அவர்கள் தாமாகவே உள்ளே செல்கின்றனர். அவர் வெளியே செல்கிறார்!

வழியில் ஊர்க்காரர் ஒருவரைச் சந்திக்கிறார். அவரும் ஆச்சரியத்தைத் தெரிவித்தபோதும், அவருக்கு ஊக்கமளிக்கிறார்.

ஆ.... நம்ம ஊர்க்காரங்களப் பத்தி தெரியாதா? நாலு நாளைக்குப் பேசுவாங்க. அப்புறம் உங்க வீட்டுப் பந்தியிலேயே இடந்தேடுவாங்க.... மனசப் போட்டுக் குழப்பிக்காத.... தைரியமா இரு!

இன்னொரு நண்பரின் வீட்டுக்குச் செல்கிறார். அவரும் இவரின் குழப்பத்தையும் பேச்சையும் பார்த்து, நீ இன்னும் பதினெட்டாம் நூற்றாண்டிலயே இருக்கிறீயடா.... இந்த ஜாதி, மதம், குலம், கோத்திர மெல்லாம் உடஞ்சிட்டு வருதடா.... உன்னமாதிரி கொஞ்சப் பேர்தான் அதையே பிடிச்சு தொங்கிக் கிட்டிருக்கீங்க. மனசப் போட்டுக் குழப்பிக்காத. விசாலமா யோசியடா....

வீடு சென்றவரில் சிறிய மாறுதல். முதலில் உணவு வேண்டா மென்கிறார். பிறகு சாப்பிட வந்து, மருமகள் உணவு பரிமாறுவதைத் தடுத்தாலும், மகளைப் பரிமாறச் சொல்லிச் சாப்பிடுகிறார். இரவு தனக்குப் பக்கத்தில் மகன் வந்து படுக்கும்போது, நீயும் பொண்டாட்டியும் மொட்டமாடியில தங்கிக்கீங்க.... காத்தோட்டமாயுமிருக்கும் என்கிறார். மகன் மறுத்தபோது, மகளையும் சிறுவனான மற்ற மகனையும் அழைத்துக்கொண்டு மொட்டை மாடிக்குச் செல்கிறார். தனிமையில் மொட்டைமாடியில் நின்று அவர் யோசிக்கையில், கீழே மகனும் மருமகளும் மகிழ்வுடன் சிரிக்கும் ஒலிகள் கேட்கின்றன. சிறிய மலர்ச்சியான புன்னகை அந்த அப்பாவின் முகத்தில் பரவுவதுடன், படம் நிறைவுபெறுகிறது!

அப்பாவாக டெல்லி கணேசும், மகனாக சஷிகுமாரும் சிறப்பாக நடிக்கின்றனர். ஏனைய பாத்திரங்களும் மனதில் பதிகின்றனர்.



ஷங்கி மகேந்திராவின் ஒளிப்பதிவில் - படத்தின் காட்சிப்படுத்தலில், நல்ல திரைச் சட்டகங்கள் ஏராளமாக உள்ளன. பேனையால் எழுதும் சார்பதிவாளரின் கை (வெகு அண்மைக்காட்சி ECU). அண்ணனும் அண்ணியும் பக்கத்தில் இருக்க, தங்கை சாரதாவும் தம்பி ராஜுவும் சாப்பிட்டபடி கதைத்தல் (மத்திமக்காட்சி MS). தகப்பன், மகள், சிறுவன் ஆகியோர் படியேறி மொட்டைமாடிக்கு வருதல் (HAS உயர்கோணக் காட்சி) முதலியவற்றை உதாரணப்படுத்தலாம்.

மாறிவரும் சூழலையும் - முதலில் குழம்பினாலும் மெல்ல மாறும் - மனிதர்களையும் காட்டி, முற்போக்கான மன உணர்வுகளைப் பார்வையாளனிடம் தோற்றுவிப்பதில், நெறியாளராக பாலு மகேந்திரா வெற்றி காண்கிறார்!

## தப்புக்கணக்கு (24 நிமிடம்)

- மாலனின் சிறுகதை

வித்தியாசமாகச் சிந்திக்கும் குழந்தை. தலையில் அணியும் வூல் பான்ட்ஐக் கையில் போட்டிருக்கிறாள். தாய் கேட்டபோது சொல்கிறாள். எல்லாரும் தலையிலதான் மாட்டுவாங்க. அதாலதான்.... நான் கையில போட்டிருக்கேன்.

வகுப்பில் சொல்வதெழுதுதலில் ஆசிரியை சண் எனக் கூறுகிறார். இந்தக்குழந்தை மட்டும்தான் எழுதுமுன், மகனா சூரியனா? எனக் கேட்கிறது!

ஒரு கிழமையில ஏழு நாளின்னா இரண்டு கிழமையில எத்தின நாள்கள்? என்ற ½ ... X 7 = 14 என்று எழுதும்போது, 7 X 2 = 14 என்று இந்தக்குழந்தை மட்டும்தான் எழுத, ஆசிரியை தப்புக் கணக்கென்கிறார்! தான் சொல்லித் தந்த மாதிரித் தான் பதிலளிக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

புதுமாதிரியாக இருக்கவேண்டும் என்பதற்காக, தனது குறிப்புக் கொப்பியை கடதாசி வெட்டியால் இரண்டாக்கி (சிறியதாக்கி) வைத்துக்கொள்கிறாள். தாத்தா மட்டுமே அவளது ஆக்கத் திறமையைப் புரிந்து, எப்போதும் பாராட்டி ஊக்குவிக்கிறார்.

கிறேற். இது வித்தியாசமான சிந்தனை. மற்றக் குழந்தைகள் பட்டை கட்டின குதிரை மாதிரி ரீச்சர் சொன்னதை அப்பிடி எழுதியிருக்காங்க. இவ சுயமா சிந்திச்சு பதில் எழுதியிருக்கா! என்கிறார். ஆசிரியை, அதிபர், கல்வி அதிகாரி, பெற்றோர் யாருமே அவளது தனித்துவத்தை ஏற்கவில்லை. அதனால், அவளது செயல்களைத்தான் தப்பாகக் காண்கின்றனர்.

"ஆண்சர் கரெக்ட்தான் ஆனா மெதேட் தப்பு" என்கிறார் அதிபர்.

'முடிவுகள் சரியாக இருந்தா மட்டும் போதாது. அந்த முடிவுகளைச் சென்றடைகிற வழிகளும் சரியாக இருக்கணும்....' காந்தி சொல்லி இருக்கிறார். என்கிறார் கல்வி அதிகாரி. இறுதிக் காட்சியில், "வித்தியாசமா திங்பண்றதாலே பின்னாடி கஷ்ரப்படுவா.... பொம்பிளையாப் பிறந்தா ஊரோட ஒத்துப் போகணும். இல்லைண்ணா அவளுக்கும் அவஸ்தை.... மற்றவருக்கும்...." என்கிறார் தந்தை. குழந்தை திரும்பித் தாத்தாவைப் பார்க்கிறாள் அவளது துயர் படிந்த முகம் பார்வையாளரை நோக்கிக் கொண்டுவரப்படுவதுடன் (Zoom) படம் முடிகிறது. ஆயினும், எது சரியானது என்பது பற்றிய எண்ணங்கள் எம்முள் எழுந்து, எமது சாய்வு அந்தக் குழந்தை பக்கம்தான் என்பதும் உறுதியாகிறது. கல்வி முறையின் பலவீனங்கள், குழந்தை வளர்ப்பில் கருத்தில்கொள்ள வேண்டியவை என்பவற்றிலெல்லாம் கவனம் குவிக்கப்படுகிறது!

காட்சிப்படுத்தல் கதைக்குப் பொருத்தமான முறையில் செய்யப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில், மேலிருந்து கீழிறங்கும் கமெரா, மொட்டை மாடியில் நாற்காலியில் இருக்கும் தாத்தாவைத் தொலைவுக் காட்சியாகக் (LS) காட்டுகிறது. மாடியில் தாத்தா தியானம் செய்யும் அண்மைக் காட்சி (CU). தாத்தாவின் கையில், குழந்தை வெட்டி உருவாக்கிய இரண்டு குறிப்புப் புத்தகங்களின் வெகு அண்மைக் காட்சி (ECU). தாத்தா ஆசிரியையுடன் கதைக்கையில், மாறி மாறி ஒருவரது தோளின் மேலால் காட்டும் காட்சி (OSS) முதலியன கூடுதலாக மனதில் பதிகின்றன.

தாத்தா (ராமன் நாயர்), குழந்தை (பேபி ரஜனிஷா). ஆசிரியை (சுஜிதா). தாய் (ரித்திகா), தகப்பன் (தலைவாசல் விஜய்), கல்வி அதிகாரி (L.I:C. நரசிம்மன்), அதிபர்(அமரசிகாமணி) ஆகிய பாத்திரங்கள் நன்கு உருவாகியுள்ளன. நடிகர்களின் இயல்புத்தன்மை பாராட்டுக்குரியது. இசை மென்மையானதாக பொருத்தமாகக் கையாளப்பட்டுள்ளது. குறிப்பாகக் கடைசிக் காட்சியில் குழந்தையின் துயரத் தோற்றப் பின்னணியில் எழும் இசை வலுவானது!

(வளரும்)




மலையாளத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட படங்களை இயக்கிய-பிரபல இயக்குநர் துளசிதாஸ் தமிழில் இயக்கும் படம் இனி வரும் நாள்கள். எம்.ஜே.டி. புரொடக்ஷன் தயாரிப்பில் உருவாகும் இந்தப் படத்தில் முழுக்க. முழுக்க பெண்கள் மட்டுமே நடித்திருக்கிறார்கள். ஒரு இடத்தில் கூட ஆண்கள் நடிக்கவில்லையாம்.

இந்தப் படத்தில் இனியா, ஆர்த்தி, சுபிக்சா, ஈடன், அர்ச்சனா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள். முக்கிய கதாபாத்திரத்தில் நதியா நடிக்கிறார்.

ஆய்வு செய்யப் போகும் கல்லூரி மாணவிகளின் பயணத்தில் நடக்கும் எதிர்பாராத சம்பவமும், அதை தொடர்ந்து நடக்கும் அதிர்ச்சிகளும், சஸ்பென்ஸ் கலந்த திரில்லர் திரைக் கதையாக அமைத்திருக்கிறார்கள்.

பெண்களுக்கு நடிப்பில் முக்கியத்துவம் எல்லா படங்களிலும் கிடைத்து விடுவதில்லை. ஆனால் இந்த படத்தில் முழுவதுமே பெண்கள் மட்டும் நடிப்பதால், அவர்கள் தங்கள் திறமையை வெளிக்காட்ட ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

பாட்டு, சண்டை, காமெடி என்று பொழுதுபோக்கு அம்சங்களும் படத்தில் நிறைய இருக்கின்றன.

படத்தில் கதாநாயகிகள் இருக்கிறார்கள் கதாநாயகன் எங்கே? என்று கேட்டதற்கு படத்தின் திரைக்கதையே நாயகன் என்று இயக்குநர் துளசிதாஸ் கூறுகிறார்.

# ஆங்கிலப்படத்தில் விஜய்?

ஜாக்மைக்கேல் மற்றும் ஹரிணி நடிப்பில் அப்சரா ராம்குமார் இயக்கத்தில் வெளிவர உள்ளத் திரைப்படம் 'ஒண்ணுமே புரியல'. இந்தப் படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் சகோதரியான எ.ஆர்.ரிஹானா இசையமைக்கவுள்ளார். இவர் ஏ.ஆர்.ரஹ்மானுடன் 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் பணியாற்றியதன் மூலம் அறியப்பட்டவர்.

சைக்கலாஜிக்கள் திரில்லர் படமான, இதன் ஆங்கிலம் மற்றும் ஜெர்மன் ரீமேக் உரிமையை ஐரோப்பிய நிறுவனம் ஒன்று வாங்கியுள்ளது. முதலில் இந்தப் படத்தை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யத் திட்டமிட்டுள்ளது இந்த நிறுவனம். ஆங்கில மொழியில் தென்னிந்திய நடிகர் ஒருவர் நடித்தால் நன்றாக இருக்கும் என அந்த நிறுவனம் விரும்புகிறது. அதிலும் குறிப்பாக விஜய் அந்தப் படத்தின் ஆங்கிலப் படத்தில் நடித்தால் பொருத்தமாக இருக்கும் என ஐரோப்பிய நிறுவனம்



கருதுகிறது. அதற்காக விஜய்யின் தந்தை எஸ். ஏ.சந்திரசேகரிடம் நிறுவனம் பேசிவருகிறது.

விஜய், தற்போது சிம்புதேவன் இயக்கத்தில் 'புலி' படத்தில் நடித்து வருகிறார். அதைத் தொடர்ந்து அட்லீ இயக்கத்தில் நடிக்கவிருக்கிறார். 2015 ஆம் ஆண்டு விஜய் 'ஒண்ணுமே புரியல' படத்தின் ஆங்கில மொழிமாற்றத்தில் நடிப்பது பற்றி எந்த முடிவும் இதுவரை எடுக்கவில்லையாம். எனினும் இந்தப் படத்தில் விஜய் நடித்தால் ஆங்கில சினிமாவில் நடிக்கும் இரண்டாவது தமிழ் சினிமா நடிகராக விஜய் இருப்பார்.

# என்னை அறிந்தாலுக்கு ஷாலினி

ரசிகர்கள் பலரும் 'என்னை அறிந்தால்' படத்தை முதல்நாளே பார்க்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் பார்த்து வருகின்றனர். அனைத்து தல ரசிகர்களும் விரும்புவதைப்போல அவரின் ரசிகையும், மனைவியுமான ஷாலினியும் இந்தப் படத்தை பார்க்க சென்னையின் பிரபல திரையரங்கு ஒன்றுக்கு வந்திருந்தார். ரசிகர்களின் மகிழ்ச்சியை பார்ப்பதற்காகவே சிரமத்தையும் பொருட்படுத்தாமல் கர்ப்பமாக இருக்கும் ஷாலினி தனது சகோதரர் ரிச்சர்டுடன் வந்தார்.






தமிழ் சினிமாவில் சமீப காலகட்டத்தில் நல்ல கதைகளுக்குப் பஞ்சம் இருக்கிறதோ இல்லையோ, அனைவரையும் கவர்ந்திழுக்கும் அளவுக்கு ஒரு தலைப்புக்கு கண்டிப்பாக பஞ்சம் எப்போதும் இருந்துகொண்டேதான் இருக்கிறது.

விலங்குகளின் பெயர்களை தலைப்பாக வைப்பது இப்போது ஒரு திருப்பமாகவே மாறிவிட்டது போல. சிங்கம், சுறா, புலி, சிறுத்தை, என இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும். வெகு நாள்களாக சினிமாப்பக்கமே வராத வடிவேலு, சென்ற வருடம் 'தெனாலிராமன்' படத்தின் மூலம் தன்னுடைய இரண்டாவது கட்டத்தை தொடங்கினார். அந்தப் படம் ஆட்டம் கண்டதால், அடுத்து அவரை வைத்துப் படம் தயாரிக்க யாரும் முன்வராததால் சற்று ஒதுங்கியே இருந்தார். இப்போது அவர் மீண்டும் 'தெனாலிராமன்' இயக்குநர் யுவராஜ் கூட்டணியில் 'எலி' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தின் சுவரொட்டி தற்போது வெளிவந்துள்ளது. அதில் அவர் மீண்டும் அனைவரையும் சிரிக்க வைக்கும் அளவுக்கு ஒரு நகைச்சுவை தோற்றத்துக்கு திரும்பியுள்ளது தெளிவாக தெரிகிறது.

# சூர்யாவுக்கு ஜோடியாக அமலாபால்



பாண்டியராஜ் இயக்கத்தில் உருவாகி வரும் 'குழந்தைகள்' படத்தில், சூர்யாவுக்கு ஜோடியாக அமலாபால் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

சிம்பு நடிப்பில் 'இது நம்ம ஆளு' படத்தை இயக்கி வருகிறார் பாண்டிராஜ். அந்தப் படத்தின் படப்பிடிப்பு தாமதமாகி வரும் காரணத்தால் சூர்யாவின் தயாரிப்பில் ஒரு குழந்தைகளுக்கான படத்தை இயக்கி வருகிறார்.

இந்தப் படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு முடிவுற்று இருக்கிறது. இந்தப் படத்தில் பிந்து மாதவி முக்கிய பாத்திரத்தில் நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இந்தப் படத்தில் சூர்யாவும் கௌரவ கதாபாத்திரத்தில் நடிக்கவிருக்கிறார். அவருக்கு ஜோடியாக நடிக்க அமலா பால் ஒப்பந்தமாகி இருக்கிறார். 'வேலையில்லா பட்டதாரி' படத்தில் கல்யாணத்துக்கு முன்பு நடித்தாலும், கல்யாணத்துக்கு பிறகு வெளியானது. ஆகையால், அமலா பால் திருமணத்துக்கு பிறகு ஒப்பந்தமாகி இருக்கும் முதல் தமிழ் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

'இது நம்ம ஆளு' முழுப் படப்பிடிப்பையும் முடித்துவிட்டு, இந்தக் 'குழந்தைகள்' படத்தில் கவனம் செலுத்த திட்டமிட்டு இருக்கிறார் இயக்குநர் பாண்டிராஜ்.



# கார்த்தியுடன் விவேக்

தமிழ்ச் சினிமாவின் சிறந்த நகைச்சுவை நடிகர்களில் விவேக்கும் ஒருவர். இவர் சில வருடங்களாக சினிமாவில் நடிக்கவில்லை. தற்போது மீண்டும் என்னை அறிந்தால், 'வை ராஜா வை' ஆகிய படங்களில் நடித்தார். இந்த நிலையில் கோகுல் இயக்கத்தில் கார்த்தி நடிக்கும் படம் காஷ்மோரா. இந்தப் படத்தில் ஒரு முக்கியமான கதாபாத்திரத்தில் விவேக் நடிக்கவுள்ளார். இவர்கள் முதன்முறையாக கூட்டணி அமைக்கிறார்கள்.

# ஈரானிய படத்தில் ரஹ்மான்



ஈரானிய சினிமாவை உலகளவில் பேச வைத்த படம் சில்ட்ரன் ஆஃப் ஹெவன். இந்தப் படத்தை மஜித் மஜிதி என்பவர் இயக்கியிருந்தார். இந்தப் படம் 1997இல் வெளிவந்து உலக ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

ஒரு ஜோடி ஷூவையும் இரண்டு சிறு குழந்தைகளையும் வைத்துக்கொண்டு உலக ரசிகர்களை தன் பக்கம் ஈர்த்தார் இயக்குநர்.

உலகப் பட விழாக்களில் நூற்றுக்கணக்கான விருதுகளை குவித்த இந்தப் படம் இப்போதும் உலக சினிமா ரசிகர்களால் கொண்டாடப்படுகிறது. இந்தப்படம் போல் 'த கலர் ஆப் பாரடைஸ்', 'த சாங் ஆப் ஸ்பாரோ' ஆகிய படங்கள் 'அன்பை பேசும்' தரமான திரைப்படங்களையும் அவர் அளித்தார்.

அப்படிப்பட்ட இயக்குநருடன் இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான் இணைந்து பணியாற்றி வருகிறார். இந்த இணைப்பு பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த சில மாதங்களாக மஜித் மஜிதி இயக்கி வரும் இந்த ஈரானியப் படத்தின் இசையமைப்புப் பணிகளுக்காக ஏ.ஆர்.ரஹ்மான் அங்கேயே தங்கிவிட்டாராம்.

இந்தப்படத்துக்காக உலக புகழ் பெற்ற பாலஸ்தீன இசை குழுவினரான லி ட்ரையோ ஜோப்ரானுடன் ஏ.ஆர்.ரஹ்மான் இணைந்து பணியாற்றி வருகிறார்.

# போகியில் திரிஷா

புதுப்படம் ஒன்றில் நடிக்க திரிஷா ஒப்பந்தமாகியுள்ளார். இந்த படத்துக்கு போகி என பெயரிடப்பட்டு உள்ளது. இதில் திரிஷாவுடன் ஓவியா, பூனம்பாஜ்வா ஆகியோரும் நடிக்கின்றனர்.

எந்த இலக்கும் இல்லாமல் பயணிக்கும் மூன்று பெண்களை பற்றிய கதையே இந்தப்படம். இதை பூபதி பாண்டியன் இயக்குகின்றார். இவர் அருண்குமார், மந்த்ரா நடித்த ப்ரியம் படத்தை இயக்கி பிரபலமானவர். இதன் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது.

ஓவியா, பூனம் பாஜ்வாவுடன் இணைந்து நடிப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது என்று திரிஷா டுவிட்டரில் குறிப்பிட்டு உள்ளார்.



# உச்ச நீதிமன்றில் ரஜனி

படத் தலைப்பு விவகாரத்தில் நடிகர் ரஜினிகாந்துக்கு சாதகமாக உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதால், தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்துக்கு செல்லப் பட தயாரிப்பாளர் முடிவு செய்துள்ளார்.

தமிழில் பல்வேறு படங்களில் வில்லன், குணச்சித்திர வேடங்களில் நடித்திருப்பவர் ஆதித்ய மேனன். இவர் நடிக்கும் இந்தி படம் மே ஹூன் ரஜினிகாந்த். ஃபைசல் சைப் என்பவர் இயக்கி உள்ளார். இந்தப்படத்தின் தலைப்பை எதிர்த்து ரஜினிகாந்த் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

அதில், எனது கௌரவத்தையும், மக்களிடம் எனக்குள்ள மரியாதையையும் கெடுக்கும் வகையில் இந்தப் படத்தின் கதை அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் முன்னோட்டம், தகவல்கள் மற்றும் படங்கள் ஆகியவற்றை பார்த்தபோது இந்த விவரம் தெரியவந்தது. எனவே இந்தப்படத்துக்கு என் பெயரை பயன்படுத்தக்கூடாது எனத் தடை விதிக்க வேண்டும்' எனக் கூறியிருந்தார்.

அதை ஏற்று படத்துக்கு இடைக்கால தடை விதித்த சென்னை உயர் நீதிமன்றம், பின்னர் படத்தின் தலைப்பை மாற்றுமாறு ரஜினிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியது.

இதனைத் தொடர்ந்து இந்தத்தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றம் செல்ல தயாரிப்பாளர் முடிவு செய்துள்ளார்.

இந்தஇரு படங்களிலும் இரு படங்களிலும் 05 வித்தியாசங்கள் உள்ளன. கண்டு பிடியுங்கள்.





## வர்ணம் தீட்டுங்கள்



## வயிற்றுப் பிழைப்புக்காக...

குரங்குக் குட்டி பல்லைக் காட்டி அனைவரையும் மிரட்டியது. குரங்குக்குட்டிக்கு ஒல்லியான கைகளும், கால்களும் இருந்தன. தனது நீண்ட வாலால் மரத்தின் கிளையைப் பிடித்துக்கொண்டு தலைகீழாகத் தொங்கியது. தலையில் அலுமினியப் பாத்திரத்தை வைத்துக் கொண்டு ஆடி ஆடி நடந்தது.

குரங்காட்டி குரங்குக்குட்டியின் இடுப்பில் கயிற்றைக் கட்டியிருந்தான். கயிற்றைச் சுண்டியிழுத்த பொழுதெல்லாம் குரங்குக் குட்டி, குட்டிக் கரணம் அடித்தது.

குரங்காட்டி பாடினால், குரங்குக்குட்டி ஆடியது.

பார்த்துக் கொண்டிருந்த மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். காசுகளை விரித்திருந்த துணியில் போட்டனர்.

குரங்குக் குட்டி காசு ஒன்றை எடுத்துக் கடித்துப் பார்த்தது. காசை அதனால் தின்ன முடியவில்லை. குரங்காட்டியைப் பார்த்தது. குரங்காட்டி பையிலிருந்து ஒரு வாழைப்பழத்தை எடுத்து குரங்குக் குட்டிக்குக் கொடுத்தான். குரங்குக்குட்டி மகிழ்வோடு தின்றது.

குரங்காட்டி காசுகளை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு நடந்தான். குரங்குக் குட்டி ஆடுவது பழத்துக்காக, குரங்காட்டி பாடுவது காசுக்காக...மொத்தத்தில் அவர்கள் ஆட்டமும் பாட்டும் அவர்களது வயிற்றுப் பிழைப்புக்காக...

## குட்டி முயல்

குட்டி முயல்
எனது வீட்டில்
பாசத்தோடு நான்
அதனைப் பார்த்து
வளர்த்தேன்
கரட் கொடுத்தேன்
கீரைகொடுத்தேன்
சந்தோசமாக
கூடினிலே போட்டு
வைத்தேன் காவலுக்காக
அன்று மாலை
டியூசன் வகுப்பு
சென்று விட்டேனே
திருடன் ஒருவன்
என் முயலை
தூக்கிச் சென்றான்
முயலைக் காணோம்
முயலைக் காணோம்
என்று அலறினேன்
எனது அப்பா
செல்லக் குட்டி
நீ இருக்க எனக்கு
ஏன் முயல்
குட்டி என்று
அப்பா அள்ளி
அணைத்தார்



## படித்ததில் பிடித்தது

01. நீ தனிமையில் இருக்கும்போது உனக்கு என்ன என்ன தோன்றுகிறதோ அதுதான் உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும். - விவேகானந்தர்.
02. வெற்றி என்பது நிரந்தரமல்ல;
தோல்வி என்பது இறுதியானதுமல்ல!
03. ஒரு நொடி துணிந்தால் இறந்துவிடலாம்.
ஒவ்வொரு நொடியும் துணிந்தால் நாம் ஜெயித்து விடலாம்.
04. நூறு வார்த்தைகள் வலியை ஏற்படுத்தாது; ஆனால்,
ஒரு நல்ல நண்பனின் மௌனம்
இதயத்தில் அதிகக் கண்ணீரை ஏற்படுத்தும்.
05. நல்ல முடிவுகள், அனுபவத்திலிருந்து பிறக்கின்றன;
ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது.
- பில் கேட்ஸ்
06. சிக்கல்கள் என்பவை, ஓடும் ரயிலிலிருந்து பார்க்கும் மரங்களைப் போன்றவை. அருகில் போனால் அவை பெரிதாகத் தெரியும்.
அவற்றைக் கடந்து சென்றால்
அவை சிறிதாகிவிடும். இதுதான் வாழ்க்கை!

## அறிந்ததும் அறியாததும்

- © உலகில் உள்ள பறவைகளில் மிகப் பெரியது எது? - தீக்கோழி
- © வெறும் கண்களால் பார்க்க முடியரத கோள் எது? - யூரேனஸ்
- © ஜப்பானின் தலைநகரம் எது? - டோக்கியோ
- © பாம்பு எதன் மூலம் வாசனையை உணர்கிறது? - நாக்கு
- © திரை அரங்குகளே இல்லாத நாடு எது? - பூட்டான்
- © உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம் எது? - முதலை
- © எந்தக் கண்டத்தில் கங்காரு, பனிக்கரடி உள்ளது? - நோர்வே
- © நள்ளிரவு சூரியன் உதிக்கும் நாடு எது? - நோர்வே
- © உலகிலேயே உயரமான சிகரம் எது? - எவரெஸ்ட்
- © ம்ரத்தின் கிளைகளிலிருந்து வேர்களைத் தோற்றுவிக்கும் தாவரம் எது? - ஆலமரம்



சோமு :- திடீர் என்று அதிகாரி வந்து சமூக நிறுவனத்தை பரிசோதனை செய்து நிறையப் பொருள்கள் குறைவதைக் கண்டுபிடித்ததும், கிளார்க் பூச்சி மருந்தைக் குடிச்சு விட்டார்.

தாமு:- அய்யய்யோ..: அப்புறம்?

சோமு:- அப்புறமென்ன, பூச்சி மருந்தும் ஒரு போத்தல் குறையுது என்று அதிகாரி ரிப்போர்ட் பண்ணிவிட்டார்.

## பறவைகள் எவ்வாறு மேல் நோக்கிப் பறக்கின்றன?

காகிதத்தின் மீது வேகமாக ஊதும் போது, காகிதத்தின் மேல் பகுதியில் காற்று அதன் கீழ் பகுதியை விட வேகமாக நகரும். இந்த வகையில் காற்றில் ஏற்படும் வேறுபாடு காகிதத்தை மேல்நோக்கி தூக்கச் செல்கிறது. அது போன்றே பறக்கும் பறவையின் மேல் பகுதி, அதன் கீழ் பகுதியை விட வேகமாக நகருகிறது. இந்தக் காற்றின் செயல்பாடே பறவையை மேல்நோக்கி உயரச் செய்து பறக்க வைக்கிறது.

பறப்பது என்பது கடினமான வேலை. எல்லா பறவைகளும் எல்லா நேரமும் சிறகுகளை அடிப்பதில்லை. சில பறவைகள் குறிப்பிட்ட இடைவெளியில் சிறகடிப்பதை நிறுத்தி சக்தியை சேமிக்கின்றன.

சில பறவைகள் ஒரே நேர்க்கோட்டில் பறக்கும். பறக்க உதவும் ஒவ்வொரு சிறகும் லட்சணக்கணக்கான நுண்ணிய இழைகளைக் கொண்டிருக்கும். இவை ஒன்றுக்கு ஒன்று சேர்ந்து சிறகிற்கு வடிவம் தருகிறது. கடுமையான காற்றடிப்பின் போதும் இவை தாக்குப் பிடிக்கும்.



# கவிதைப்புனல்



## காலம் தந்த காயங்கள்


சுழலும் பூமியில்
காலங்களும்
நகர்ந்து கொண்டிருக்கின்றன
முடிந்து போகும்
வாழ்க்கையில்..
எண்ணங்கள் மட்டும்
முடிவின்றி
நீண்டு கொண்டே
செல்கின்றன
ஆழமாக சிந்தித்தால்
சில வேளைகளில்
எல்லாமே அர்த்தமற்ற
பொழுதுகளாகவே
நகர்ந்து கொண்டிருக்கின்றன
கடந்து போன காலங்களை
எதிர்பார்க்கவும் இல்லை
நிகழ்கால ஓட்டத்தையும்
நினைத்துப் பார்க்கவே இல்லை
இனி வரும் காலமும்
இப்படித் தான் என
முடிவு பண்ணவும் இல்லை
காலங்கள் தந்த காயங்களோடு
கடந்து போகும்
ஒவ்வொரு மணித்துளிகளும்
கண்ணீரோடு
கரைகின்றன

-வேல்மகன்,
புளியம்பொக்கணை

பசியோடு
அள்ளிய சோறு
பாசத்துடன் போகிறது
பிள்ளையின்
வாய்க்குள்

-ராசன்

## தாய்மை



## பெண்ணியம்

பெண்ணினம்
வீட்டுக்குள் அடங்கி
இருந்த காலம் மாறி
விண்ணுக்குக் கூட
நங்கையர் செல்லும்
காலமாகியது இன்று
தமக்கு எதிரான
கொடுமைகளை அழிக்க
பாரதியின் புதுமைப்
பெண்ணாக
இன்றே தயாராகு தோழி!
புதுயுக மங்கை
நீயென
உலகுக்கு புரிய
வைப்பாயாக!

-யசிந்தா

## அவளிடம் வேண்டுதல்கள்

உணர்வுகள் கொந்தழிக்கும்
தருணங்களில்
என்னுள் வந்து
போகிறாள்

மௌனங்களில் நீபோடும்
சோகங்களில்
வெட்டுண்டு கிடக்கிறக்
வேதத்தின் பொருளானவளே!

சாலையோரம் நீ பூக்கையில்
கோடை காலமும் மாறியாச்சு
தாடி வளர்த்த கம்பன் நான்
தரமறந்து நீயும் விரைந்ததேன்

ஒவ்வொரு பூக்கள் உதிர்கையிலே
எனக்குள் ஏதேதோ வேதனைகள்
முடி உதிராத நினைவுகளுக்காக
ஏக்கங்கள் இங்கே பூக்கிறது

சாமங்கள் தாண்டி
கனவிலாவது வந்துவிடு
ஆத்மார்தமான உணர்வுகளுக்கு
அன்பே உந்தன் அணைப்பு
தேவை

மனங்குழம்பும் வேளைகளில்
அன்பே உனைத் தேடுகிறேன்
உனது மடியில் தலை வைத்து
நீண்ட நாள் உறங்கிட ஆசையடி

மனித வாழ்க்கை கொஞ்சம் தான்
மனமே என்னை தழுவுதடி
உணர்வுகளின் வேண்டுதலோ
அதிகமாக உள்ளதடி

சொத்து சுகம் என்ப தெல்லாம்
நாளை அழிந்து போகுமடி
நீயும் நானும் நிலைப்பதற்கு
நீ என்னுள் இணைய
வேண்டும்

-வே.வே.அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.



## அன்றொரு நாள்..

அன்றொரு நாள்..
மழைகாலம்..
பூங்காவில்
ஆலமரக் குடையில்
உன்னருகில் நான்!
காதலி நீ கவிதை கேட்டாய்..
மேடு பள்ளம்
வளைவு நெளிவு
ஏற்றம் இறக்கம்..
இவை கொண்ட பாதை நீ..!
உன்னில் மழைவெள்ளமாக
என்னை பொழியவிடு..!யென்று
முடிப்பதற்குள்..

ச்சீய்....யென்று
சிலிர்த்தாய்..

உன் எச்சில் தூறல்
எனை நனைத்து
என் செல்களில்
எல்லாம் அடை-மழை!

-மைதேகன்

## பிரிவலைகள்

கடற்கரை மணல் படலத்தில்
காலடித் தடயங்களாக
அன்பு...
அரவணைப்பு...
சண்டைகள்...
சமாதானங்கள்...
கேலி...
கிண்டல்....
ஒற்றுமை...
சொல்ல முடியாத
நகைச்சுவைகள்.

ஊர்ந்து வந்த
அலைகளால். . .
முன்கூட்டியே
நெஞ்சத்தடத்தை
அரித்த காயம்
தழும்பானது....

சுற்றுலாவில்....



-காயத்திரி

## அவள் நினைவுகள்

அவள்
இதயச் சுடரில்
எரிந்து சாம்பலானத்
எனது கனவுத்
தொழிற்சாலை

காதலில் ஏற்பட்ட
வீழ்ச்சி
என் இதயத்தில்
இன்றில்லை மகிழ்ச்சி
கண்களிலோ
நீர்வீழ்ச்சி

அவள் சொல்லுக்குள்
இனிப்பு
அவள் மனதினில்
ஏனோ கசப்பு
காலத்தின் தீர்ப்பு
இன்று நான்
கண்ணீருடன் தவிப்பு

சோக மனம் கொண்ட
வானுக்காக
இந்தக் காற்று கூட
கண்ணீர் வடிக்கிறது

எனக்காக மரணம் கூட
மறு பரிசீலனை செய்கிறது

ஆனால் வஞ்சி
உன் மனம் மட்டும்
இறுகிய பாறையாக.....
என் விழிநீர் துடைக்க
உன் விரல் கேட்டேன்
நீயோ கொள்ளிக்கட்டையை
எடுத்து கண்ணில்
சொருகுகிறாய்

காதல் வரம் கேட்டவனுக்கு
சாகாவரம் கொடுத்துவிட்டு
சந்தோசப்படும் என்
தேவதையே

என் கண்ணீரிலும்
உன் பெயரை தான் எழுதிப்
பார்த்தேன்
உன் மூச்சிக் காற்றால்
முற்றிலும் அழிந்து போனது

என் நெஞ்சில் பதிந்த
உன் நினைவுகள் மட்டும்
அழியாமல் இன்னும்
அப்படியே

-பாரோ

# வென்றது ஜெசிக்கா:தோற்றது நாம்

**- இனியொருவன்**



பிரித்தானியாவில் தற்காலிகப் பாலுறவோடு மட்டும் திருப்தியடைபவர்களின் எண்ணிக்கை அதிகமாவதாகவும் திருமணம் செய்துகொள்பவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் குறைந்து செல்வதாகவும் விவாதங்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். கடந்த வருடம் விவாகரத்து விகிதம் சிறிய அளவில் குறைந்திருப்பதாக பெருமை பேசிக்கொள்ளும் அரசாங்கத்துக்கு சிதைந்து செல்லும் சமூகத்தின் பெரும் பகுதியை நிறுத்த முடியவில்லை.

உலகத்தின் ஒரு பகுதியில் மக்கள் கொத்துக்கொத்தாக அழிக்கப்பட அமெரிக்காவில் கிம் காட்டாஷியன் என்ற பெண் தனது ஆண் நண்பருடன் பாலுறவில் ஈடுபட்ட காணொளியை தொலைக்காட்சிகள் எல்லாம் பரபப்பாக ஒளிபரப்புகின்றன. கிம் உம் சகோதரிகளும் அமெரிக்காவில் ரோல் மொடல்கள் ஆகிவிடுகிறார்கள்.

மில்லியன்கள் அவர்கள் வசமாகின்றன.

தொலைக்காட்சி ஒன்றின் 'ரியாலிட்டி ஷோ' ஒன்றில் நிர்வாணமாக வீடொன்றில் ஒரு பெண் அலைந்து திரிகிறார். அவர் யாரோடு எப்போது பாலுறவு வைத்துக்கொள்வார் என்பதை அறிய குடும்பம் குடும்பமாக தொலைக்காட்சிக்கு முன்னால் காத்திருந்தார்கள்.

சமூக வலைத் தளங்கள், குறுஞ் செய்திகள் என்று தொடர்பு சாதனங்கள் இதனைப் பேசிக்கொண்டன. நாங்கள் தான் அதிகம் செக்சியானவர்கள் ஆக நாமே இப்படியான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டும் என பிரஞ்சுப் பெண் தேசியம் பேசியதை ஒரு பத்திரிகை வெளியிட்டது.

மூன்றாமுலக நாடுகளில் பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள் என்று மேற்கு மயப்பட்ட நவ தாராளவாதப் பெண்ணியவாதிகள் கூச்சலிடுவதைக் கேட்டிருக்கிறோம். மேற்கில் பெண்கள் அங்கீகரிக்கப்பட்ட பாலியல் அடிமைகளாகவே மாற்றப்பட்டுள்ளனர். இந்த மாற்றம் சிறுகச் சிறுக நடத்தப்பட்ட பண்பாட்டு அழிப்பின் ஊடாகவே நடைபெற்றுள்ளது. பண்பாட்டையும் அவற்றின் தொகுப்பான கலாச்சாரத்தையும் கூட்டுணர்வும், உழைப்பும் கொண்ட புதிய நிலைக்கு வளர்த்தெடுப்பதற்குப் பதிலாக அவற்றை அழித்துச் சிதைத்துள்ளார்கள்.

அதன் விளைவுகளையே நாங்கள் இன்று காண்கிறோம்.

அறுபதுகளின் இறுதியில் ஐரோப்பா முழுவதும் போராட்டங்கள் தோன்றின. மக்கள் உரிமைக்காகக் குரல்கொடுத்தார்கள். தமது உழைப்புக்குத் தகுந்த பெறுமானத்தை வழங்க வேண்டும் என்று ஆரம்பித்த போராட்டம் பல்வேற்ய் தளங்களில் ஐரோப்பாவை அதிரவைத்தது. அந்தப் போராட்டங்களைக் கண்டு அஞ்சிய அதிகாரவர்க்கம் பாலியல் சுதந்திரத்தை அறிமுகப்படுத்துவதன் ஊடாக சமூகத்தின் சிந்தனையை மாற்ற முற்பட்டது. உரிமை கேட்போரைத் தடுப்பதற்கான் ஒரு ஆயுதமாக பாலியலைப் பயன்படுத்தியது.

சமூகத்தின் அரைவாசிப் பகுதியான பெண்கள் ஆண்களின் பாலியல் சார்ந்த தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான அடிமைகளாக சமூகத்தின் முன்னர் நிறுத்தப்பட்டனர். அறுபதுகளின் இறுதிப் பகுதியிலிருந்து ஐரோப்பாவில் அறிமுகப் படுத்தப்பட்ட நவ தாராளவாதக் கலசாரத்தின் பிரதான பகுதியாக இது செயற்பட்டது. மூன்றாமுலக நாடுகளில் பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுகின்றனர் என்றால் ஐரோப்பிய நாடுகளில் தமது பாலியல் உறுப்புக்களைக் காட்டியே சமூக அங்கீகாரம் பெற முடியும் என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர். சமானியப் ஐரோப்பியப் பெண் ஒருவர் மார்பங்களை யும், தொடைகளையும் மூடிக்கொண்டு விழா ஒன்றுக்குச் சென்றால் வேடிக்கை யாகவே அவரைப் பார்ப்பார்கள்.

அதிகாரவர்க்கத்தின் இந்தத்திட்டங்களை கருத்தியல் ரீதியாகச் செயற்படுத்தும் கருவிகளாக ஊடகங்களே செயற்பட்டன.

அறுபதுகளிலேயே இதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் ஊடகத் துறைக்குள் நுழைந்த பல்தேசிய மாபியாக்களுள் பிரதானமாவர் ரூபெட் மெடொக் என்பவர். பிரித்தானியாவில் இவர் நடத்தும் சண் நாளிதழை வழமையாக அலுவலகங்களிலும் வீடுகளிலும், ஏன் பள்ளிகளிலும் கூடக் காணலாம். அந்த இதழின் இரண்டாம் பக்கத்தில் முழு நிர்வாணப்படம் ஒன்று வெளிவருவதைப் பற்றி யாரும் அசட்டை செய்வதில்லை.

முதலில் ஐரோப்பிய நாடுகளில் பின்நவீனத்துவம் போன்ற தத்துவங்கள் ஊடாகவும் பின்னர் லத்தீன் அமெரிக்க நாடுகளில் மஜிகல் ரியலிசம் என்றும் கலாசாரத்தைச் சிதைத்து அவற்றின் தவறான விழுமியங்களை மட்டும் வாழ வைத்த அதிகார வர்க்கம் ரூபட் மெடகொக்கை ஆலமரம் போல வளர்த்துவிட்டது.

மெடொக்கின் பொக்ஸ் தொலைக்காட்சி நேரடியாக நிறவாதம் பேசுவதை எல்லாம் அரசுகள் கண்டுகொள்வதில்லை. பிரித்தானியாவில் ரூபெட் மெடொக் குடும்பம் அரசுகளை மாற்றுவதில் நேரடியான பங்கு வகித்திருக்கிறது.

ஊடகத் துறையில் ஐந்து தசாப்தங்களாக பழம் தின்று கொட்டை போட்ட மெடொக் அரசியல்வாதிகள் தொடர்பான தகவல்களை திரட்டிவைத்துக்கொள்வார்.. தான் விரும்பும் தலைவர்களை ஆட்சியிலமர்த்த அவர்களைப் பயன்படுத்திக்கொள்வார்.

மெடொக் போன்றவர்கள் ஏற்படுத்திய இவ்வாறான எல்லாச் சிதைப்பு நடவடிக்கைகளும் இன்றைய ஐரோப்பியச் சமூகத்தை உருவாக்கியுள்ளது. அதன் வளர்ச்சி தடுக்கப்பட்டு பாலியல் வக்கிரமும் பண வெறியும் கொண்ட் சமூகமாக மாற்றப்பட்டுள்ளது.

இதே மெடொக் இந்தியாவில் தோற்றுவித்த தொலைக்காட்சியின் பெயர் தான் விஜய் ரீவி.

தமிழ் நாட்டில் நடத்தப்படும் சுப்பர் சிங்கர் போன்ற ரியாலிட்டி ஷோ என்ற மூடி மறைக்கப்பட்ட உணர்ச்சி வியாபாரத்தின் ஊற்றுமூலமே விஜய் தொலைக்காட்சி தான்.

குழந்தைகளை வைத்து உணர்ச்சி வியாபாரம் நடத்தும் இந்த நிகழ்ச்சி இன்று புலம் பெயர் நாடுகளிலும் பிரபலம். லண்டனில் தனது அலுவலகத்தை வைத்திருக்கும் விஜய் தொலைக்காட்சி ஒடுக்குமுறை காரணமாக இடம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் வாழ்வை ஆக்கிரமித்துள்ளது. பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கலாசாரம் என்று அறிமுகப்படுத்துவது கூட இந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையே.

சுப்பர் சிங்கர் தொடர் ஒன்றில் பாலியல் வக்கிரங்களோடு கூடிய பாடலைப் பாடிய ஒரு பச்சிளம் குழந்தையை நோக்கி, தேவையான பாவங்களோடும் பீலிங் உடனும் அந்தப்பாடலைப் பாடியிருப்பது தம்மை அசத்தியிருப்பதாக நடுவராக வந்த சினிமாப் பாடகர் ஒருவர் கூறியதற்கு மக்கள் கைதட்டி ஆர்ப்பரித்தார்கள். இன்றைய விஜய் தொலைக்காட்சி எதிர்கால கிம் கட்டாஷியன்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

அரைகுறை ஆங்கிலத்தையும், அரைகுறைத் தமிழையும் கலந்து மொழியின் ஆளுமையை அழித்துச் சிதைத்து நச்சுக் கலவையாக அப்பாவிகளிடம் வழங்கும் இந்தத் தொலைக்காட்சி கச்சிதமாக பண்பாட்டின் அழுகிய பகுதிகளைப் பாதுகாத்து அதன் முன்னேறிய பகுதிகளைச் சிதைக்கிறது.

சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் தமிழர்கள் அல்லாதவர்களை சிலரை ஆரம்பத்தில் தெரிவு செய்த விஜய் தொலைக்காட்சி தமிழின வாதத்தைத் தூண்டியது. இனிமேல் தமிழர்களுக்குத் தான் வாக்களிக்க வேண்டும் என விஜய் தொலைக்காட்சிக்கு தமிழினவாதிகள் சமூக வலைத் தளங்களில் இலவசப் பரப்புரை செய்தார்கள். அதாவது கலாசாரத்தைச் சிதைக்கும் விஜய் தொலைக்காட்சிக்கு தமிழ் உணர்வின் பெயரால் இலவசமாக விளம்பரம் செய்து கொடுத்தவர்கள் தமிழர்களே.

இதெல்லாம் மெடொக் குழுமத்தின் அறியப்பட்ட தந்திரோபாயங்கள் என்பதை அறிந்துகொள்கின்ற அளவுக்கு பார்வையாளர்கள் சிந்திக்கத் தெரிந்தவர்கள் அல்ல. சுப்பர் சிங்கர் நிகழ்வில் வைல்ட் கார்ட் சுற்றில் 4.5 மில்லியன் வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் உணர்வு என்றே வாக்களித்துள்ளனர். இந்தத் தமிழ் உணர்வை மிகவும் நுட்பமான வகையில் தூண்டிவிட்டு வியாபாரமாக்கிக் கொண்டது விஜய் ரீவி. ஒரு புறத்தில் அதிகாரவர்க்கத்தின் பண்பாட்டுச் சிதைப்பும் மறுபுறத்தில் இலாபவெறியும் தமிழ் உணர்வின் துணையோடு வெற்றி பெற்றிருக்கிறது. தோல்வியுற்றிருப்பது மக்களின் சமூக உணர்வும் தமிழர்களின் பாரம்பரியமும்!

கனடாவில் பிறந்த ஈழத் தமிழ்க் குழந்தையான ஜெசிக்கா வெற்றி பெற்றுள்ளார் என்பதை முக நூலில் ஈழத் தமிழர்கள் பெருமையாகப் பேசிக்கொண்டார்கள். இதில் என்ன பெருமை வேண்டிக்கிடக்கிறது? தென்னிந்திய சினிமாக் குப்பைகளில் பொறுக்கியெடுக்கப்பட்ட பாலியல் அடிமைத்தனத்தை இசையோடு பாடுவதில் என்ன பெருமை?

லண்டனில் பிறந்து தனது சொந்தப்பாடல்கள் ஊடாக சமூகத்தை பற்றிக் கொஞ்சமாவது பேசும் மாயா இவர்களை விட ஆயிரம் மடங்கு மேல். தமிழ் என்பதால் வாக்களிக்கிறோம் என்று விஜய் தொலைக்காட்சிக்கு இலவச விளம்பரம் தேடிக்கொடுத்தவர்கள் ஒரு தடவை நிகழ்சிகளை உன்னிப்பாகக் கவனித்துப் பாருங்கள் குழந்தைகள் தட்டித்தவறி நன்றி சொன்னாலும் நடுவர்கள் தாங்ஸ் தான் சொல்வா்ர்கள்.

விஜய் தொலைக்காட்சியின் கலாசார அழிப்பு இந்திய உளவுத்துறையின் துணையுடன் த்தான் நடைபெறுகிறதா என்பதற்கான ஆதாரங்கள் நேரிடையாக இல்லை. ஆயினும் உண்மையில் அதுவும் ஒரு காரணமாகவிருந்தால் வியப்பில்லை.

இவற்றுக்கு எதிராக பண்பாட்டின் மற்றுமொரு பகுதியைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொள்ளும் இந்துத்துவ ஆதிக்க வெறியர்களும், தமிழின வெறியர்களும் இவற்றை வளர்ப்பதற்காகவே மறை முகமாகப் பயன்படுகின்றனர்.

சுய நிர்ணய உரிமை கோரிப் போராடும் மக்கள் கூட்டத்தின் புலம் பெயர் குழந்தைகளின் மக்கள் பற்றும் சமூக உணர்வுமே புதிய உத்வேகம் மிக்க சமூகத்தை நாளை உருவாக்கும். -விஜய் தொலைக்காட்சிகளும் இத்தியாதிகளும் உருவாக்கும் சமூகம் அருவருப்பான வியாபார வெறிகொண்ட சமூகமாகவே அமையும்.

மெடொக்கினதும் தென்னிந்தியாவினதும் குப்பைகளை நிராகரித்து நமது வாழ்வின் அவலங்களைக் கூறும் புதிய கலாசாரம் தோற்றுவிக்கப்பட வேண்டும். இவற்றுக்கெல்லாம் தொலைக்காட்சிகள் தேவையில்லை துண்டுக் காகிதங்களே போதும்.

> **“அறுபதுகளின் இறுதியில் ஐரோப்பா முழுவதும் போராட்டங்கள் தோன்றின. மக்கள் உரிமைக் காகக் குரல்கொடுத்தார்கள். தமது உழைப்புக்குத் தகுந்த பெறுமானத்தை வழங்க வேண்டும் என்று ஆரம்பித்த போராட்டம் பல்வேறான தளங்களில் ஐரோப்பாவை அதிரவைத்தது. அந்தப் போராட்டங் களைக் கண்டு அஞ்சிய அதிகாரவர்க்கம் பாலியல் சுதந்திரத்தை அறிமுகப்படுத்துவதன் ஊடாக சமூகத்தின் சிந்தனையை மாற்ற முற்பட்டது. உரிமை கேட்போரைத் தடுப்பதற்கான ஒரு ஆயுதமாக பாலியலைப் பயன்படுத்தியது.”**

# எதில் மகிழ்ச்சி ?

ஒரு பெரிய மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்று நடந்து கொண்டிருந்தது.அப்போது பேச்சாளர் எல்லார் கையிலும் ஒரு பலூனை கொடுத்து அவரவர் பெயரை எழுத சொன்னார்.

எல்லோரும் தங்கள் பெயரை பலூனில் எழுதி முடித்தவுடன் ,அவற்றை இன்னொரு அறையில் நிரப்ப சொன்னார்.இப்பொழுது அந்தப் பேச்சாளர், உங்கள் பெயர் எழுதிய பலூனை அந்த அறைக்குள் இருந்து எடுத்து வாருங்கள் என்று அறிவித்தார்.

உடனடியாக அனைவரும் விழுந்து அடித்து அந்த அறைக்குள் ஓடிச் சென்று ஒவ்வொரு பலூனாக எடுத்துத் தேடினர் . ஒருவருக்கொருவர் நெக்கி தள்ளிக்கொண்டு கீழே விழுந்து தங்கள் பெயருக்குரிய பலூன் கிடைக்கிறதா என்று பரபரப்பாகத் தேடினர்.5 நிமிடம் கடந்த போதிலும் ஒருவராலும் தங்களுக்குரிய பலூனை தேடி கண்டு பிடிக்க முடியவில்லை.

இப்பொழுது அந்தப் பேச்சாளர் சொன்னார், ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு பலூன் மட்டும் எடுங்கள்,அந்த பலூனில் யார் பெயர் இருக்கிறதோ அதை அந்தப் பெயர் உடைய நபரிடம் அதனைக்கொடுங்கள் என்றார்.

அடுத்த ஒரே நிமிடத்தில் தங்கள் பெயர் எழுதப்பட்ட பலூன் எல்லோருக்கும் கிடைத்துவிட்டது.

இப்பொழுது அந்தப் பேச்சாளர் சொன்னார், இது தான் வாழ்க்கை.எல்லோரும் மகிழ்ச்சியை தேடுகிறோம். ஆனால் அது எங்கே,எப்படி,எதில் கிடைக்கும் என்று நினைப்பது இல்லை.

நம் சந்தோஷம் அடுத்தவர்களுக்கு உதவுவதில் தான் இருக்கிறது. அடுத்தவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுங்கள். உங்கள் மகிழ்ச்சி உங்களை தேடி வரும்.

# சுற்றுலா நல்லது

வாழ்க்கையில் மனதுக்குப் பிடித்தமான விஷயங்கள் நடந்துவிட்டால், உள்ளம் கொண்டாடும். விருப்பம் இல்லாத விஷயத்தை எதிர்கொள்ள நேர்ந்தால், மனதில் குழப்பங்கள் மூளும். இது அடிப்படை உளவியல். படிப்பை நீங்கள் பிடித்தமான விஷயமாக நினைத்தால் இந்த குழப்பங்கள் இல்லை. இதற்கு ஒரு சுலபமான, எளிமையான தீர்வு உள்ளது.

உங்கள் படிப்பைப் பற்றிய நேர்மறை கற்பனை உலகுக்கு அடிக்கடி ஓர் இன்பச் சுற்றுலா சென்று வாருங்கள். இதற்கு பணம் தேவையில்லை. நண்பர்களும் தேவையில்லை. உளவியலில் இதை மென்டல் டூர் (Mental Tour) என்பார்கள். அதாவது, நன்றாக படித்து, நிறைய மதிப்பெண்கள் பெற்று, உங்களுக்குப் பிடித்தமான துறையில் பிடித்தமான வேலையில் இருக்கிறீர்கள். அல்லது சுயதொழிலில் பெரிய அளவில் சாதனை செய்துகொண்டிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட கற்பனை உலகில் அடிக்கடி உலவுங்கள். பின்பு படித்தால், எந்த பாடமும் பனங்கற்கண்டாக இனிக்கும். இது உளவியல் உண்மை!

தற்போது நிலவி வரும் பருவ நிலா மாற்றத்தால் நம்மில் பலருக்கு உடலில் அதிக உஷ்ணம்(வெப்பம்) ஏற்படுகிறது,

இது முக்கியமாக அதிக நேரம் வெளியில் பயணங்கள் மேற்கொள்வோருக்கும், அதிக நேரம் நாற்காலி, சோபா மீது உட்கார்ந்திருப்பதாலும் ஏற்படுகிறது, இதனால் நம் தலை முடி முதல் கால் வரை உள்ள அனைத்தும் ஆரோக்கியத்தை இழக்கிறது,

இதனால் ஏற்படும் நோய்கள் முக்கியமாக முகப்பரு, தோல் வியாதிகள், தலை முடி உதிர்தல், வயிற்று வலி, உடல் எடை குறைதல் போன்ற எரிச்சலூட்டும் நிகழ்வுகள் நிகழ்கிறது, இதனை சரி செய்ய நம் சித்த பெருமைக்க அன்றைய காலகட்டத்திலேயே ஒரு எளிய மற்றும்

# உடற்சூட்டை தணிக்க....

ரகசியமான வழியை உங்களுக்காக கொடுக்கிறோம்.

தேவையான பொருள்கள் :

1.நல்லெண்ணெய் 2.பூண்டு 3.மிளகு

செய்முறை:

நல்லெண்ணையை ஒரு குழி கரண்டியில் தேவையான அளவு எடுத்து கொண்டு அதனை மிதமான சூட்டில் சூடு படுத்தவும், எண்ணெய் காய்ந்ததும் அதில் மிளகு மற்றும் தோல் உரிக்காத பூண்டை போட்டு சில நிமிடத்தில் சூடானதும் அடுப்பில் இருந்து இறக்கி, சூடு ஆறினதும் எண்ணையை காலின்(இரு கால்) பெருவிரல் நகத்தில் மட்டும் பூசி விட வேண்டும், 2 நிமிடங்கள் கழித்து உடனே காலை கழுவி விட வேண்டும், இதனை செய்யும் போதே உங்கள் உடம்பு குளிர்ச்சி அடைவதை உணர முடியும், 2 நிமிடத்துக்கு மேல் இதனை விரலில் வைத்திருக்க கூடாது, சளி ஜுரம் உள்ளவர்கள் இதனை முயற்சி செய்ய வேண்டாம், மிகுந்த மன அழுத்தம் , உஷ்ண உடம்பு உள்ளவர்கள் இதனை கட்டாயம் செய்து பயன்பெறுங்கள்.

இதன் வாசனை தெய்வீக தன்மை கொண்டதாக இருக்கும்.

அந்த காலத்தில் சித்தர்கள், குழந்தை இல்லாத ஆண்கள் தங்களிடம் குழந்தை வேண்டும் என்று வந்தால் மேல் குறிப்பிட்ட மருத்துவ முறையையே சொல்வார்களாம்.

ஏனெனில் இதனை செய்வதன் மூலம் ஆண்களின் விந்து விருத்தி அடைந்து மூன்று மாதத்தில் குழந்தை பிறக்குமாம், இதனை IT (18 வயதுக்கு மேல்) துறையில் வேலை செய்பவர்கள் தினமும் காலை குளிக்க போகும் முன் ஒரு நிமிடத்துக்கு எண்ணைய்ய தடவினால் மன அழுத்தம் நீங்கும். மேலும் சிறியவர்களாக இருந்தால் வாரத்தில் இருமுறை இதனை செய்யலாம்.




அப்பாவின் அநியாயமான கொலை, தீயவர்களுக்கு எதிராகத் துப்பாக்கி தூக்கும் வெறியை ஏற்படுத்துகிறது சத்யதேவ் என்ற அந்தச் சிறுவனுக்குள். அந்த வெறியோடே வளரும் அஜீத், ஆபத்தை வலியத் தேடிப் போவதுதான் தனக்குப் பிடித்த போதை என்று தன்னை அறிந்து தீய செயல்களில் ஈடுபடும் எல்லோருக்கும் எதிராகப் போர் தொடுக்கிறார்.

நிழல் உலக வலைப்பின்னலை அறுக்க தாதா உருவில் சிறை செல்லும் அஜீத். அங்கே நிஜ தாதா விக்டரை (அருண் விஜய்) சந்தித்து நட்புக் கொள்கிறார். இருவரும் சிறையிலிருந்து தப்பிக்கிறார்கள். அஜீத்தின் உண்மையான முகம் தெரிந்ததும் அருண் அவர் மீது கொலை வெறி கொள்கிறார்.

இதற்கிடையில் ஹேமானிகா (த்ரிஷா) என்னும் பரத நாட்டியக் கலைஞரைச் சந்திக்கும் அஜீத், அவர் மீது காதல் வயப்படுகிறார். தன் குழந்தையுடன் தனித்து வசித்து வரும் ஹேமானிகா முதலில் தயங்கினாலும் பிறகு அந்தக் காதலை ஏற்றுக்கொள்கிறாள். அவர்கள் திருமணம் செய்துகொள்ளும் சமயத்தில் ஹேமானிகா கொல்லப்பட, குழந்தை மீது ஒரு அப்பாவாகவே பாசம் காட்டி வளர்க்கிறார்.

வில்லன் வேட்டையிலிருந்து ஒதுங்கி இருக்கும் அவரை தீய சக்திகள் மீண்டும் களமிறங்க வைக்கின்றன. தேன்மொழி (அனுஷ்கா) என்னும் அப்பாவிப் பெண்ணின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் சேர்ந்துகொள்கிறது.

கோட்டுக்கு அந்தப் பக்கம் இருக்கும் அருணுக்கும் இந்தப் பக்கம் இருக்கும் அஜீத்துக்கும் இடையே நடக்கும் பரமபத ஆட்டத்தில் அஜீத் எப்படி ஜெயிக்கிறார்?

கௌதம் என்றால் அழுத்தமான, உணர்வுபூர்வமான கதை இருக்கும். யதார்த்தமான பெண் கதாபாத்திரச் சித்தரிப்பு இருக்கும். ஒரு அழகான காதல் இருக்கும். புத்திசாலித்தனமான வசனங்கள் இருக்கும் என நம்பிக்கையுடன் வருபவர்களுக்கு... அதெல்லாம் இருக்கிறது - கொஞ்சமாக! வாரணம் ஆயிரம், காக்க காக்க, வேட்டையாடு விளையாடு என முன்பே பார்த்த சில பாத்திரங்கள், அவற்றின் ஆசாபாசங்கள், ஆத்திர செயல்பாடுகள் கலந்த மாக்டெய்ல் இந்தப் படம்.

தந்தை மகன் உறவு, சுயத்தை அறிய உதவும் பயணங்கள், ஏற்கனவே திருமணமான பெண் மீது உண்டாகும் கண்ணியமான காதல், குற்றவாளிகளுக்கு




எதிராக கூட்டம் கூட்டமாகப் பாயும் போலீஸ், கதாநாயகனின் பாசத்துக்குரிய பெண்ணைப் பணயக் கைதி ஆக்கி - இப்ப நேரா வந்து மோது என்று ஆவேசக் கூச்சலிடும் வில்லன்... எல்லாம் கௌதமின் அதே முத்திரையுடன் அடி பிறழாமல் மீண்டும் அரங்கேறுகின்றன.

சில காட்சிகளும் சில பாத்திர வார்ப்புகளும் நன்றாக அமைந்துள்ளன. த்ரிஷாவிடம் அஜீத் தன் காதலைச் சொல்லும் விதம் அழகு. அருண் விஜயின் பாத்திரம் வலுவாக உள்ளது. பயணக் காட்சிகள் கண்களுக்கு விருந்து. ஒரு பெண்ணின் மறுமணத்தை மிக இயல்பாக சித்தரிக்கும் விதம் ஈர்க்கிறது.

கிளைமாக்ஸ் சண்டை விறுவிறுப்பு. ஆனால், அதற்குமுன் வருகிற சவால் வசனங்கள் ரொம்ப நீளம். கடைசியாக அடித்து வீழ்த்துவதற்கு முன் அருண் விஜய்யிடம் அஜீத்தே சொல்கிறார் - ரொம்ப பேசிட்டோம் என்று!

வில்லன் கூட்டத்துக்குத் தேவையான சரக்கு நடைபாதையிலேயே கிடைப்பதாக ஒரு காட்சியே வருகிறது. அப்படி இருக்க, மெனக்கெட்டு ஏன் அனுஷ்கா பின்னாடியே அலைகிறார்கள் என்பதற்கான காரணம் பலவீனமாக உள்ளது. அதிலும், படை படையாக பொலிஸ் கிளம்பி வந்து துரத்தும்போதும் விடாப்பிடியாக வில்லத்தனம் பண்ணுகிற அளவுக்கு அருண் விஜய்க்கு அப்படி ஒன்றும் அசாத்தியமான பின்னணிப் பலம் இருப்பதாகத் தெரியவில்லை.

கையில் துப்பாக்கியுடன் அத்தனை பொலிஸ்காரரும் வளைத்த பிறகும், சொல்லு விக்டர்... இப்பவே இவனை போட்டுரட்டுமா? என்று அடியாள் வில்லன் செல்பேசியில் வித்தை காட்டுகிறார். அத்தனை கிள்ளுக்கீரையா பொலிஸ்?!

இத்தனையும் தாண்டி, சின்னச் சின்ன உணர்வுகளைக்கூட அழகாக அஜித்திடமிருந்து வரவழைத்து அசத்தியிருக்கிறார் கௌதம். வெவ்வேறு காலகட்டங்களில் இயல்பாக மாறும் தோற்றம், அசரடிக்கும் கம்பீரம், அலட்டிக்கொள்ளாத வேகம் என்று அஜீத்தை ஒரு நல்ல நடிகராக நன்றாகவே தூக்கி நிறுத்தி இருக்கிறார்.

கதைக்காக ஏகத்துக்கும் அடிவாங்கும் சில காட்சிகளில் துளிகூட தயங்காமல் ஒத்துழைத்திருப்பதன் மூலம், மற்ற பல நடிகர்களின் மாஸ் ஹீரோ வட்டத்தையே கடகடத்துப் போகச் செய்திருக்கிறார் அஜீத்.

இரண்டு நாயகிகளுமே அஜீத்தின் நிழலில் மறைந்துவிடுகிறார்கள். என்றா லும் த்ரிஷா, அனுஷ்கா இருவரும் கொடுக்கப்பட்ட வேலையை நன்றாகவே செய்திருக்கிறார்கள். கண்களாலேயே காதலைப் பொழியும் த்ரிஷாவின் நடிப்பு அழகு என்றால் அதிரடியாகக் காதலைச் சொல்லும் அனுஷ்காவும் ஓகேதான்!

வில்லன் கதாபாத்திரத்தில் அருண் விஜய் ஜொலிக்கிறார். அவரது உடலும் முகமும் வசன உச்சரிப்பும் பிரமாதமாக வில்லத்தனம் காட்டுகிறது. பேபி அனிகா மனதில் நிற்கிறார்.

கௌதம் - ஹாரிஸ் ஜெயராஜ் கூட்டணிக்கான எதிர்பார்ப்பு முழுசாகப் பூர்த்தி ஆகவில்லை. என்றாலும், அதாரு உதாரு பாடல் ரகளை... உனக்கென்ன வேணும் இனிமை. ஒளிப்பதிவில் டான் மெக் ஆர்தரின் கடும் உழைப்பு கண் ணாரத் தெரிகிறது. அன்டனியின் படத்தொகுப்பு பல காட்சிகளில் பரபரக்க வைக்கிறது.

தன் வழக்கமான பொலிஸ் கதையை அஜீத், அருண்விஜய் என்ற ஆளுமைகளோடு தன் பாணியில் சொல்லி இருக்கிறார் கௌதம் மேனன்.

இவ்வார

# இராசி பலன்

11.02.2015 ~17.02.2015

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

வெகுநாள் இருந்த சிரமம் விலகும். புதிய முயற்சி முழு அளவில் வெற்றி பெறும். பெண்களால் நன்மை உண்டு. சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து கிடைக்கும். தாராள பணச் செலவில். குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். புத்திரர் அறிவு. ஆற்றலில் சிறந்து விளங்குவர். இல்லறத் துணையின் கூடுதல் அன்பு. பாசம் நெகிழ்ச்சி தரும். தொழில். வியாபாரம் செழித்து. பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து வெகுமதி பெறுவீர்கள். குடும்பப் பெண்கள். உறவினர்களை நன்கு உபசரிப்பீர்கள்.



**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வாகனத்தில் பராமரிப்பு மேற்கொள்வதால் பயணம் எளிதாகும். பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க கூடாது. புத்திரரின் உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்பதை தவிர்க்கச் சொல்லுங்கள். பணக்கடன் உருவாக்குகிற நெருக்கடியை. மாற்று உபாயத்தால் சரி செய்வது நல்லது. இல்லறத் துணையிடம் தேவையற்ற விவாதம் பேச வேண்டாம். தொழிலில் உற்பத்தி. விற்பனை சுமாரான அளவில் இருக்கும். பணியாளர், அதிக பொறுப்புணர்வுடன் பணிபுரிவது நல்லது.



**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

பல நாள் நினைத்த திட்டம் ஒன்றை செயல்படுத்துவீர்கள். வெளியூர் பயணம் சில நன்மையைத் தரும். புத்திரர், உங்களின் ஆலோசனையை ஏற்று நடந்து கொள்வர். நிலுவைப் பணம் வசூலாகும். உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத் துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் புதிய வளர்ச்சி இலக்கை அடையும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள். வீட்டை அழகுபடுத்த கலை அம்சம் நிறைந்த பொருட்கள் வாங்குவீர்கள்.



**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

தாழ்வு மனப்பான்மையை அகற்றுவதால், வாழ்வின் முன்னேற்றத்திற்கான புதிய பாதை புலப்படும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். புத்திரரின் செயல் குறையை கண்டிப்பதில் நிதானம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் அளவான பண வரவு கிடைக்கும். பணியாளர், நிர்வாகத்தின் சட்ட திட்டங்களை தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்கள், குடும்பச் செலவில் சிக்கனம் கடைப்பிடிக்கவும், மாணவர்கள், படிப்பை தவிர, பிற விவாதங்களில் ஈடுபட வேண்டாம்.



**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

பழகுபவர்களிடம் நிதானித்து பேசுவது நட்பை பாதுகாக்க உதவும். குடும்பத் தேவைகளுக்கான பணச் செலவு அதிகரிக்கும். புத்திரரின் செயல்களை கண்காணித்து வழி நடத்துவது அவசியம். உடல் நலம் ஆரோக்கியம் பெற, மருத்துவ சிகிச்சை உதவும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். தொழிற்சாலை பணியாளர்கள், பாதுகாப்பில் அக்கறை கொள்ளவும்.



**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

குடும்ப உறுப்பினர், சில விஷயங்களில் கருத்து வேறுபாடு கொள்வர். புத்திரரின் விருப்பம் நிறைவேற்றுவதில் தாமதம் உருவாகும். அறிமுகம் இல்லாதவரிடம் விவாதம் பேச வேண்டாம். உணவு உண்பதில் கட்டுப்பாடு பின்பற்றவும். இல்லறத் துணை வழி சார்ந்த உறவினர்களிடம் பெற்ற நம்பிக்கையை பாதுகாக்க வேண்டும். தொழிலில் சில மாற்றம் பின்பற்றுவது அவசியமாகும். பணியாளர், கூடுதல் வேலைவாய்ப்பை தவறாமல் ஏற்கவும்.



**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

சமூகப் பணியில் ஓரளவு ஈடுபடுவீர்கள். வாகனத்தில் பராமரிப்பு பணி பயணத்தை எளிதாக்கும். புத்திரர், புதிய நண்பர்களின் உதவியால், சில நன்மை பெறுவர். நிலுவைப் பணம் வசூலாகும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். இல்லறத் துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் அளப்பரிய வளர்ச்சி பெறும். பணியாளர்கள் பணியை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். பெண்கள் புத்தாடை, அணிகலன்கள் வாங்க நல்யோகம் உண்டு.



**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

மனதில் ஒரு முகத்தன்மையும், லட்சியத்தை நிறைவேற்றுகிற எண்ணமும் ஏற்படும். புதியவர்களின் உதவி கிடைக்கும். எதிர்ப்பு விலகி முன்னேற்ற பாதையில் நடைபோடுவீர்கள். குடும்பத்தில் மங்கள நிகழ்வு உண்டாகும். புத்திரரின் கவனக் குறைவான செயல் பணச் செலவை ஏற்படுத்தும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். இல்லறத் துணை குடும்ப நலன் பாதுகாத்திடுவார். தொழிலில் போட்டி குறைந்து வளர்ச்சியும். பண வரவும் அதிகரிக்கும்.



**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

சந்தோஷ நிகழ்வுகளை நினைப்பதால், மனதில் புத்துணர்வு ஏற்படும். அரசு தொடர்பான அனுகூலம் பெறுவதற்கு கூடுதல் முயற்சி தேவைப்படும். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவருக்கு இடம் தர வேண்டாம். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து வழிநடத்துங்கள். பணியாளர், நிர்வாகத்தின் சட்ட திட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்கள், பணப்பொறுப்பு ஏற்கக் கூடாது.



**மகரம்**

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

பசு, பால் பாக்யயோகம் அமைந்து செல்வ வளம் அதிகரிக்கும். முருகப் பெருமானின் நல்லருள் பலமாக துணை நிற்கும். சிலர், புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். எதிர்ப்பாளரிடம் சமயோசிதமாக விலகுவீர்கள். இல்லறத் துணை கூடுதல் அன்பு. பாசத்துடன் உதவுவார். தொழிலில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும். பணியாளர் ஆர்வமுடன் பணி இலக்கு பூர்த்தி செய்வீர்கள்.



**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

ஆடம்பர செயல்களை தவிர்ப்பது நல்லது. பிறருக்காக தகுதி மீறிய வாக்குறுதி தர வேண்டாம். குடும்பத்தினர் ஒற்றுமை பேணுவதால் மட்டுமே நிம்மதி. மகிழ்ச்சி நிலைத்திருக்கும். நீண்ட தூர வாகன பயணத்தில், பாதுகாப்பு தவறாமல் பின்பற்ற வேண்டும். புத்திரர் பிடிவாத குணத்தினால், ஒற்றுமை மனதுடன் செயல்படுவர். உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். இல்லறத் துணை இன்ப, துன்பத்தில் சம பங்கு கொள்வார். தொழில் சார்ந்த இடையூறை தாமதமின்றி சரி செய்யவும்.



**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

செயல்களை திட்டமிட்டு நிறைவேற்றுவீர்கள். பண வரவு திருப்திகரமாகும். உடன் பிறந்தவர்களின் வாழ்வு சிறக்க உதவுவீர்கள். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். புத்திரர் நண்பருக்கு இணையாக கருத்துகளை சொல்வர். இல்லறத் துணை ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில். வியாபாரம் செழிக்க புதியவர்களின் ஆதரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு உபரி பண வரவில் சேமிப்பு கூடும். பெண்கள், வேண்டுதல் நிறைவேறி தெய்வ வழிபாடு நடத்துவர்.



# சுதந்திர வேட்கை

● அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 73



இனி, அவர் மட்டில் அவர்களுடைய திட்டம் என்ன என்பதை அறிந்தே தீர்வது என்று உறுதியும் பூண்டிருந்தேன். காவல் அதிகாரிகளுடன் முதற் தடவையாக நேர் நேராக மோதுவதற்காக, இப்போது தான் போய்க் கொண்டிருந்தேன்.

எனக்குள்ளே ஒரே கொதி. பாலாவை அவர்கள் கடத்திக் கொண்டு போய், தொடர்பு கொள்ள விடாது அவரை ஒளித்து வைத்திருப்பது ஓர் அத்துமீறலாகப் பட்டது. சட்டக் கடமையில் இருந்து அவர்கள் தவறி விட்டார்கள் என்ற உணர்வே எனக்குள் பொங்கி நின்றது. ஒரு மனோ தர்ம ஒழுக்க பலத்தை அது எனக்குத் தந்தது.


பாலாவைப் பற்றி நான் முதலில் விசாரிக்கத் தொடங்கிய போது, பதிலாக மௌனமே எனக்குக் கிடைத்தது. நான் யாரைப் பற்றிப் பேசுகிறேன் என்பது காவற்றுறை அதிகாரிகளுக்கு நன்கு தெரியும். ஆனாலும் பாலாவைப் பற்றி நான் விசாரித்ததும், என்ன நடந்தது என்றோ அவர் எங்கே என்றோ தமக்கு எதுவும் தெரியாது என்றே எல்லோரும் சாதித்தார்கள். அவரிடம் கேள், இவரிடம் கேள் என்று தட்டிக் கழித்த வண்ணம் அலைத்தார்கள். என்னுடைய நல்ல காலம், தமிழ் நாடு காவற்றுறையின் புலனாய்வுப் பிரிவின் தலைவரை எனக்குத் தெரியும். முதலமைச்சர் எம்.ஜீ.இராமச் சந் திரனுக்காக அவர் அரசை எவ்வாறு நடத்திக் கொண்டி ருந்தார் என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே எமக்கு எனக்க நடந்து கொண்டிருக்கிறது என்பது அவருக்கு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். எனவே,எனக்குத் தெரிந்த ஓர் காவற்றுறை அதிகாரியை அங்கே கண்டதும், அவரை மடக்கினேன். மேல்மாடி அலுவலகத்தில் இருக்கும் பெரியவரிடம் சென்று பாலாவுக்கு ஏதாவது இசகு பிசகாக நடந்தால் அவரையே பொறுப்பாளியாக நான் குற்றம் சுமத்துவேன் என்றும், இது தொடர்பாக, செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்ட எண்ணியிருக்கிறேன் என்றும் அவரிடம் தெரிவிக்குமாறு, நிர்தாட்சண்யமாகக் கூறினேன். எனது மிரட்டல் எப்படியாவது தனது வேலையைச் செய்யும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. நான் கூறிய ஏதோ ஒன்று அவர்களை மிரள வைத்திருக்க வேண்டும். மேலே சென்ற அந்த அதிகாரி , தமது உயர் அதிகாரிகளுடன் கலந்தா லோசித்து விட்டு, கீழே வந்தார். காவற்றுறை காவலிலே பாலா இருப்பதாகக் கூறினார். ஆயினும் அவரை விடுதலை செய்ய முடி யாது என்றார். பாலாவுக்கு நான் இன்சுலின் கொண்டு போகலாம் என்றும்.அவ்வாறு செல்லும் பட்சத்தில் பாலா வெளியேற்றப்படும் வரை நானும் காவலில் செல்லும் பட்சத்தில் பாலா வெளியேற் றப்படும் வரை நானும் காவலில் இருக்க வேண்டும் என்றும் அவர் நிபந்தனை விதித்தார். இதற்கு உடனே நான் இணங்கினேன்.

இந்தச் சம்பவத்தில் இருந்து ஒன்றை மனப்பூர்வமாக உணர்ந்தேன். காவல் நிலையங்களில் அல்லது இராணுவ முகாம்களில் காணாமற் போகும் உறவுகளைத் தேடி அங்கே போகின்றவர்களுக்கு எங்கே திரும்பினாலும் மௌனமே விடையாக எதிர் கொள்ளும் போது, பெருந்தொகையான அந்த சாதாரண மக்கள் படும் துயரம், அச்சம் ஆற்றாமை ஆகியவை எவ்வளவு ஆழமானவை என்பதை எனது அன்றைய அனுபவத்தின் அடிப்படையில் புரிந்து கொண்டுள்ளேன்.

(பதிவு தொடரும்)

# என்னைப் பற்றிய பிற்குறிப்பு

ந.மயூரரூபன்



சிறுகதை

இதமான எண்ணங்களின் அரவணைப்பில் சுருண்டிருந்தது மனது. எனது ஒவ்வொரு அசைவும் மோகத்தின் மயக்கம் தரும் மகரந்தத்தின் வாசனையின் ஆக்கிரமிப்பினை ஆவலுடன் எதிர்பார்த்து துடித்துக் கொண்டிருந்தது. அவளின் அன்பு பொலியும் அன்பு முகம் என்னருகே என்னையே பார்த்தபடி...

நான் உணர்வுகளில் சரணடைந்து. என்னிலை மறந்து அவள் முகத்தினை நெருங்கினேன். ஒளிச்சிதறலுடன் வெடித்துச் சிதறியது காற்று.

என் கண்கள் இருளையே கண்டன. ஒளியைப் பார்க்க முனையும் போது சிதறிய உயிரியின் துகள்களில் என் முகங்களே பலவாகத் தெரிந்தன.

நினைவுகளின் அடுக்குகளில் வெடிக்கும் உண்மையின் கனவாயே இது எனக்குள் சேகரமாகிக் கொண்டிருக்கின்றது. என்னால் அவற்றினைத் தேடிக் காண முடியவேயில்லை. இப்போது வாழ்க்கையின் அடுக்குகள் அடிக்கடி இழைபிரிந்து என் மூச்சுக் காற்றினை கதறவே செய்விக்கின்றன.

எனது காற்று வெடித்துச் சிதறிய பொழுதினைக் கடந்த போது, நான் உயிரினைப் பொதி வைத்து ஓடத் தொடங்கியிருந்தேன். மணல்களில் கால்கள் புதைந்தெழும் ஒட்டத்திலும், காற்றின் வாதை யி லும் உயிர் தளம்பிக் கொண்டேயிருந்தது.

எனது உயிரருகே சாம்பர் மேடுகளின் சூடு மெதுமெதுவாகத் தணிந்து கொண்டேயிருக்க, அந்த சாம்பர் பூத்த வெள்ளையைக் கிளறிக் கிளறி மனது கீழிறங்குகின்றது. கீழிறங்கும் மனதின் ஒவ்வொரு மூலைகள் ஒவ்வொன்றிலும் என்னசைவின் படங்கள் அனைத்தும் கறுப்பு வெள்ளையாக தூசி படிந்து போகின்றன. கீழிறங்கும் மனது பல்லாயிரம் சிலுவைகளில் அறையப்பட்ட வலியையே தேடுகின்றது.

உயிர் பொத்தி ஓடுகின்ற பொழுதுகள் உன்னையும் அவனையும் பின் தொடர்ந்து கொண்டிருந்தது. அந்தப் பொழுதுகளின் இடுக்குகளில் நானும் தொங்கிக் கொண்டிருந்தேன். காற்றின் கதறலில் பயந்த பொழுதுகளில் அள்ளுண்ட என் நண்பன் தனது கைகளால் மணல் பறித்து என்னையும் தன்னுடன் அதற்குள் நுழைத்துக் கொண்டான். காற்று அவனின் கதறலை மட்டும் தன்னுடன் அதற்குள் நுழைத்துக் கொண்டான். காற்று அவனின் கதறலை மட்டும் தன்னுடன் இழுத்தோடியது. அந்தக் குழியின் வாசல் திறக்கும் நினைவுகளில் அவனது முகம் மிக நெருக்கமாக தன் கனவுகள் தூர்ந்து போன கண்களால் என்னை அழைத்துச் செல்லும்.

இயல்புலகம் இதுவென் சொன்ன இடம். நான் வெளிவருகின்ற போது பலவீனப்பட்டிருந்த மனதினையும் உடலினையும் உறவுகளின் இயல்பிலும் மாசற்ற அன்பிலும் போக்குவதற்கு முனைந்தேன். எனினும் வீட்டில் முடங்கியிருக்கும் போது முகட்டில் தொங்கும் அந்தரத்தின் அரவணைப்பே என்னைத் தன்னுடன் உச்சி முகர்ந்து அணைத்துக் கொள்கிறது.

அப்பா நெல் விதைத்த வயல் என்னை அடிக்கடி அழைத்துக் கொள்ளும். அதன் மாற இயல்பின் மடிகள் நீள நடக்கின்ற போதும், வயலின் நுனியிலுள்ள பனங்கூடலில் அமர்ந்து என்னைக் கரைத்த போதும் நெருங்கி நின்று என் வலி நீவித் தடவ காற்றும் தயங்கி ஒதுங்கியது. அந்த சுடலைக்கருகே இருக்கும் தாமரைக்குளமும் அதனருகே ஒற்றையாக நிற்கும் சிறு பற்றையும் நான் ஒதுங்கிப் படுக்க சலனமற்றிருந்தன.

உடலின் வலு, வடுவாக உறைந்த போதும் மனதின் வலி இன்னமும் இரத்தத்தினை காயவே வைக்கின்றது. என்னுயிரின் வெறுமையினை நான் என்னிலிருந்து தூக்கி வைக்க பிரயத் தனப் படவேயில்லை.

ஒளிச்சிதறலுடன் காற்று இப்போதும் எனக்குள் வெடித்துச் சிதறுகின்றது. என்னைக் கடந்து போகும் காலத்துடன் சேர்ந்து நகரவே முடியவில்லை. காலம் என்னை மட்டும் தனியே விட்டுப் போவதை வேடிக்கை பார்ப்பதற்கே முயற்சிக்கின்றேன்.

அப்பாவும் அம்மாவும் என்னைச் சிறு பிள்ளை போல அவதானத்துடனேயே கவனிக்கின்றார்கள். முதிரும் பருவத்திலும் அவர்கள் முன் குழந்தை யாகத் தளர் நடையிடுகின்றது என் மனது. வெறும் சேதியாக அவர்கள் என்னைக் கேள்விப்படுவதற்கு பதில் நானாக அவர்களிடம் நான் இருப்பதில் கண்ணீர் வழியும் திருப்தி அவர்களுக்கு.

உலகம் தன்னியல்பில் அசைகின்றது.. நான் அதனை புரிந்து கொள்ள முனையவில்லை. நான் என்னைப் பிரித்துப் பார்க்கும் முயற்சியில் இறங்கினேன். என்னிலிருந்து நான் வேறுபட்டுக் கொள்வதற்கும் காலத்தின் வரிகளையும் அது தந்த வலிகளையும் அழித்து விட முடியுமா?

பொழுதுகள் தம்மியல்பை மறந்து விடுகின்றன. அது வெறுமனே அனைத்தையும் காவிச் செல்லும் வண்டியாகவே ஓடிக்கொண்டிருக்கின்றது.

எழுதி விடும் வரிகளை-அழித்து விடும் வெறுங்கதையாக ஒருவரின் வாழ்வும் இங்கு இருந்து விடவில்லை. எனது வாழ்வும் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது.

ஒளித்து வைப்பதற்கான இடத்தினை எங்கு போய் நான் தேடுவது...?

ஒருவிடயம் எனக்குப் புரிவதேயில்லை. இரவிலா பகலிலா ஒளிப் பது சிறந்தது? எந்தக் காலக் கண்களில் மயக்கம் அதிகம்?

இருளைப்பற்றி நான் பேசுகின்ற பொழுதுகளில் இவனைப் பயம் முற்றாக தின்று விட்டது என்கிறார்கள். எனது வலிகளைச் சொல்லி அழு கின்ற போது விளங்காத தத்துவத்துள் சரிந்து விட்டான் என்கிறார்கள்.

என்னை ஒரு அடையாளத்துடன் காணவே எல்லோரும் ஆசைப் படுகின் றார்கள். உண்மையில் அடை யாளங்களைத் துறக்கும் ஒரு நிலையே எனக்குத் தேவையானது.

என்னிலிருந்து நான் விலகிக் கொள்வதன் தேவை வலுப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. என்னுடன் நான் சேர்ந்திருக்கும் பொழுதுகளில் நான் ஆயுள் பலத்தினை இழந்து விடுவேன்என சாத்திரிகள் கண்களை மூடிய படியே கூறினார்கள். அதற்கான குணாங்குறிகள் பலதினை யும் ஊரிலுள்ள குறிசொல்லிகள் அம்மாவிடம் சொல்லி சேர்ந்தழுதனர்.

சாத்திரக்குறிப்புக்களும் குறி சொல்லிகளின் அருட்டல்களும் அம்மாவின் கண்ணீருடன் சேர்ந்து என்னை விரட்டி வந்து கொண்டேயிருக்கின்றது. இங்கு கால இழை படிகின்ற வாழ்க்கையின் அடுக்குகள் அடிக்கடி இழை பிரிந்து என் மூச்சுக் காற்றினை கதறவே செய்விக்கின்றது.

விழிகள் மயங்குகின்ற பொழு தொன்றில் வெறித்திருந்த வெளியொன்றில் நான் நடந்து கொண்டேயிருந்தேன். நான் நீள நடந்து கொண்டேயிருந்தேன். இருள் கனத்துப் படுத்திருந்த அந்த சரிவில் இறங்கி சிறு பற்றைக் கருகில் அமர்ந்து கொண்டேன்.

மூச்சு இரைத்தது. மல்லாக்காகப் படுத்துக் கொண்டேன். வானில் நட்சத்திரங்களும் ஒளித்து விட்டிருந்தன. நேரம் நீண்டு கொண்டேயிருந்தது. சடாரென் எழுந்தமர்ந்தேன். வண்டுகள் கதறிக் கொண்டிருந்தன.

சுற்றும் முற்றும் பார்த்தேன். கதறலை நிறுத்திக் கொண்டன. தவளைகள் மட்டும் விட்டு விட்டுக் குரல் கொடுத்தன. அருகிலுள்ள தாம ரைக் குளத்தின் நெடியினை இப் போது உணர முடிந்தது.

சிந்தனைகளை ஒதுக்கிப் பற்றையின் அடி யில் மணலை கைகளால் வாரத் தொடங்கி னேன். சாம்பர் பூத்த மணலைக்கிளறிக் கிளறி கைகள் கீழிறங்க மனதும் உடனிறங்குகிறது.

கைகள் ஆழத்தைத் தேடியிறங்க மனது மட்டும் பல் லாயிரம் சிலுவைகளில் அறையப்பட்ட வலி யைத் தேடுகின்றது. கண்ணீரில் மனது தோய்ந்து கொள்கின்றது.

களைத்துப் போய்ச் சற்றே அமர்ந்திருந்தேன். உடல் முழுவதும் வியர்வையில் தோய்ந்திருந்தது. சாரத்தின் ஓரத்தினைத் தூக்கி முகத்தினை அழுத்தமாக துடைத்துக் கொண் டேன். பின் எழுந்து குளத்தினை நோக்கி சென்றேன். நீர் குளிர்மையற்று சூடாகியிருந்தது. கைகளால் நீரை அள்ளியள்ளி வாய்க்குள் விட்டேன். சூடு உடலுக்குள் நேர் கோடாக இறங்குவதை உணர முடிந்தது. வயிறு நிறையும் வரையா மனது நிறையும் வரையா குடித்தேன்?.....நினைக்கவில்லை.

மீண்டும் பற்றையடியில் தோண்டத் தொடங்கினேன். தோண்டி முடிந்ததும் சேட்டினைக் கழற்றி வைத்து விட்டு ஆசுவாசமாக அமர்ந்து கொண்டேன். இருட்டில் சுற்றி வர இருப்பவையனைத்தும் என்னையே பார்ப்பதான பிரமையில் திடுக்கிட்டு எழுந்தமர்ந்தேன். காற்றின் அருகாமை எனக்குத் தேவையாயிருந்தது. ஆழ மூச்சினை உள்ளிளுத்தேன். காற்றினை யாரோ கட்டி வைத்து விட்டனர். தவளைகளும் காணாமலே போயிருந்தன.

நான் என்னை மெதுவாக அந்தக் கிடங்கினுள் வைத்து அழுத்தினேன். சாதாரணமான ஒரு பொருளை வைத்து மூடுவது போன்று மிக இலகுவாக இருக்குமென்று நான் நினைக்கவேயில்லை. மண்ணில் மறைந்திருந்து வேடிக்கை பார்த்த வேர் முனைகள் என்னை இறுக்கமாகப் பற்றிக் கொண்டன. என் மூச்சுக் காற்று ஒரு கணம் பதறித் துடித்தது.

நான் கிடங்கினை மூடி விட்டு எழுந்து கொண்டேன். நினைவின் அடுக்குகளில் வெடிக்குமந்த உண்மையின் கனவாயே இதுவும் எனக்குள் சேகரமாகிக் கொண்டிருந்தது. இப்பொழுது காற்று வெடித்துச் சிதறுகின்ற பொழுதுகளை நான் கலக்கமற்றுக் கடந்து கொண்டிருக் கின்றேன். காற்றின் குளுமையையும் உணர முடிகின்றது.

# நான் ஒரு நாடகக்காரன்

- யதார்த்தன்

**(கடந்த வாரத் தொடர்ச்சி)**

அந்த மரபுகளையெல்லாம் தூக்கியெறிந்து விட்டது உடல் நாடகம். அதில் நடித்தவர்கள் தங்கள் முன்னிருந்த வெளி முழுவதையும் அநாயசமாகப் பயன்படுத்தினார்கள். பிரதியிலோ கதையில்லை. நிகழ்வுகள் மட்டுமே. அவைகளும் சிறுசிறு காட்சிகளாக இல்லாமல். நாடகம் முழுவதும் ஒரே காட்சியில் நடந்து முடிந்தது போலவே இருந்தது. அதுதான் நாடக நிகழ்வின் காலத்தை 40 நிமிடங்களிலிருந்து 10 நிமிடங்களாக குறைத்துக் காட்டியது.

சரி. க்லர்கலராக விளக்குகள் இல்லை. ஒப்பனை இல்லை. மேடை இல்லை. பரவாயில்லை. Set Properties எனப்படும் பொருள்களும்கூட இல்லையென்பதை என்னால் ஒத்துக் கொள்ளவே முடியவில்லை. இல்லாத ஏணியைத் தூக்கி வந்து, இல்லாத சுவரில் சார்த்திவைத்து, அந்த ஏணியின் மீது லாவகமாக ஏறி, ஜன்னலின் வழியே எட்டிப் பார்த்தார்கள். இல்லாத மைக்கை கையில் பிடித்து ஒருவன் முழங்க, மற்றொருவன் சட்டென ஒலிபெருக்கியாக மாறினான். அங்கு ஏணி, சுவர், ஜன்னல், மைக், ஒலிபெருக்கி எதுவும் இல்லை என்பதை பார்வையாளர்கள் மறந்து போய்த்தான் பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்று என்னால் உறுதிபடக் கூற முடியும். ஏனென்றால், நானே அப்படித்தான் பார்த்துக் கொண்டிருந்தேன். இந்த இல்லாத பொருள்களை நடிகர்கள் தங்கள் உடல்மொழியால் கண்முன் கொண்டு வந்து காட்டினார்கள். (முந்தைய பகுதியில் உள்ள நிழற்படம் பாருங்கள். உங்களுக்கே புரியும்).

இப்படி பல்வேறு விதமான வித்தியாசமான அனுபவங்களைத் தந்த உடல் மனதுக்குள் உழன்று கொண்டே இருந்தது. ஆனாலும், அதுவரை நான் கற்றறிந்த நாடக அறிவு அதை நாடகம் என்று ஏற்றுக் கொள்ள மறுத்துக் கொண்டே இருந்தது.

எனக்கோ நாடகம், நடிப்பு என்றால் ஒருவிதமான வெறி. தில்லியில் அப்போது யதார்த்தா தவிர்த்து வேறு எதுவும் தமிழ் நாடகக்குழு இல்லை. டெல்லி கணேஷ் போன்றவர்கள் நடித்து வந்த தக்ஷிண் பாரத் நாடக சபா (தமிழ் எப்படி வழிந்தோடுகிறது பாருங்கள்) என்ற பழைய நாடகக்குழு அப்போது செயல்பாடுகள் எதுவுமின்றி இருந்தது. இருப்பது ஒரே ஒரு தமிழ் நாடகக் குழு தான். நண்பர் வித்யாசங்கரிடம் அந்த நாடகக் குழவிடம் அறிமுகப்படுத்திவிடச் சொல்லலாமா என்றுகூட சிலசமயங் களில் நினைத்தேன். ஆனால், அன்று பிகு செய்துவிட்டு, இப்போது அவரிடம் கேட்க ஈகோ இடம் கொடுக்கவில்லை.

இதற்கிடையில் வித்யாசங்கரை சந்தித்துக் கொண்டுதான் இருந்தேன். ரேஸ்கோர்ஸ் புல்வெளியில் அமர்ந்து, பு.னி. ராஜா குரலில் வித்யாசங்கர் ஓஹோ எந்தன் பேபி பாட்டுப் பாடவா என்று பாட, நண்பர்கள் அனைவரும் கேட்டு சந்தோஷமாக அனுபவித்தோம்.

திடீரென்று ஒருநாள் வித்யாசங்கர் மீண்டும் யதார்த்தா பற்றி பேச்செடுத் தார். அப்போது அவர் மூன்று விஷயங் கள் கூறினார்.

ஒன்று : கேபி அடுத்து ஒரு நாடகம் போடுறாரு.

இரண்டு : அது ஈழப் பிரச்சனையைப் பத்தின நாடகம்.

மூன்று : ஒரு ஆடிட்டோரியத்தில பிரம்மாண்டமான நாடகமாப் போடணும் என்று சொன்னார்.

நான் சட்டென் பிரகாசமானேன். ஈகோவை உதறிவிட்டு சரி. எப்ப அவரப் போயி பாக்கலாம்? என்று கேட்டேன்.

பஸ் ஏறினோம். கேபி வீடு சென்றோம். வித்யாசங்கர் கே.பியை எனக்கு அறிமுகப்படுத்தினார் அல்லது, என்னை கே.பிக்கு அறிமுகப்படுத்தினார். (வித்யாசங்கர் இப்ப எங்க இருக்கீங்க?)

அறிமுகப்படுத்திய அக்கணமே வெகுநாள்கள் பழகியவரைப் போல், கே.பி சகஜமாகப் பேச ஆரம்பித்தார். நான் தேவையான அளவுக்கு மட்டுமே,




அல்லது அதற்கும் குறைவாகவே, பேசினேன். வெகு இயல்பான நட்புடன் உபசரித்தார். இன்று வரை அவர் அப்படித்தான். (இது மரியாதை நிமித்தமாக நான் சொல்வதல்ல என்பது கே.பியை அறிந்தவர்கள் அனைவருக்கும் தெரியும்).

அவர் சட்டென, ஜெராக்ஸ் செய்யப் பட்ட ஒரு நாடகப் பிரதியை எடுத்தார். ஒரு குறிப்பிட்ட பக்கத்தைப் புரட்டினார். என்னிடம் கொடுத்து. இத வாசிய்யா என்றார். வாசித்தேன். நல்லா வாசிக் கிறய்யா என்று பாராட்டினார். எனக்குப் புரியவில்லை. தமிழ்தான? வாசிக்கிற துல என்ன கஷ்டம் இருக்கு! என்றேன். இல்லய்யா நல்லா சரளமா வாசிக்கிறே. குரலும் நல்லா இருக்கு என்றார்.

நான் பிரதியை அவரிடம் திருப்பிக் கொடுத்தேன். இல்லய்யா. நீயே வச்சிக்க. இதான் நாம அடுத்து போடப்போற நாடகம் என்றார். அவர் உரிமையுடன் நாம என்று கூறியதைக்கூட கவனிக்காமல், நான் வித்யாசங்கரைப் பார்த்தேன்.

கேபி இந்த நாடகத்தை வித்தியாசமா வடிவமைச்சிருக்கேன் என்று ஆரம்பித்தார்.

சில நாட்களுக்கு முன் நான் ஸ்ரத்தா நாடகக் குழுவினர் அரங்கேற்றிய பாரதி எனும் சிறுவர் நாடகத்திற்கு முகநூலில் விமர்சனம் எழுதினேன். அந்நாடகம் விஜய் டெண்டுல்கர் எழுதிய ஒரு மராத்தி நாடகத்தின் தமிழ் வடிவம்.. யதார்த்தா கே பென்னேஸ்வரன் தமிழ் வடிவப்படுத்தியிருந்தார். யதார்த்தா கே பென்னேஸ்வரன் அவர்களை டெல்லியில் எல்லோரும் கேபி என்றுதான் அழைப்பார்கள். அந்த வகையில் நானும் கேபி என்றே குறிப்பிட்டிருந்தேன். அதை ஒரு நண்பர் நான் திரை இயக்குநர் அமரர் பாலச்சந்தர் அவர்களைக் குறிப்பிட்டதாக நினைத்து கமெண்ட் எழுதியிருந்தார். பின், அவருக்கு நான் தெளிவுபடுத்த வேண்டியதாயிற்று.

நான் இந்தப் பகுதியில் கேபி எனக் குறிப்பிடுவது யதார்த்தா கே பென்னேஸ் வரன் அவர்களைத்தான். எனக்கு பாலச்சந்தர் அவர்களோடு நல்ல பழக்கம் உண்டு என்றாலும் அந்தப் பழக்கம் தொலைக்காட்சித் தொடர் சம்பந்தப்பட்ட தொடர்பு மட்டுமே. பாலச்சந்தர் அவர்கள் ஒரு நாடக இயக்குநரும்கூட என்றாலும் நான் அவருடன் நாடகங்களில் இணைந்து பணியாற்றியதில்லை. மட்டுமல்ல எங்களது நாடக தளங்கள் முற்றிலும் வேறுவேறு. எனவே, இந்தப் பகுதியில் நான் கேபி என்று குறிப்பிடுவது யதார்த்தா கே பென்னேஸ்வரன் அவர்களைத்தான். அமரர் பாலச்சந்தர் அவர்களை அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சரி நிகழ்வுக்கு வருவோம்.

கேபியின் வீட்டிற்குச் செல்லும் வழியி லேயே வித்யாசங்கரிடம் கூறியிருந் தேன் எனக்கு நாடகத்தில் ஆர்வம் உண்டு என்று மட்டும் சொல்லுங்கள். நடிப்பது பற்றி எதுவும் கமிட்மெண்ட் கொடுக்க வேண்டாம் என்று.

அவரும் இவரு இளஞ்சேரன். எங்கூட வொர்க் பண்றாரு. நாடகத்துல ரொம்ப இண்ட்ரஸ்ட். உங்களப் பாக்கணும்னாரு கேபி. அதான் கூட்டு வந்தேன் என்று வெகு சின்சியராக, நான் சொன்னது போலவே, அறிமுகப்படுத்தி வைத்தார். ஆனால், கேபிக்கு அதுவே போதுமானதாக இருந்தது. உடனே, என்னை யதார்த்தாவின் ஓர் உறுப்பினனாகவே வரித்துக் கொண்டு பேச ஆரம்பித்துவிட்டார். அடுத்து நடந்தவைகளை நான் முந்தைய அத்தியாயத்திலேயே விவரித்திருக்கிறேன். என்னை வாசிக்கச் சொல்லி, நன்றாக வாசிப்பதாகப் பாராட்டி, பிரதியை என்னையே வைத்துக் கொள்ளச் சொல்லி, இந்த நாடகத்தைதான் நாம அடுத்து அரங்கேற்றப் போறோம் &. என்று அந்த நாமில் என்னையும் இணைத்துக் கொண்டு &. அடுத்தடுத்து நடந்த நிகழ்வுகளில், விரும்பியோ விரும்பாமலோ நான் யதார்த்தாவின் ஓர் அங்கமாகிவிட்டேன்.

இந்த நாடகத்தை வித்தியாசமா வடிவமைச்சிருக்கேன் என்று ஆரம்பித்தார் கேபி அதாவது, யதார்த்தா கே. பென்னேஸ்வரன்.

நாடகம் ஆரம்பிக்கிறப்ப கீழே தரைல நடக்கும். அப்புறம் நாடகத்தோட களம் கொஞ்சம் கொஞ்சமா நகர்ந்து மேடைக்குப் போயிரும். அப்புறம் நாடகம் மேடைல நடந்து முடிஞ்சிடும். என்று விளக்கினார்.

மேடை நாடகங்களை மட்டுமே அறிவினில் ஏற்றி வைத்திருந்த எனக்கு இது மிகவும் புதுமையாகத் தோன்றியது. கேபி சொல்லச் சொல்ல, அது காட்சியாக என் மனக்கண்ணில் ஓடியது. சற்று ஆர்வம் ஏற்பட்டது. எனக்குள் ஏற்பட்ட அந்த ஆர்வம் கேபிக்கு எட்டியிருக்க வேண்டும்.


இளஞ்சேரன் நாளைக்கு சாயந்திரம் வந்துருங்க. மத்த பசங்களும் வந்துருவாங்க. நாம ரீடிங் ஆரம்பிச்சிரலாம் என்று அவராகவே எனக்கும் சேர்த்து முடிவெடுத்து, instructionம் கொடுத்தார். என்னிடம் எனது விருப்பம் கேட்டிருந்தாரானால், நான் என்ன முடிவெடுத்திருப்பேன் என்று இப்போதுகூட என்னால் சொல்லமுடியவில்லை. இல்லைங்க கேபி. எனக்கு விருப்பமில்லை என்று கூறியிருக்கலாம். அல்லது, இல்லை கேபி. எனக்கு யோசிக்க டைம் வேணும். அடுத்த நாடகத்துல பாக்கலாம் என்று சொல்லியிருக்கலாம். ஆனால், அப்படி எதுவும் யோசித்து பதிலளிக்க எனக்கு இடமளிக்காமல் கேபியே முடிவெடுக்கவும், நானும் சரி என்று சொல்லிவிட்டேன்.

வித்யாசங்கரும் நானும் வெளியே வந்தோம். வித்யாசங்கர் எனது முகத்தில் பரவியோடிய யோசனையைப் படித்திருக்க வேண்டும். சேரன், உங்களுக்குப் பிடிக்கலைன்னா சொல்லிருங்க. ஒண்ணும் பிரச்சனையில்லை என்றார். எனக்கோ, நான் வாய்திறந்து ஒப்புதல் அளிக்காமலே நடிக்க ஒத்துக் கொண்டாகிவிட்டது. நாடகப் பிரதியையும் வாங்கிக் கொண்டாகிவிட்டது. இப்போது வேண்டாமென்று சொன்னால் நன்றாகவா இருக்கும்! பார்ப்போம் என்னதான் நடக்கிறதென்று! என்று மனசுக்குள் எண்ணம் ஓடிற்று. இல்லைங்க வித்யாசங்கர். நாளைக்கு நான் வர்றேன். அப்புறம் பாத்துக்கலாம் என்றேன்.

எங்கள் இருப்பிடம் வந்ததும், முதல் வேலையாக பிரதியை எடுத்தேன். அது ஜி.சங்கரப்பிள்ளையின் மலையாள நாடகத்தின் மொழிபெயர்ப்பு. மூன்று பண்டிதர்களும் மாண்டதொரு சிங்கமும். மொழிபெயர்ப்பு : பேராசிரியர் சே.ராமானுஜம். தலைப்பே எனக்கு வித்தியாசமாக இருந்தது. கொஞ்சம் இருங்கள் வித்தியாசமாக இருந்தது என்றா சொன்னேன் இல்லை. அப்போதைய மனநிலையில் எனக்கு அது ஒரு சிறுவர் கதைக்கான தலைப்பு மாதிரி இருந்தது. சிறுவயதில் படித்த அம்புலிமாமா, பொம்மைவீடு, கோகுலம், ஈசாப் நீதிக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் மற்றும் ரஷ்யமொழிச் சிறுவர் கதைகள் எல்லாம் நினைவில் வந்து போயின.

**(அடுத்தவாரம் காத்திருங்கள்)**

# எண்ணெய் அறிந்தால்........



- மதீசன் தனபாலசிங்கம்

நானும் தீவிர சினிமா ரசிகன் தான். எனக்கும் முதல் நாளில் படம் பார்க்கும் ஆசை இருக்கு தான். தியட்டருக்குள்ளே இருந்து கத்தி கூச்சல் போடுபவன் தான். ஆனால் வெறித்தனமாக ரசிப்பவனில்லை.

மற்றவர்களை வெறித்தனமாக ரசிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. புதிய திரைப்படத்தை வரவேற்க தியட்டருக்குள் வாழை மரம் கட்ட வேண்டாம் என்று சொல்லவில்லை. இரவிரவாக வெடி போட வேண்டாம் என்று சொல்லவில்லை. பனர் அடித்து கட்ட வேண்டாம் என்று சொல்லவில்லை. பால் ஊத்த வேண்டாம் என்று சொல்லவில்லை. எம் ஜி ஆர் காலத்திலிருந்து இடம்பெறும் சம்பிரதாயங்களை தடுப்பதற்கு நாங்கள் யார்? உங்களுக்குள் இருக்கும் ரசிப்புத்தன்மையை நான் பெருமளவில் மதிக்கின்றேன். ஒரு நடிகன் அல்லது கலைஞன் மீது நீங்கள் கொண்ட அளவு கடந்த அன்பை மெச்சுகின்றேன்.

ஆனால் தனிப்பட உங்களிடம் ஒன்று உரிமையாக கேட்கின்றேன். என்னை அறிந்தாலுக்கு கொடுத்த முக்கியத்துவத்தில் சிறிதளவையாவது எங்களுடைய எண்ணெய் பிரச்சினைக்கும் கொடுங்கள். என்னை அறிந்தாலை அறிந்தவர்கள் கொஞ்சம் எண்ணெய் பிரச்சினையையும் அறியுங்கள். ஒவ்வொரு தனி நபரும் இந்த எண்ணெய் பிரச்சினையில் விழிப்புணர்வு பெற வேண்டும் என்பதை விட எச்சரிக்கை பெற வேண்டும். போகின்ற போக்கை பார்த்தால் பெரும் பிரச்சினையாக இது உருவெடுக்கும் நிலை ஏற்பட்டிருகிறது.

இது தண்ணீருக்கான போராட்டம். வேற்று மனப்பாங்கை புறந்தள்ளி அனைவரும் ஒன்றிணையவேண்டிய தருணமிது. எதிர்கால சந்ததினருக்காக எமது நிலத்தடி நீர்வளத்தை பேணிப் பாதுகாத்து விட்டுச் செல்லும் பொறுப்பு நம் ஒருவருடைய பொறுப்புமே!

தாமதிக்கும் ஒவ்வொரு கணத்திலும் நமது பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு கிணறுகளும் மாசடைந்து செல்கின்றன.


விரைந்து எமது அதிமுக்கிய தேவையான நீருக்கான போராட்டத்துக்கு குரலை உயர்த்திக் கொடுப்போம். நீங்கள் நாம் அனைவரும் சேர்ந்து கொடுப்போம்..!

# மார்கழி நினைவுகள்

- பா.ரகுவரன்

**நினைவு - 1**

மார்கழி என்றால் அடைமழையுடன் கூடிய அந்தக் காலம் என்நினைவுக்குள் ஊறி வழிகிறது. 1960 களின் பிற்பகுதியில் திருவெம்பாவைக்காலத்தில் "சந்கூதிப்பண் டாரம்"-என்று சொல்லப்படும் காவியுடைதரித்த ஆசார சீலர்கள் தனியாக ஒவ்வொரு வீட்டின் முன்னால் நின்று. திருவெம்பாவை பாடல்களைப் பாடிநிற்பர். ஒருகையில்



சங்கு. இன்னொரு கையின் மணிக்கட்டில் சேமக்கலம் தொங்க விரற்பகுதி மான்கொம்புத்தடியால் சேமக் கலத்தை அடித்துநிற்கும் அருமையானதும், பக்திபூர்வ மாதுமான காட்சி நினைவுக்குவருகிறது. அம்மம்மா என்னையும் எழுப்பி படலையைத்திறந்து நிற்க 'சந்கூதிப்பண்டாரங்களும்" அருமையாக திருவெம்பாவைபாடி..:திருநீறு கொடுத்துச் செல்ல, அதை பக்தியுடன் பூசிப்பரவிநின்றகாலம் மனதுக்கு இனிமையையும், அமைதியும் கொடுத்து நின்றதை மனம் ஏக்கத்துடன் நினைவு கொள்ளுகிறது.

**நினைவு - 2**

1970களில்நான் சிறுவனாக , பின் இளைஞனாக இருந்த காலத்தில் அதிகாலையில் துயில்நீங்கி ஆசாரத் துடன் கூட்டமாக சங்கூதிகளாக பலஆண்டுகள் சென்றுள் ளேன். க.பொ.த சாதாரண தரத்தில் திருவெம்பாவைப் பாடல்கள் அனைத்தும் சமய பாடத்தில் அடக்கப்பட்டது. அவ்வேளை எல்லாப்பாடல்களும் எனக்கு மனப்பாட மாக இருந்ததால் பாடல்களின் கருத்தை பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதில் எந்தக் கஸ்டமும் இருக்கவில்லை. மாறாக திருவெம்பாவைப் பாடல்களை இலக்கியமாக இரசித்து வாசித்து அறிவதில் மகிழ்ச்சிகண்டேன். மற்ற மாணவர்களுக்கு இந்த சங்கூதிகளாகச் சென்ற - ்னுபவம் கிடைக்கவில்லை. அப்போதைய சமய ஆசிரியரால் - திருவெம்பாவையை நான் மனப்பாடமாக பாடிக்காட்டியதுக்காக நான் வெகுவாகப் பாராட்டப்பட்டேன். மார்கழி நீராடு ஏலோரெம்பாவாய்.

**நினைவு - 3**

நான் பலாலி ஆசிரியர் பயிற்ச்சிக் கலாசாலைக்கு 1988 இல் சென்றபோது. முதல் நாள் அப்போதைய உப அதிபர் யூ .றீ.நடராசா வகுப்புக்கு வந்தார். வரவேண்டிய ஆசிரிய பயிற்சியாளர்கள் அனைவரும் வந்து விட்டார்களா- என்பதை அறியும் நோக்கில் "எல்லோரும் வந்தனரோ"?--- என்று வினாவிவிட்டு---- மேற்படி" எல்லோரும் வந்தனரோ என்ற சொற்தொடர் எந்த இலக்கியத்தில் வருகிறது தெரியுமா என அடுத்த வினாவையும் தொடுத்தார். அனைவரும் மௌனித்திருந்தனர். நான் -- திருவெம்பாவையில்.... என்று பதிலளித்து கணிப்பை பெறக்கூடியதாக இருந்தது------" வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தனரோ--- போன்ற திருவெம்பாவை வரிகளையும்.. அதனைப் பாடித்திரிந்த மார்கழித் திருவெம்பாவையின் அதிகாலை வேளைகளையும் எப்படி மறப்பேன்.....?

**நினைவு - 4**

நான் பிறந்து. வளர்ந்து. 50 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருவது பருத்தித்துறை நகரில் தும்பளைக் மேற்கு கிராமத்தில் அமைந்த பிராமண வீதி என்ற தெருவிலாகும். இந்தத்தெருவில் பிராமணர்கள் அதிகம் வாழ்ந்ததால் இந்தப்பெயர் பெற்றது.

மார்கழி மாதம் பிராமணர் அதிகாலையில் துயிலெழுந்து வீடு கூட்டிக்கழுவி , பின் தோய்ந்து குளித்து. வீட்டுக்கு முன் தெருவில் கூட்டிப்பெருக்கிய இடத்தில் தண்ணீர் தெளித்து. சாணத்தால் மெழுகி. தினமும் வண்ண வண்ண கோலங்கள் போட்டு. நடுவில் சாணத்தில் பிள்ளையார் பிடித்து நுனியில் பிள்ளையாருக்கு பிடித்தமான அறுகம்புல் வைத்து பூக்களால் அலங்கரித்திருப்பார் பூக்கள் அலங்காரத்துக்கு மட்டுமன்றி பிரதானமாக வழிபாட்டு நிலையில் வைக்கப்படுவதை நான் கூறாமலே நீங்கள் அறிவீர்கள். இது மார்கழிப் பிள்ளையார் எனப்படும்

பிராமணப்பெண்களே மார்கழிப் பிள்ளையார் பிடித்து வைக்கும் செயலைப்புரிவார்கள். அந்தக் காலத்தில் பிராமண வீடுகளை கடந்து போகும் போது கூட்டிப்பெருக்கிய தெரு. நன்றாக தண்ணீர் தெளிக்கப்பட்டு. அழகிய கோலங்களுடன் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும். இன்று ஒன்றிரண்டு பிராமணர்தான் இங்கு வாழ்கின்றார்கள். மார்கழி மாதத்து பிராமண தெருவின் அழகை. தீயன வீட்டுள் வாராது என்ற நம்பிக்கையுடன் வைக்கப்பட்ட மார்கழிப்பிள்ளையாரும் போய் சோபையின்றி நிற்கிறது எங்கள் பிராமண தெரு.



**நினைவு - 5**

1972 ஆம் ஆண்டில் எனக்குப் 12 வயதிருக்கும். திருவெம்பாவை காலத்து அதிகாலையில் சங்கு. சேமக்கலம், சல்லரி. ஒலிக்க திருவெம்பாவை பாடல்கள் பாடியபடி வீதிகள் வலம் வந்து கொண்டிருக்கிறோம்.

முதலிப்பேச்சி கோயிலடியை தாண்டும்போது பொல பொல வென்றும், பொத்து பொத்தென்றும் ஏதோவெல்லாம் விழும் சத்தம் கேட்டது. ஒருவன் முதலிப்பேச்சி வெருட்டிறா ஏன்று குளறினான்.

எடுத்தமே ஓட்டம் தலைதெறிக்க. எமது பிள்ளையார் கோயிலுக்குள் செல்வரட்ணம் வாத்தியாரைக் கண்ட பின்புதான் எமது ஓட்டம் நின்றது. திருநீறுபூசிவிட்டு நாம் உள் மண்டபத்தில் குந்தி முழிசிக்கொண்டிருந்தோம்.. பூசை முடிந்து விடிந்தபின் எமது வீடுகளுக்கு ஓடினோம். விசயத்தைச் சொன்னோம்.

பெற்றோரும், உறவினரும் எம்மை ஆறுதல்படுத்தி னர். ஆராவது நேற்று மீன்சாப்பிட்டனிங்களோ....? இல்லை என்றனர் நண்பர்கள். எனக்குள் இடிவிழுந் தது. நான் மீன் சாப்பிட்டனான். ஒருவருக்கும் சொல்ல வில்லை. சற்றுநேரம் கழிந்து அம்மம்மாவின் ஆலோ சனைப்படி வீட்டில் இருந்த கற்பூரக்கட்டியை இன்னொரு நண்பரோடு முதலிப்பேச்சி கோயிலடிக்குப் போய் கொளுத் திக் கும்பிட்டு மீன் திண்டதுக்கு மன்னிப் புக்கேட்டு வந்த பின்தான் ஆறுதல் ஏற்பட்டது. ஒருசில மணித்தியாலங் கள் சென்றபிறகுதான் கசிந்தது உண்மை. எங்களை வெருட்ட சிலர் கல்...எறிந்தார்கள் என்று.

**நினைவு - 6**

எனது பகுதியில் வாழ்ந்த மக்கள் ப்லர் மார்கழி மாதம் முழுவதும் வல்லிபுரக்கோயிலுக்குச் சென்று மார்கழி நீராடுவர். இதனை "மார்கழித்ததோய்ச்ல்"- என்று கூறுவர். நானும் பலவருடங்கள் மார்கழித்தோய்ச்சலுக்கு முயன்றிருக்கிறேன். நான்கு ஐந்து நாள்கள் மட்டும்தான் முடிந்தது. பிறகு தும்மல். தடிமன். இருமல் என வந்து. முடியாமல் போய் விட்டது. எல்லாவற்றுக்கும் ஒரு யோகம் வேண்டும்.

இறைவனை வழிபடக்கூட இறையருள் வேண்டும் என்பர்

"அவனருளாலே அவன் தாள் வணங்கி......"

காலையில் மாயவனிடம் சென்று மார்கழி நீராடலில் ஒரு சுகம் உள்ளது. அனுபவித்துப்பாருங்கள் தெரியும். மார்கழி நீராடு ஏலோரெம் பாவாய்.

(மேலும் நினைக்கப்படும் )

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்



# உங்களுக்கான வாழ்க்கைத் துணைவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்

'உங்களுக்கான வாழ்க்கைத் துணை வர் எப்படியானவராக இருக்க வேண்டும்.' இந்தக் கேள்வியை ஒரு பையனிடம் கேட்டால் விடை என்னவாக இருக்கும்.

**இன்றைய நிலை**

பெரும்பாலனவர்களிலிருந்து பெரு மூச்சுத்தான் விடையாகக் கிடைக்கும். குடைந்து குடைந்து கேட்டால் ஒலை பொருந்த வேணும், சீதனங்கள் சரிவர வேணும். பெண் பிள்ளையும் லட்சணமாக இருக்க வேணும்'என்ற விடை கிடைக்கலாம்.

பெண் பிள்ளைகளிடம் கேட்டால், அப்பா அம்மா சொல்லுறதைத்தானே கேட்க வேண்டும் என்பார்கள்.

மறுதலையாக பதின்மங்களிலேயே கண்டதும் காதல் ஏற்படுகிறது. பருவக் கிளர்ச்சிகள் சிந்தையில் முந்துகின்றன. பாலியல் கிளர்ச்சியை வாழ்க்கைத் துணை தேடுவதிலிருந்து பிரித்தறிந்து புரிந்து கொள்ளாத வயதில் கல்யாணம் தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா?.. என்று சிந்திப்பது மறுபுறம் நடக்கின்றன.

**ஒலைப் பொருத்தம் அறிவியலுக்கு ஒவ்வாதது**

காதல் திருமணங்கள் அதிகமாகிவிட்ட காலகட்டம் இது. இருந்தபோதும், சாத்திர மும், சாதி, சமூக, பொருளாதார அம்சங் களும்தான் திருமணப் பொருத்தத்தின் மிகப் பெரிய அம்சமாக எமது சமூகத்தி லிருப்பதை கவலையோடு ஏற்க வேண்டியிருக்கிறது.

ஆனால் அவ்வாறு மந்தை ஆட்டு மனப்பான்மையில் தொடர்ந்து இருப்பது சமூக முன்னேற்றதிற்கோ தனிப்பட்ட ரீதியான நிறைவான வாழ்விற்கோ பொருத்தமானதாகத் தெரியவில்லை.

தேர்ந்தெடுப்பதில் உங்கள் பங்களிப்பு முக்கியமானதாக இருக்க வேண்டும். ஆனால் அது வெறுமனே உணர்வு பூர்வமானதாக இல்லாமல் அறிவு பூர்வமாகவும் இருக்க வேண்டும்.

**பேசுங்கள் பழகுங்கள் அவதானியுங்கள்**

உங்களுக்கான துணைவரைத் தேடு வதின் முதல் அம்சம் அவருடன் பேசுவது தான். இதுவே பரஸ்பர புரிதலுக்கான முதற்படி. பேசுவது மட்டுமின்றி சற்றுப் பழகினால் மேலும் நல்லது. தெளிவாக வும் திறந்த மனத்துடனும் பேசுங்கள்.

பேசுவதற்கு மேலாக அவனையோ அவளையோ நன்கு அவதானியுங்கள். மகிழ்ச்சியானவனா, சிடுமூஞ்சியா, சந் தேகப் பேர்வழியா, சக்சமாகப் பழகக் கூடியவரா, தெளிவாகத் தனது எண் ணங்களைப் பகிர்ந்து கொள்பவரா அல்லது அமுசடக்கியா போன்றவற்றை அவதானியுங்கள். அந்தக் குணாதிசயங் கள் உங்களது இயல்புகளுடன் இசைந்து போகக் கூடியவையா என்பதை அனு மானித்துக் கொள்ளுங்கள்.

**கலந்து பேசுவாரா?**

கலந்து பேசக் கூடியவராக இருப்பது அவசியம். உங்கள் இருவரிடையோ அல்லது குடும்பத்துக்குப் பொதுவானதா கவோ ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் அது பற்றிக் கலந்துரையாடி முடிவு எடுக்கக் கூடியவராக இருப்பது அவசியம். ஒற்றைப் போக்கில் தானே திடீர் முடிவுகள் எடுப்பவராயின் பின்னர் பல பிரச்சினைகள் தோன்றலாம்.

அதே போல உங்களுக்கு ஏதாவது தனிப்பட்ட பிரச்சினை சஞ்சலம் போன் றவை ஏற்படுமாயின் அவற்றுக்குக் காது கொடுத்துக் கேட்பவராக இருக்க வேண்டும். துயர் மேவி கண்ணீர் சிந்தும்போது தோள் கொடுத்து ஆதரவு அளிப்பவராக இருக்க வேண்டும்.

**அன்பு ஆதரவு விட்டுக் கொடுப்பு**

மனதில் அன்பும் ஆதரவும் நிறைந்த வரா என்பதைக் கண்டறிய முயலுங்கள். அவரது குடும்பச் சூழல் எவ்வாறானது. பெற்றோர் மற்றும் சகோதரங்களுடன் சுமூகமான உறவு இருக்கிறதா, விட்டுக் கொடுப்புடன் பழகக் கூடிய தன்மையுள்ள குடும்பச் சூலிலிருந்து வந்தவரா போன்ற வற்றை கதையோடு கதையாகத் தெரிந்து கொள்ளுங்கள். கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை மறைந்து போய்விட்ட போதும் குடும்ப மற்றும் உறவினர்களது தொடர்புகளும் தலையீடுகளும் குறைந்துவிடாத எமது சூழலில் குடும்பப் பின்னணி முக்கியமானது.

**கருத்து ஒருமையும் புரிந்துணர்வும்**

சில அடிப்படையான விடயங்களில் ஒத்த கருத்துள்ளவர்களாக இருப்பது விரும்பத்தக்கது.

குழந்தைகள் விடயம் முக்கியமானது. குழந்தைகள் வேண்டுமா, எவ்வளவு காலத் தின் பின் வேண்டும் போன்றவற் றில் ஒரளவேனும் புரிந்துணர்வு வேண்டும்.

அதேபோல மத நம்பிக்கைகள், மொழி, இனம், சாத்திர சம்பிரதாய பழக்க வழக்கங்களில் கடுமையான பற்றுக் கொண்டவராக நீங்களோ அவரோ இருந்தால் அதில் நிச்சயம் ஒருமைப்பாடு வேண்டும். இல்லையேல் ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்பது போல, மண முடித்த புதிதில் இல்லாவிட்டாலும் பிற்பாடு முரண்பாடுகள் தோன்றவே செய்யும்.

இருந்தபோதும் உங்கள் இருவரிடை யேயும் சிற்சில வேறுபாடுகளும் இருப் பதும் வாழ்வைச் சுவாரஷியமாக்கலாம். உணவு உடை நிறம் போன்ற பல சாதாரண விடயங்களில் விருப்பு வேறுபாடுகள் இருப்பதானது விட்டுக் கொடுப்பு மனப்பான்மையை வளர்க்க உதவும். அத்தோடு தினமும் விழிந்தால் பொழுதுபட்டால் வாழ்க்கை ஒரே விதமாக அமைந்து சலிப்பு அடையாமல் இருப்பதற்கும் உதவும்.

**நகைச்சுவை உணர்வு**

நகைச்சுவை உணர்வு உள்ளவர் விரும்பத்தக்கது. வாழ்க்கைப் பயணத் தின் தடங்கல்களையும் சலிப்புகளையும் சுலபமாகத் தாண்ட வல்ல வலுவானது நகைச்சுவைக்கு உண்டு. தமது வாழ்க்கையைத் தாங்களே கிண்டலாக விமர்சித்துச் சிரிப்பவர்கள் வாழ்வில் கவலையே அண்டாது. தான் மட்டும் சிரிக்காமல் உங்களையும் சிரிக்க வைக்கக் கூடியவராயின் வாழ்க்கை ஓடம் சிலிர்ப்புடன் மிதந்தோடும்.

சொற்களால் மகிழ்வதும் மகிழ்விப் பதும் நல்லதுதான். ஆயினும் ஸ்பரி சமும் தொடுகையும் ஆதரவான வருட லும், தோளில் முகம் புதைத்தலும் பலருக்கு தங்கள் மீதான மற்றவரது அன்பை உணர்த்துவதாகவும், தங் களின் அன்பை மற்றவருக்கு வெளிப் படுத்துவதாகவும் உணர்வர். மாறாக சிலர் ஒருவர் மீது மற்றவர் முட்டுவதே வெட்கக் கேடான செயல்பாடாக எண்ணுவர். நீங்கள் எந்த ரகம். உங்களுக்கு ஏற்றவரைத் தேர்ந்தெடுங்கள்.

புகைப்பவரை அறவே ஒதுக்குங்கள். புகைப்பவராயின் வாழ்க்கைப் பயணத் தில் அரை வழியில் உங்களை விட்டு விட்டு நோயோடும் மரணத்தோடும் போராடி அவர் விடைபெற நேரலாம் என்பதை மறவாதீர்கள்.

**கல்விப் பொருத்தம்**

சோதிப் பொருத்தத்துக்கு கல்வித் தகமை மிக முக்கியமானது அல்ல. இருந்தபோதும் அது உங்களிடையே போட்டி பொறாமைகளுக்கு இடம் அளிப்பதாக இருக்கக் கூடாது. மிக உயர்ந்த கல்வித் தகைமையுடையவர் மிகக் குறைவான கல்வி அறிவுள்ளவரை மணக்கும்போது தான் உயர்ந்தவர் மற்றவர் ஒன்றும் தெரியாத மக்கு என்ற மேலாண்மை உணர்வு ஏற்பட வாய்ப்புண்டு. இது நாளடைவில் பல மனக்கசப்புகளை வளர்க்கும்.

**தொழில் ரீதியாக**

அதேபோல ஒரே விதமான வேலையும் சிலரிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தலாம். இருந்தபோதும் புரிந்துணர்வுள்ள சோடி களிடையே ஒரே விதமான கல்வியும், ஒரே விதமான தொழிலும், ஆரோக்கிய மான கலந்துரையாடல்கள் ஊடாக இருவருக்குமே நன்மை பயக்கக் கூடும். தொழில் ரீதியான சந்தேகங்களைத் தீர்க்கவும் பரஸ்பரம் உதவி செய்து மேம்பாடடைய கைகொடுக்கலாம் என்பதையும் மறுப்பதற்கில்லை..

ஒரே இடத்தில் தொழில் புரிபவரைத் தேர்ந்தெடுப்பது உகந்ததல்ல. அதுவும் ஒருவர் அதிகாரி தரத்திலும் மற்றவர் பல ஊழியர்களில் ஒருவராகவும் தொழில் புரியும்போது மண உறவு ஏற்படுமேயா யின் சக ஊழியர்களிடையே தவறான அபிப்பிராயங்களுக்கு வித்திடும். அவர் மேல் அதிக கரிசனை காட்டுவதாக அல்லது அதீத சலுகைகள் கொடுப்பதான குற்றச்சாட்டுக்கள் ஏற்படும்.

புதிய ஒருவரைப் புரிந்து கொள்வதற்கு ஓரிரு சந்திப்புகள் போதாது. ஒரு சில மாதங்களாவது பழகிய பின்னர் தான் அவர் எப்படிப்பட்டவர் என்று கணிக்க முடியும். அதன் பின்னரே அந்த நட்பு திருமணம் மட்டும் போகலாமா எனத் தீர்மானிக்க முடியும்.

ஆனால் எமது சமூகச் சூழல் இன்ன மும் அந்தளவு பரந்த மனப்பான்மையு டன் இல்லை என்பதையும் புரிந்து கொள்ளவே வேண்டும். ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தாலே முடிச்சுப் போட்டு பேசுவார்கள்.

தரகர்களும் தாய் தந்தையரும் மட்டுமே பேசி முடிவெடுக்கும் நிலைமைதான் பெரும்பாலும் இருக்கிறது. கிராமப் புறங்களில் கடுமையான கட்டுப்பாடுகள் உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை.

**கால அவகாசம்**


எவ்வாறாயினும் யாராவது உடனடியாக திருமணத்தை முடிக்க வேண்டும் என்று சொன்னால் சற்று அவதானமாக இருங்கள். கபடமான உள் நோக்கம் இருக்கக் கூடும். சுற்றுக் கால அவகாசம் கேட்டு அவதானித்து முடிவுக்கு வருவதே நல்லது.

உங்கள் பார்வைக்கு எல்லாம் சரிபோலத் தோன்றினாலும் பிற்பாடு புதிய தகவல்கள் வெளிப்படலாம். எனவே திடீர் முடிவு எடுக்காதீர்கள்.

அப்படியல்லாமல் நீங்கள் தேர்ந் தெடுத்தவர் உண்மையிலேயே பொருத்தமானவராக இருந்தாலும் கூட, கால ஓட்டத்தில் ஏதாவது புதிய பிரச்சினைகள் தோன்றலாம். ஆனால் அது எதிர்பாராதது. அந்த நேரத்தில் ஏமாற்றிப் போட்டாய் என்று குற்றம் சாட்டாமல் புரிந்துணர்வுடன் சிக்கலைத் தீர்க்க வேண்டும்.

**மருத்துவ ரீதியாக**

மருத்துவ ரீதியாக மிக நெருங்கிய சொந்தத்தில் மணம் முடிப்பது நல்ல தல்ல. பரம்பரை நோய்கள் வருவதற் கான சாத்தியங்கள் அதிகமாகும். மச்சான் மச்சாள் திருமணங்கள் இங்கு பரவலாக இருந்தாலும் இப்பொழுது குறைந்து வருகின்றன. நெருங்கிய உறவினர் திருமணத்தால் பல விதமான பரம்பரை அலகு தொடர்பான நோய்கள் வரலாம். பிறவியிலேயே வரும் இருதய நோய்கள், அங்கக் குறைபாடுகள், மூளை மற்றும் நரம்பியல் நோய்களே அத்தகையவை.


HNB அட்டையுடன் உடன்
புதிய வங்கியியல் உலகம்
HNB


ஐரோப்பாவில் மருத்துவ கல்வி
UK | Europe | Canada | USA
மொத்தச் செலவு ரூபா.3.6 மில்லியனிலிருந்து
100% வீசா உத்தரவாதம்.
வீசா நேர் முகப் பரீட்சை கிடையாது.
வங்கி மீத கணக்கு தேவையில்லை.
வருடாந்த பல்கலைக்கழக கட்டணம் 4300$ மட்டுமே.
பட்டப் படிப்பை முடித்தபின் ஐரோப்பிய நாடுகள், கனடா, USA, UK, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பு.
இன்று விண்ணப்பித்து 20 நாட்களில் பயணியுங்கள்.
Call 776 04 41 99 or 777 66 22 33
No. 111 1/3, Maya Avenue, Colombo 06. www.pathestudy.org
PATHE STUDY MEDICINE


CIMA
Chartered Institute of Management Accountants
வகுப்பறையில் இருந்து பணிப்பாளர் சந்திப்பறை வரை துரிதமாக.
சத்துரிக்கா குணரட்ன, 20 வயது
நிதியியல் பயிற்சி பெறுபவர்
CIMA தேர்ச்சி பெற்றவர்
அனுஜ பீரிஸ், 19 வயது
சிரேஷ்ட கணக்குப் பரிசோதகர்
CIMA தேர்ச்சி பெற்றவர்
அவிஷ்கா பீரிஸ், 20 வயது
நிதி ஆய்வாளர்
CIMA தேர்ச்சி பெற்றவர்
எமக்கு இரட்டிப்பு உயர்வு கிடைத்தது!
"க.பொ.த. சா/த முடிந்ததும் நாம் தொழில் சார் கல்வி ஒன்றினை கற்றிட எண்ணினோம்.
உலகெங்கும் பிரபலமான CIMA வில் இணைந்து கொண்டோம்.
இன்று எமது நண்பர்கள் இன்னும் கல்வி கற்கிறார்கள், ஆனால் நாம் சன்மானம் பெறக்கூடிய தொழில் வாய்ப்புகளை நோக்கி மெதுவாக அடி வைத்து நகர்கிறோம்.
க.பொ.த. சா/த முடிந்ததும் CIMA கற்பது இரட்டிப்பு உயர்வு கிடைத்தது போல.
நீங்கள் நேரத்தையும் மீதப்படுத்திக்கொண்டு துரிதமாக முன்னேறிச் செல்வீர்கள்."
எனது ஆசை ► CIMA ► எனது தொழில்
CIMA - புதிய தலைமுறை தொழில்சார் வியாபார கல்வித் தகைமை.
CIMA கொழும்பு T. 2503880 E. colombo@cimaglobal.com
CIMA கண்டி T. 081 7393910, 2227883 E. kandy@cimaglobal.com
www.facebook.com/CIMASriLanka
Follow@CIMASriLanka
CGMA

இக்காலத்து குடும்ப வாகனம்

RE

# பஜாஜ் RE

முச்சக்கர வண்டியையே
தேர்ந்தெடுக்க வேண்டியது

# ஏன்?

| மிகவும் சிறப்பான | மிகவும் உயர்வான | மிகவும் குறைவான |
|---|---|---|
| ஆசனம் | எரிபொருள் சிக்கனம் | பராமரிப்பு |
| செயற்பாடு | சேமிப்பு | சத்தம் |
| விற்பனை வலையமைப்பு | பாவனை காலம் | உதிரிப்பாக விலை |
| சேவை வலையமைப்பு | மீள் விற்பனை விலை | முற்கட்டணம் |
| | நம்பிக்கை | |



35 வருட முன்னேற்றம்

மூன்று பரம்பரைகளாக, அவர்களின் உணர்வுகள் எண்ணங்களை புரிந்ததுடன்,
அவர்களுக்கு நன்மையளித்து மேலும் முன்னோக்கி...


மேலதிக தகவல்களுக்கு அருகே உள்ள பிரதேச அலுவலகமொன்றினை நாடுங்கள்.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02. 011-4700600 011-4700677
துரித அழைப்பு 0772-981050, 0772-981051, 0773-599977
info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk



241வது மைல்கல



## சங்கானை

பல வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் இருந்த ஒரு சிறிய கிராமம் எப்போதும் பரபரப்பாக இயங்கும் சந்தை அமைப்பினைக் கொண்டிருந்தது எனவும், அங்கு வந்த இந்திய வியாபாரிகள் பாரிய அளவிலான சங்குகளையும் யானைகளையும் பரிமாறியதாகவும், இதன் காரணமாகவே பிற்காலத்தில் சங்கு, யானை ஆகிய இரண்டு சொற்களின் இணைவாக "சங்கானை" என இவ்விடம் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. இங்குள்ள பாரம்பரிய சந்தைத் தொகுதியானது சங்கு மற்றும் யானைப் பரிமாற்றத்திற்கு மிகவும் பிரசித்தி பெற்ற இடமாக முன் னைய காலத்தில் திகழ்ந்துள்ளது.

தற்போது சங்கானை துரிதமாக அபிவிருத்தி அடைந்து வரும் நகரமாகும். இங்கு வாழும் மக்களுக்கு நிதி ஸ்திரத்தன்மையுடைய மிகச்சிறந்த வங்கிச் சேவையினை வழங்கும் நோக்குடன், உலகின் சிறந்த 1000 வங்கிகளின் வரிசையில் தொடர்ந்து நான்கு வருடங்களாக இடம் பிடித்த இலங்கையின் ஒரே வங்கியான கொமர்ஷல் வங்கி, இன்று காலை 9.45 மணியளவில் கூடும் சுபவேளையில் இல.146A, பொன்னாலை வீதி, சங்கானையில் புதிய வங்கிக் கிளை திறந்து வைக்கப்படுகிறது.

தொலைபேசி : 021 2251202-3

COMMERCIAL BANK



# Panasonic




உங்கள் இரவுகள்
ஒளிமயமாக
பெனசொனிக் CFL
மின்குமிழ்கள்

ஒரே CFL மின்குமிழ் 3 வருட உத்தரவாதத்துடன்

பெனசொனிக் CFL மின்குமிழ்கள்

சொப்ட்லொஜிக் காட்சியறைகள் மற்றும் நாடு பூராகவும் உள்ள
சில்லறை வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதி விபரங்களுக்கு அழையுங்கள் 0777 345 760 | 0773 850 481 | 0777 328 565

Hotline 011 5 705 705

softlogic